
# மனுக்குலத்தின் மீட்பர்



1988

# மனுக்குலத்தின் மீட்பர்

வெளியீடு :

யாழ். கத்தோலிக்க இலக்கியக் கழகம்

அச்சிடலாம்.

✠ வ. தியோகுப்பிள்ளை
யாழ். மறைவட்ட ஆயர்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்
20-06-1988

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | | I |
| 1-ம் பாகம் : | மனுக்குலத்தின் மீட்பர்பற்றிய முன்னறிவிப்புக்கள் ... ... | 1 |
| 2-ம் பாகம் : | இயேசுவின் வாழ்வும், பணியும் | 19 |
| 3-ம் பாகம் : | இயேசுவின் வாழ்வு, பணி, மரணம் ஆகியவைபற்றிய விளக்கம் ... | 130 |

# முன்னுரை

மனுக்குலத்தின் மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றையும், அவரது திருப்பணியையும் அறிந்துகொள்வதற்கு மத்தேயு, மார்க்கு. லூக்காஸ், அருளப்பர் ஆகியோர் எழுதிய நான்கு நற்செய்தி நூல்கள் இன்றியமையாத அடிப்படை நூல்களாகும். இந்நான்கு நூல்களும் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தியை வெவ்வேறு கோணங்களிலிருந்து எடுத்துரைக்கின்றன. இயேசுநாதரின் வாழ்க்கைவரலாறு, திருப்பணி, பாடுகள், மரணம், உத்தானம் ஆகியவற்றை புனித லூக்காஸ் மற்றும் மூன்று நற்செய்தி எழுத்தாளர்களைப் பார்க்க கூடிய விபரங்களுடனும் சிறந்த ஒழுங்குமுறையுடனும் வர்ணித்துள்ளனர்.

இயேசு மனுக்குலத்தின் மீட்பர் என்பதை தெளிவாக அறிந்து விசுவசிப்பதற்கு. புனித லூக்காஸ் எழுதிய நற்செய்தி நூலை மட்டும் படித்தல் போதாது. வரப்போகும் மனுக்குலத்தின் மீட்பர்பற்றி பழைய உடன்படிக்கைக் காலத்தில் இறைவாக்கினர் வழியாக இறைவன் முன்னதாகவே வெளிப்படுத்திய அறிவித்தல்களையும் அறியவேண்டும். இயேசு மரித்து, உயிர்த்து, பரலோகத்திற்கு எழுந்தருளிய பின் அப்போஸ்தலர்கள் அவருடைய வாழ்க்கை, பணி, பாடுகள், மரணம், உத்தானம் ஆகியவை பற்றி அளித்த விளக்க உரைகளையும் அறிதல் அவசியமாகும்.

ஆகவே, இந்நூல் மூன்று பாகங்களைக் கொண்டதாக அமைகின்றது: 1-ம் பாகத்தில் பழைய உடன்படிக்கைக் காலத்தில் மீட்பர் பற்றி இறைவன் அளித்த வாக்குறுதிகள் தரப்படுகின்றன; 2-ம் பாகத்தில் புனித லூக்காஸ் மனுக்குலத்தின் மீட்பர் பற்றி அளித்த விபரங்கள் தரப்படுகின்றன; 3-ம் பாகத்தில் அப்போஸ்தலர்கள் இயேசுவின் வாழ்க்கை, பணி, மரணம், உத்தானம் ஆகியவைபற்றி அளித்த விளக்க உரைகள் தரப்படுகின்றன.

கிறிஸ்தவ மக்கள் மனுக்குலத்தின் மீட்பராகிய இயேசு பெருமானை நன்றாக அறிந்து அவரது அன்பில் உறுதிபெற்று வளரும் பொருட்டு இந்நூலை வெளியிடுகின்றோம்.

யாழ். கத்தோலிக்க இலக்கிய கழகம்

## 1-ம் பாகம்

# மனுக்குலத்தின் மீட்பர் பற்றிய முன்னறிவிப்புக்கள்

## திருச்சபையின் படிப்பினை

"ஆதாமில் மனிதர் எல்லோரும் பாவம் செய்தனர் என்று விசுவசிக்கிறோம். இதன் கருத்து யாதெனில்: நம் முதற் பெற்றோர் நீதியிலும் பரிசுத்ததனத்திலும் ஏற்படுத்தப்பட்டபடியால், மனித இயல்பு துன்பத்தையும் சாவையும் அறியாமல் இருந்தது. ஆனால், ஆதாம் செய்த முதற் பாவத்தினால் எல்லா மனிதருக்கும் உரிய மனித இயல்பு முன்னிருந்த நிலையிலிருந்து அப்பாவத்தின் தீயவிளைவுகளை அனுபவிக்கும் நிலைக்கு வீழ்ந்துவிட்டது. இவ்வாறு அது அருள் உயிரை இழந்து தனது இயல்பான ஆற்றல்களில் பாதிக்கப்பட்டு, சாவுக்கு அடிமைப்பட்டு, கீழ் நிலையை அடைந்தது. இத்தகைய இயல்பே எல்லா மனிதருக்கும் கிட்டுகின்றது. இக்கருத்தின்படியே எல்லா மனிதரும் பாவத்தில் பிறக்கின்றனர். ஆகவே, ஜென்மபாவம் மனித இயல்புக்கு கண்டு பாவிப்பினால் அன்று, சந்தான விருத்தியினால் வருகின்றது என்றும், ஆதலால் அது ஒவ்வொருவருக்கும் உரியதென்றும் திரிந்தெந்தின் பொதுச் சங்கத்துடன் விசுவசிக்கின்றோம்" (6-ம் சின்னப்பரின் விசுவாச அறிக்கை)

1. முதற்பெற்றோரின் வீழ்ச்சியும், வரப்போகும் மீட்பரைப் பற்றிய கடவுளின் வாக்குறுதியும்.

ஆதியாகமம் 3 : 1 - 19

1 ஆண்டவராகிய கடவுளால் படைக்கப்பட்ட எல்லாப்
பிராணிகளிலும் பாம்பு அதிகத் தந்திரமுள்ளதாய்
இருந்தது. அது பெண்ணை நோக்கி: இன்பவனத்திலுள்ள
எல்லா மரங்களின் கனிகளையும் உண்ண வேண்டா
மென்று உங்களைக் கடவுள் ஏன் தடுத்தார் என்று
2 கேட்டது. பெண்: இன்ப வனத்திலுள்ள மரங்களின்
3 கனிகளை நாங்கள் உண்டே வருகிறோம்; ஆனால், இன்ப
வனத்தின் நடுவிலிருக்கிற மரத்தின் கனியைத் தின்ன
வேண்டாம், தொடவும் வேண்டாமென்று கடவுள்
எங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார்: தின்றால் சாவோம்
4 என்றாள். பாம்பு பெண்ணை நோக்கி: நீங்கள் உண்
5 மையில் சாகவே மாட்டீர்கள்; நீங்கள் எப்போது
அக்கனியைத் தின்பீர்களோ அந்நேரமே உங்கள் கண்
கள் திறக்கப்படும். அதனால் நீங்கள் தெய்வங்கள்
போல் ஆகி நன்மையும் தீமையும் அறிவீர்கள்; இது
கடவுளுக்குத் தெரியும் என்று சொல்லிற்று.
6 அப்பொழுது பெண் அந்த மரத்தின் கனி தின்பதற்கு
நல்லது, பார்வைக்கு இனியது, அறிவைப் பெறுவதற்கு
விரும்பத் தக்கது எனக் கண்டு, அதைப் பறித்துத்
தானும் உண்டாள்; தன் கணவனுக்கும் கொடுத்
தாள். அவனும் அதைத் தின்றான்.
7 உடனே அவ்விருவருடைய கண்களும் திறக்கப்பட்டன.
தாங்கள் நிருவாணமாய் இருந்ததை அவர்கள் கண்டு,
அத்தி இலைகளைத் தைத்து இடுப்பில் உடுத்திக் கொண்
8 டார்கள். மேலும், மாலையில் தென்றல் வீசும் வேளை
யிலே இன்ப வனத்தில் உலாவிக்கொண்டிருந்த ஆண்
டவராகிய கடவுளின் குரலொலியைக் கேட்டார்கள்.
கேட்டதும், ஆதாமும் அவன் மனைவியும் ஆண்டவ

ராகிய கடவுளின் முன்னிலையில் நில்லாதவாறு இன்ப
வனத்து மரங்களினிடையே ஒளிந்துகொண்டார்கள்.
9 அப்போது ஆண்டவராகிய கடவுள் ஆதாமைக் கூப்
10 பிட்டு: எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்:
நான் இன்பவனத்தில் உமது குரலொலியைக் கேட்
டேன். நிருவாணியாய் இருந்ததால் பயந்து
ஒளிந்து கொண்டேன் என்றான்.

11 கடவுள் : நீ நிருவாணியாய் இருப்பதாக உனக்குச்
சொன்னவன் யார்? உண்ண வேண்டாமென்று நாம்
விலக்கியிருந்த கனியைத் தின்றாயோ என்று வினவினார்.
12 ஆதாம்: எனக்குத் துணைவியாய் இருக்கும்படி நீர்
எனக்குத் தந்தருளிய அந்தப் பெண்ணே அம்மரத்தின்
கனியை எனக்குக் கொடுத்தாள்; நானும் தின்றேன்
என்றான்.

13 அப்போது ஆண்டவராகிய கடவுள் பெண்ணை நோக்கி:
நீ ஏன் அவ்வாறு செய்தாய் என்று கேட்டார். அவள்:
14 பாம்பு என்னை வஞ்சித்ததால் தின்றுவிட்டேன் என்று
பதில் சொன்னாள். அப்பொழுது ஆண்டவராகிய
கடவுள் பாம்பைப் பார்த்து: நீ அவ்வாறு செய்த
தால் பூமியிலுள்ள எல்லாப் பிராணிகளிலும் சபிக்கப்
பட்டதாய், உன் வயிற்றினால் ஊர்ந்து, உயிரோடிருக்
15 கும் வரை மண்ணைத் தின்பாய்; உனக்கும் பெண்
ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்குமிடையே
பகையை உண்டாக்குவோம்; அவன் உன் தலையை
நசுக்குவான்; நீயோ அவனுடைய குதிக்காலைத் தீண்ட
16 முயலுவாய் என்றார். அவர் பெண்ணை நோக்கி:
துன்பங்களையும் கருப்ப வேதனைகளையும் உனக்கு
அதிகப்படுத்துவோம்; வேதனையோடு நீ பிள்ளைகளைப்
பெறுவாய்; கணவனின் அதிகாரத்துக்கு நீ அடங்கி
இருப்பாய்; அவன் உன்னை ஆண்டுகொள்வான்
என்றார்.

## 2. நோவாவுடன் கடவுள் செய்த உடன்படிக்கை

ஆதியாகமம் 9 : 8 - 17

8 மேலும் கடவுள் நோவாவையும் அவர் புதல்வர்களை
9 யும் நோக்கி: இதோ, நாம் உங்களோடும் உங்களுக்
10 குப் பின்வரும் உங்கள் சந்ததியாரோடும், பெட்டகத்தி
லிருந்து வெளியேறி உங்கள் அண்டையிலிருக்கிற
பறவைகள், வீட்டு மிருகங்கள், மற்றும் பூமியிலுள்ள
காட்டு விலங்குகள் முதலிய எல்லா உயிரினங்களோ
11 டும் நமது உடன்படிக்கையை நிறுவுவோம். உங்க
ளோடு நாம் உடன்படிக்கை செய்வோம். ஆதலால்,
இனி மாமிசமெல்லாம் வெள்ளப் பெருக்குகளால் ஒரு
போதும் அழிக்கப்படா. உண்மையில், பூமியைப்
12 பாழாக்க இனி வெள்ளப் பெருக்கு வராது என்றருளி
னார். மேலும் கடவுள்: நமக்கும் உங்களுக்கும், உங்களுட
னிருக்கும் எல்லா உயிரினங்களுக்கு மிடையே நித்திய
தலைமுறைகளுக்கென்று நாம் செய்துகொள்ளும் உடன்
13 படிக்கையின் அடையாளமாவது: நமது வில்லை மேகங்
களிலே வைப்போம். அதுவே நமக்கும் உலகத்துக்கு
மிடையேயுள்ள உடன்படிக்கையின் அடையாளமாகும்.
14 ஆதலால், நாம் வானத்தை மேகங்களால் மறைத்
திருக்கும் போது நம்முடைய வில் அங்கு காணப்படும்.
15 அப்போது உங்களோடும் எல்லா உயிரினங்களோடும்
(செய்து கொண்ட) நமது உடன்படிக்கையை நினைவு
கூருவோமாகையால், இனி எல்லா உயிர்களையும் அழிக்
16 கும் வெள்ளப் பெருக்கு இராது. வில் மேகங்களில்
தோன்றும். அதைக் கண்டு, கடவுளாகிய நமக்கும்,
உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்குமிடையே ஏற்
பட்ட நித்திய உடன்படிக்கையை நினைத்தருள்வோம்
17 (என்றார்). கடைசியாகக் கடவுள் நோவாவை நோக்கி:
நமக்கும் உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்திற்குமிடையே
நாம் செய்துள்ள உடன்படிக்கையின் அடையாளம்
அதுவேயாம் என்று சொல்லி முடித்தார்.

**3. யெஸ்சேயின் கோத்திரத்தில் மீட்பர் தோன்றுவார்**

இசையாஸ் ஆகமம் 11 : 1-5

1 "யெஸ்சேயின் தண்டிலிருந்து ஓர் தளிர் கிளம்பும்.
அவன் வேரிலிருந்து ஒரு கிளை தோன்றும்:
2 ஆண்டவருடைய ஆவி அவர்மேல் தங்கும்,
ஞானமும் மெய்யுணர்வும் தரும் ஆவி,
ஆலோசனையும் வல்லமையும் தரும் ஆவி,
அறிவும் ஆண்டவரைப் பற்றிய அச்சமும் தரும் ஆவி,
இந்த ஆவி அவர்மேல் தங்கும்.
3 ஆண்டவருக்கு அஞ்சுவதில் அவர் மகிழ்ந்திருப்பார்.
அவர் தம் கண்ணால் கண்டதைக் கொண்டு மட்டும் தீர்ப்பிடமாட்டார்;
காதால் கேட்டதைக் கொண்டு மட்டும் தீர்ப்புச் செய்ய மாட்டார்.
4 ஆனால், நீதி பிறழாமல் எளியோரைத் தீர்ப்பிடுவார்.
நாட்டின் ஏழைகளுக்கு நடுநிலையோடு தீர்ப்புச் சொல்வார்.
தமது வாய்மொழியால் உலகத்தைச் சாடுவார்,
தமது மூச்சினால் தீயோரை அழிப்பார்.
5 நீதி அவருக்கு அரைக் கச்சை
உண்மை அவருக்கு இடைக் கச்சை.

**4. ஈசாக்கைப் பலியிடும்படி கடவுள் ஆபிரகாமுக்கு கட்டளையிட்டதும் அவர் சந்ததியையும் எல்லா இனத்தாரையும் ஆசிர்வதித்ததும்.**

ஆதியாகமம் 22 : 1 - 18

1 இவையெல்லாம் நிகழ்ந்த பின் கடவுள் ஆபிரகாமைச்
சோதிப்பதற்காக, அவரை: ஆபிரகாம்! ஆபிரகாம்!

என்று கூப்பிட்டார். அவர் அடியேன் தயார் என்று
2 கூற, அவர்: நீ அதிகம் அன்பு செய்யும் உன் ஒரே
புதல்வனான ஈசாக்கைத் தரிசனைப்பூமிக்குக் கூட்டிக்
கொண்டு போய், அங்கே நாம் உனக்குக் காட்டும்
ஒரு மலையின்மீது அவனைத் தகனப்பலியாக ஒப்புக்
கொடுப்பாய் என்று மொழிந்தருளினார்.

3 அவ்வாறே ஆபிரகாம் இரவில் எழுந்து தமது கழு
தைக்குச் சேணம் போட்டு, தம்மோடு இரண்டு ஊழி
யரையும் தம் மகன் ஈசாக்கையும் அழைத்துக்கொண்டு
போய்த் தகனப் பலிக்கு வேண்டிய விறகுக்கட்டை
களை வெட்டின பின் கடவுள் தமக்குக் குறிப்பிட்டி
ருந்த இடத்தை நோக்கிப் பயணமானார்.

4 மூன்றும் நாள் அவர் கண்களை உயர்த்தி அவ்விடத்தைத்
5 தூரத்திலிருந்து கண்டபோது, தம் ஊழியர்களை
நோக்கி: நீங்கள் கழுதையைப் பார்த்துக்கொண்டு
இங்கே காத்திருங்கள். நானும் என் மகனும் அவ்வி
டம் விரைந்துசென்று (ஆண்டவரை) ஆராதித்த
பின் உங்களிடம் திரும்பி வருவோம் என்றார்.

6 பின் தகனப் பலிக்கு வேண்டிய கட்டைகளை எடுத்து
தன் மகன் ஈசாக்கின் (தோளின்) மீது சுமத்தினார்;
நெருப்பையும் வாளையும் கையில் எடுத்துக்கொண்டார்.
7 இவ்வாறு இருவரும் சேர்ந்து செல்கையில், ஈசாக்
தன் தந்தையை நோக்கி, அப்பா! என, அவர்: ஏன்
மகனே! என்று கேட்டார். அதற்கு: இதோ நெருப்பும்
கட்டைகளும் இருக்கின்றன. தகனப் பலிக்கு வேண்டிய
8 மிருகம் எங்கே என்று வினவினான். ஆபிரகாம்: தக
னப் பலிக்குவேண்டிய மிருகத்தைக் கடவுளே தயார்
செய்து கொடுப்பார் மகனே! என்றார். இருவரும்
ஒன்றாக நடந்து சென்றுகொண்டிருந்தனர்.

9 கடவுள் ஆபிரகாமுக்குக் காண்பித்திருந்த இடத்தை
அவர்கள் அடைந்ததும், அவர் அங்கே ஒரு பீடம்

அமைத்து அதன்மேல் கட்டைகளை அடுக்கி வைத்தார்.
பின் தம் மகன் ஈசாக்கைக் கட்டிப் பீடத்தில் அடுக்கி
யிருந்த விறகுக் கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தி,
10 தம் கையை நீட்டி வாளை உருவி அவனைப் பலியிட
11 முயற்சித்தார். அப்பொழுது ஆண்டவருடைய தூதர்
ஒருவர் வானத்தினின்று: ஆபிரகாம்! ஆபிரகாம்! என்று
கூப்பிட அவர் அடியேன் தயார் என்று பதில் கூறினர்.
12 அவர்: உன் பிள்ளையின்மேல் கையோங்கி அவ
னுக்கு ஒன்றும் செய்யாதே. நீ தெய்வ பயமுடைய
வனுய், நம்பொருட்டு உன் ஒரே மகனையும் பலியிடத்
தயங்கவில்லை என்று நாம் இப்போது அறிந்துகொண்
13 டோம் என்ருர். அப்பொழுது ஆபிரகாம் தம் கண்
களை ஏறெடுத்துத் திரும்பிப் பார்க்கையில், முட்செடி
யிலே கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஓர் ஆட்டுக்
கிடாயைக் கண்டார்; அதைப் பிடித்துத் தம் மக
னுக்குப் பதிலாக அதைத் தகனப் பலியாய் ஒப்புக்
14 கொடுத்தார். அவ்விடத்திற்கு, ஆண்டவர் காண்
கிருர், என்று பெயரிட்டார். அதனுலே, இந்நாள்
வரை, ஆண்டவர் மலையிலே காண்பார், என்று
சொல்லப்பட்டு வருகின்றது.

15 ஆண்டவருடைய தூதர் வானத்தினின்று மீண்டும்
16 ஆபிரகாமைக் கூப்பிட்டு: ஆண்டவர் சொல்லுகிறதா
தாவது: நம் பெயரைச் சொல்லி நாம் ஆணையிட்டு
வாக்குறுதி சொல்வது ஏதெனில், நீ அச்செயலைச்
செய்ததனுலும், நம்மைப் பற்றி நீ உன் ஒரே மகனையும்
17 பலியிட மனம் துணிந்ததனுலும், நாம் உன்னை ஆசீர்
வதித்து. விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப்
போலவும் உன் இனம் பெருகச் செய்வோம். உன்
18 இனம் தன் பகைவர்களின் வாயில்களை உரிமையாக்
கிக் கொள்ளும். அன்றியும், நீ நமது சொல்லுக்குக்
கீழ்ப்படிந்து நடந்ததினுல் பூமியிலுள்ள எல்லா இனத்
தாரும் உன் சந்ததிக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்ருர்.

5. வரப்போகும் மீட்பராகிய தேவ செம்மறிக்கு ஒரு முன் அடையாளம்

யாத்திராகமம் 12 : 21 – 25

21 மோயீசனோ, இஸ்ராயேல் மக்களின் பெரியோர்களான
யாவரையும் வரவழைத்து: நீங்கள் ஒவ்வொருவரும்
போய், உங்கள் குடும்பத்திற்கு ஏற்றாற்போல் ஓவ்
வோர் ஆட்டுக்குட்டியைத் தேர்ந்தெடுத்து, பாஸ்கா
22 வைப் பலியிடுங்கள். பின் ஈசோப்புக் கொழுந்துக்
கொத்து எடுத்து வந்து, அதைக் கிண்ணியிலுள்ள
இரத்தத்தில் தோய்த்து, வாயில் நிலைக்கால்களின்
மேற் சட்டத்திலும் நிலைக்கால் கள் இரண்டிலும் தெளி
யுங்கள். விடியற்காலை வரை உங்களில் ஒருவனும்
23 வீட்டு வாயிலைக் கடக்கக் கூடாது. ஏனென்றால் ஆண்ட
வர் எகிப்தியரை அழிப்பதற்குக் கடந்து வரும்போது,
கதவு நிலையின் மேற் சட்டத்திலும் நிலைக்கால்கள்
இரண்டிலும் இரத்தம் இருப்பதைக் காணும்போது,
அழிப்போனை உங்கள் வீடுகளில் புகுந்து உங்களை
அழிக்கவிடாமல், வாயிற்படியை விலகிக் கடந்து
போவார். இவ்வார்த்தையை நீயும் உன் புதல்வர்க
24 ளும் நித்திய கட்டளையாகக் கடைக்கொள்ளக்கடவீர்
25 கள். மேலும் ஆண்டவர் தாம் சொன்னபடி உங்க
ளுக்குக் கொடுக்கவிருக்கும் நாட்டிலே நீங்கள் போய்ச்
சேர்ந்த போதும், இச் சடங்கு முறைகளை அனுசரிக்கக்
கடவீர்கள்.

6. வரப்போகும் மீட்பர் தாவீதின் அரியணையில் அமர்வார்

இசையாஸ் ஆகமம் 9 : 6-7

6 நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளது,
நமக்கு ஒரு மகன் தரப்பட்டுள்ளான்;

ஆட்சியின் பொறுப்பு அவருடையதோள்மேல் இருக்கும்,
அவருடைய பெயரோ, ''வியத்தகு ஆலோசனையாளர்,
வல்வமையுள்ள இறைவன், முடிவில்லாத் தந்தை,
அமைதியின் மன்னன்'' என வழங்கப்படும்.

7 அவருடைய ஆட்சியின் வளர்ச்சிக்கும் அமைதியின்
பெருக்கிற்கும்.
முடிவு என்பதே இராது.
தாவீதின் அரியணையில் அமர்வார்;
அவரது அரசை நிறுவுவார்:
இன்றுமுதல் என்றென்றும் நீதியாலும் நியாயத்தாலும்
அதை நிலைபெயராது காத்திடுவார்;
சேனைகளின் ஆண்டவரது ஆர்வம் இதைச் செய்யும்.

7. வரப்போகும் மீட்பர் ஒரு நல்ல ஆயன்

இசையாஸ் ஆகமம் 40 : 11

11 ஆயனைப்போல் அவர் தமது மந்தையை மேய்ப்பார்,
ஆட்டுக் குட்டிகளைத் தம் கையால் கூட்டிச் சேர்ப்பார்;
அவற்றை அன்போடு எடுத்து அரவணைப்பார்;
சினையாடுகளை இளைப்பாறு மிடத்திற்குக் கூட்டிச் செல்
வார்.

8. ஆண்டவருடைய ஊழியனின் பணியும், பண்புகளும்.

இசையாஸ் ஆகமம் 42 : 1—4

1 இதோ நம் ஊழியன், அவரை நாம் ஆதரிக்கிறோம்,
அவர் நம்மால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்,
அவரிடத்தில் நம் உள்ளம் பூரிப்படைகின்றது,
அவர்மேல் நம்முடைய ஆவியைத் தங்கச்செய்தோம்,
அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்.

2 அவர் சச்சரவு செய்யமாட்டார்,
கூக்குரலிடவும் மாட்டார்,
அவர் குரல் தெருவிலே கேட்காது.

3 அவர் நெரிந்த நாணலை முறியார்,
புகையும் திரியை அணையார்,
உண்மையுள்ளவராய் அறத்தைக் கொணர்வார்.

4 உலகில் அறத்தை நிலைநாட்டும்வரை,
அவர் மனந்தளர மாட்டார், ஊக்கங்குறைய மாட்டார்;
அவருடைய சட்டத்திற்காகத் தீவுகளும் காத்திருக்கின்றன.

ஆண்டவரின் ஆவி என்மேலே,
ஏனெனில் ஆண்டவர் என்னை அபிஷேகம் செய்துள்ளார்;

இசையாஸ் ஆகமம் 61: 1—3

1 எளியோர்க்கு நற்செய்தி அறிவித்து,
உள்ளம் நொந்தவர்களைக் குணப்படுத்தவும்:
சிறைப்பட்டவர்களுக்கு விடுதலைச் செய்தியும்,
கட்டுண்டவர்களுக்கு மீட்புச் செய்தியும் அறிவிக்கவும்;

2 ஆண்டவர் தம் அருளைத் தரும் ஆண்டையும்,
நம் கடவுள் பழிவாங்கும் நாளையும் தெரிவிக்கவும்,
அழுகிறவர்கள் அனைவர்க்கும் ஆறுதல் அளிக்கவும்;

3 சீயோனில் அழுகிறவர்களை மகிழ்விக்கவும்,
சாம்பலுக்குப் பதிலாய் மணிமுடியையும்,
அழுகைக்குப் பதிலாய் மகிழ்ச்சியின் தைலத்தையும்,
நைந்த உள்ளத்திற்குப் பதிலாய்ப் புகழ் என்னும் போர்வையையும்,
தரவும் ஆண்டவர் என்னை அனுப்பியுள்ளார்.

9. துன்புறுத்தப்பட்ட கடவுளின் ஊழியன்

இசையாஸ் ஆகமம் 50 : 6–7

6 துன்புறுத்துகிறவர்களுக்கு என் உடலைக் கையளித்தேன்,
தாடியைப் பிய்க்கிறவர்களுக்கு என் கன்னங்களைக் காட்டினேன் ;
நிந்தை கூறுவோர்க்கும், காறி உமிழ்வோர்க்கும்,
என் முகத்தை மறைத்துக்கொள்ளவில்லை.
7 கடவுளாகிய ஆண்டவர் எனக்குத் துணைநிற்கிறார்,
ஆதலால் நான் கலக்கம் கொள்ளேன்.
ஆதலால் என் முகத்தைக் கருங்கல்போல் வைத்துக்கொண்டேன் அதற்காக வெட்கப்படேன் என்பது எனக்குத் தெரியும்.

01 ஆண்டவரின் துன்புறும் ஊழியனைப்பற்றிய தீர்க்க தரிசனம்.

இசையாஸ் ஆகமம் 52 : 13-15

13 இதோ, நம் ஊழியன் சிறப்படைவார்,
உயர்த்தப்படுவார், மேலோங்குவார், மிக உன்னதராவார் ;
14 பலபேர் அவரைக்கண்டு திடுக்கிட்டார்கள் — அவரது தோற்றம் அவ்வளவு சீர்குலைந்திருந்தது,
மனித சாயலே அவரிடம் இல்லை —
மனிதர்களின் வடிவே அவரிடம் காணப்படவில்லை.
15 அதே அளவுக்கு மக்களினங்கள் பல திடுக்கிடும்,
அரசர்களும் அவரைப் பார்த்து வாய்பொத்தி நிற்பர்;
ஏனெனில் சொல்லப்படாத ஒன்றைக் காண்பார்கள்.
இதுவரை கேட்டிராத ஒன்றைப் பார்ப்பார்கள.

2 இளந்தளிர்போல் அவர் வளர்ந்தார்,
வரண்ட நிலத்திலிருக்கும் வேர்போலத் துளிர்த்தார்;
அவரைப் பார்த்தோம், அவரிடம் அழகோ அமைப்போ
இல்லை ;
கவர்ச்சியான தோற்றமும் இல்லை.

3 இகழப்பட்டவர், மனிதரால் புறக்கணிக்கப்பட்டவர் ;
அவர் துன்புறும் மனிதனுய்த் துயரத்திலாழ்ந்தவராய்
இருந்தார் ;
கண்டோர் கண் மறைத்து அருவருக்கும் ஒரு மனித
னைப்போல்,
அவர் இகழப்பட்டார், நாம் அவரை மதிக்கவில்லை.

4 மெய்யாகவே அவர் நம் பிணிகளை ஏற்றுக்கொண்டார்;
நம்முடைய நோய்களைச் சுமந்துகொண்டார் ;
ஆனுல் அவர் தண்டனைக் குள்ளானவர் எனவும்,
கடவுளால் ஒறுக்கப்பட்டவர் எனவும்,
வாதிக்கப்பட்டவர் எனவும் நாம் எண்ணினேம்.

5 ஆனுல் நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார்.
நம் அக்கிரமங்களுக்காகவே அவர் நொறுக்கப்பட்டார்;
நம்மை நலமாக்கும் தண்டனை அவர்மேல் விழுந்தது.
அவருடைய காயங்களால் நாம் குணமடைந்தோம்.

6 ஆடுகளைப்போல நாம் அனைவரும் வழி தவறி அலைந்
தோம்,
கால்போன வழியே ஒவ்வொருவரும் போனேம் ;
நம் அனைவருடைய அக்கிரமங்களையும் ஆண்டவர் அவர்
மேல் சுமத்தினர்.

7 அவர் கொடுமையாய் நடத்தப்பட்டார் ;
தாழ்மையாய் அதைத் தாங்கிக்கொண்டார் ;

அவர் வாய்கூடத் திறக்கவில்லை ;

கொல்வதற்காக இழுத்துச் செல்லப்படும் ஆட்டுக்குட்டி போலும்,

மயிர் கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத செம்மறி யாடுபோலும்,

அவர் வாய் திறக்கவில்லை.

8 கொடிய தீர்ப்புக்குப்பின் அவர் கொண்டுசெல்லப்பட்டார்,

அவருக்கு நேர்ந்ததைப்பற்றி அக்கறை கொண்டவன் யார்?

ஆம், அவர் வாழ்வோர் உலகினின்று எடுக்கப்பட்டார், தம் இனத்தாரின் அக்கிரமங்களுக்காகவே அவர் வதைக்கப்பட்டார்.

9 பொல்லாதவர்களோடு அவருக்குக் கல்லறை தந்தார்கள்,

சாகும்போது அவர் தீமை செய்கிறவர்களோடு இருந்தார் ;

ஆயினும் வன்முறைச் செயல் ஏதும் அவர் செய்தவர் அல்லர்,

அவருடைய வாயில் பொய்யே வந்ததில்லை.

10 அவரை வேதனையிலாழ்த்தி நொறுக்க ஆண்டவர் விரும்பினார்.

தம்மையே பாவத்திற்காக அவர் பலியாக்கினார்.

பெரியதொரு சந்ததியைக் கண்டு நீடுவாழ்வார் ;

ஆண்டவரின் திருவுளம் அவர் கையால் நிறைவேறும்.

11 தம் ஆன்மாபட்ட வேதனையின் பலனை அவர் கண்டு நிறைவு கொள்வார் ;

நம் ஊழியனாகிய அந்த நீதிமான் தமது அறிவினால் பலரை நீதிமான்களாக்குவார் ;

அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்.

12 ஆதலால் பலபேரை அவருக்கு நாம் பங்காகத் தரு
வோம்,
அவரும் வல்லவர்களோடு கொள்ளைப் பொருளைப் பங்
கிட்டுக் கொள்வார் ;
ஏனெனில் சாவுக்குத் தம் ஆன்மாவைக் கையளித்தார்,
பாவிகளுள் ஒருவனாய்க் கருதப்பட்டார் ;
ஆயினும் பலருடைய பாவத்தைத் தாமே சுமந்து
கொண்டு,
பாவிகளுக்காகப் பரிந்து பேசினார்.

## 11. நீதிமானுக்கு எதிராகச் சதித்திட்டம்,

ஞான ஆகமம் 2 : 12 - 20

12 " நீதிமானை நாம் மடக்கப் பார்ப்போம்,
ஏனெனில் அவன் நமக்குத் தொல்லையாய் இருக்கிறான்,
நம் நடத்தைக்கு அவன் பகையாளியாய் இருக்கிறான்,
திருச்சட்டத்திற்கு எதிராய் நாம் செய்யும் பாவங்களைக்
கண்டிக்கிறான்.
நமது பயிற்சிக்கு எதிரான பாவங்களை நம்மேல் சுமத்து
கிறான்,
13 கடவுளைப்பற்றிய அறிவு தனக்கிருப்பதாகச் சொல்லிக்
கொள்கிறான்,
ஆண்டவரின் குழந்தை என்று தன்னைக் கூறிக்கொள்
கிறான்.
14 நம் சிந்தனைகளின் நடமாடும் கண்டனவுரையாய் இருக்
கிறான் ;
15 அவனைக் காண்பதே நமக்குத் தாங்கமுடியாததாய்
இருக்கிறது;

ஏனெனில் அவன் நடத்தை மற்றவர்களின் நடத்தை
போலில்லை,
அவனுடைய போக்கே தனிப்பட்டது.
16 ஈனர்கள் என்று நம்மை அவன் எண்ணுகிறான்,
அசுத்தமானவை என்று நம் நெறிகளை அவன் விலக்கு
கிறான் ;
நீதிமான்களின் கடைசிமுடிவை ஆவலாய்த் தேடு
கிறான்,
கடவுள் தன் தந்தையென்று சொல்லி இறுமாந்திருக்
கிறான்.
17 அவனுடைய சொற்கள் உண்மையா என்று பார்ப்
போம்,
அவன் வாழ்வின் முடிவில் என்ன நடக்குமெனச்
சோதித்தறிவோம்.
18 ஏனெனில், நீதிமான் கடவுளின் மகனாயின், அவனுக்கு
அவர் துணை செய்வார்,
மாற்றார் கையினின்று அவனை விடுவிப்பார்.
19 அவனுடைய சாந்தத்தை அறிந்கொள்துளவும்,
பொறுமையைச் சோதித்துப் பார்க்கவும்
அவனை நிந்தை வேதனைப்படுத்திப் பார்ப்போம்.
20 வெட்கத்துக்குரிய சாவுக்கு அவனை ஆளாக்குவோம்,
ஏனெனில், அவன் சொற்படி அவனுக்குத்தான் கடவு
ளின் துணையிருக்குமே !''

12. வரப்போகும் மீட்பர் ஆண்டவரும் குருவும்.

சங்கீதம் 109 : 1, 4

ஆண்டவர் என் ஆண்டவரிடம் சொன்னது : "நான்
உம் பகைவரை உமக்குக் கால்மணையாக்கும்வரை நீர்
என் வலப்பக்கத்தில் அமரும்.''

4 "மெல்கிசெதேக் முறைப்படி நீர் என்றென்றும் குரு
வே" என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார் :
சொன்ன சொல்லை மாற்றமாட்டார்.

13. புதிய குருவாகிய மீட்பர் ஒப்புக்கொடுத்த பலி

சங்கீதம் 39:6—8

6 பலியும் காணிக்கையும் நீர் விரும்பவில்லை; ஆனால்
எனக்கு ஓர் உடலை அமைத்தளித்தீர்: தகனப் பலியும்
பாவம் போக்கும் பலிப்பொருளும் நீர் கேட்கவில்லை.
7 அப்போது நான் சொன்னது: "இதோ வருகிறேன்,
ஏட்டுச் சுருளில் என்னைக் குறித்து:
8 என் இறைவா, உம் திருவுளத்தின்படி நடப்பதே
எனக்கின்பம்: உம் திருச்சட்டத்தை என் உள்ளத்தில்
கொண்டிருக்கிறேன் என்று எழுதப்பட்டுள்ளது."

14. வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்.

சங்கீதம் 117: 22—23

22 வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்
கல் ஆயிற்று.
23 ஆண்டவர் செயலிது: நம் கண்ணுக்கு வியப்பே!

15. வரப்போகும் மீட்பரின் பாடுகள்

சங்கீதம் 21 : 6 - 8; 16 - 18

6 நானோவெனில் மனிதனேயல்ல, புழுவுக்கு ஒப்பானேன்
மனிதரின் நிந்தனைகளுக்கும் இகழ்ச்சிக்கும் ஆளானேன்.
7 என்னைப்பார்ப்போர் எல்லாரும் என்னை ஏளனம் செய்
கின்றனர்: உதட்டைப் பிதுக்கி தலையை அசைக்
கின்றனர்.

8 'ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்தானே, அவர் மீட்கட்
கட்டும்: அவருக்கு இவன்மீது பிரியமிருந்தால் இவனை
விடுவிக்கட்டும்', என்றார்கள்.
16 பல நாய்கள் என்னைச் சூழ்ந்து கொண்டன; பொல்
லாதவர்கள் கூட்டம் என்னை வளைத்துக்கொண்டது:
என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்.
17 என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணிவிட முடியும்:
அவர்களோ என்னை முறைத்துப் பார்க்கிறார்கள்,
பார்த்து அக்களிக்கிறார்கள்.
13 என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்துகொள்கிறார்
கள்: என் உடைமீது சீட்டுப்போடுகிறார்கள்.

## 16. மக்கள் உலக மீட்பரை நோக்கி அழுவர்

சக்கரியாஸ் ஆகமம் 12: 10—12

10 ஆனால் நாம் தாவீதின் வீட்டார் மேலும் யெருசலேம்
மக்கள் மேலும் இரக்க உள்ளத்தையும், மன்றாடும்
மனநிலையையும் பொழிவோம்; அப்போது அவர்கள்
தாங்கள் ஊடுருவக் குத்தியவரை நோக்குவர்;
நோக்கி, ஒருவன் தன் ஒரே பிள்ளையைப் பறி
கொடுத்துவிட்டுப் புலம்புவது போலும், இறந்துபோன
தனது தலைப்பேற்றுக்காக ஒருவன் கதறியழுவது
போலும் அவருக்காக அழுவார்கள்...................
12 குடும்பம் குடும்பமாய் நாடெங்கும் அழுது புலம்புவர்.

## 17. வரப்போகும் மீட்பர் புறவினத்தாருக்கு ஒளி

இசையாஸ் ஆகமம் 49: 1—6

1 தீவுகளே, செவிகொடுத்துக் கேளுங்கள்
தொலைநாட்டவரே, கூர்ந்து கவனியுங்கள்:
கருப்பையிலேயே ஆண்டவர் என்னை அழைத்திருக்கிறார்,

என் தாய்வயிற்றிலேயே எனக்குப் பெயரிட்டிருக்கிறூர்.
2 என் நாவைக் கூரிய வாளாக்கினூர், தமது கையின்
நிழலில் என்னைக் காத்தருளினூர்; தீட்டிய அம்பாக
என்னைச் செய்து, தமது அம்பறூத் தூணியில் ஒளித்து
வைத்தார்.
3 என்னைப் பார்த்து: ''இஸ்ராயேலே. நீ நம் ஊழி
யன். உன்னில் நாம் மகிமையடைவோம்'' என்றூர்.
4 அதற்கு நான் பயனின்றி வீணுக உழைத்துச் சோர்ந்
தேன்,

என் ஆற்றலைப் பயனின்றிச் செலவழித்தேன்;
ஆயினும் என் நியாயம் ஆண்டவரின் பொறுப்பு,
எனக்குரிய கைம்மாறு கடவுளிடம் உள்ளது'' என்றேன்.
5 யாக்கோவைத் தம்மிடம் அழைத்துவர, இஸ்ராயே
லைத் தம்மிடம் கூட்டிவர, என்னைத் தம் ஊழியனுய்
என் தாய் வயிற்றில் உருவாக்கிய ஆண்டவர் கூறுகிறூர்:
ஏனெனில் ஆண்டவர் திருமுன் நான் மகிமையடைந்
தேன்,

என் கடவுள் என்னுடைய மகிமை ஆனூர்.
6 அவர் சொன்னூர்:

"யாக்கோப்பின் கோத்திரங்களை எழுப்பவும் இஸ்ரா
யேலில் எஞ்சினேரைத் திருப்பிக் கொணரவும்,
நமக்கு நீ ஊழியனுய் இருத்தல் பெரிதன்று.
உலகத்தின் எல்லைவரையில் நமது மீட்பு எட்டும்படி,
புறவினத்தார்க்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தினேம்.''

## 2-ம் பாகம்

# இயேசுவின் வாழ்வும் பணியும்

## திருச்சபையின் படிப்பினை

''கடவுளின் மகனுகிய எங்கள் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை விசுவசிக்கின்ருேம். அவரே நித்திய வார்த்தை யானவர் அவர் யுகங்களுக்கெல்லாம் முன்பே பிதாவி னின்று பிறந்து பிதாவோடு ஒரேபொருளானவர். அவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன. அவர் பரிசுத்த ஆவியின் வல்லமையினுல் கன்னிமரியிடம் உடலெடுத்து மனிதனுனர். ஆகவே, அவர் தேவ இயல்பில் பிதாவுக்குச் சரியொத்தவர். ம ு த இயல்பிலோ பிதாவுக்குக் கீழ்ப்பட்ட வர். அவர் இரு இயல்புகளின் நிகழமுடியாத கலப்பினுல் அன்று, ஆனுல் தமது தேவ ஆளுமையின் ஒருமைப்பாட்டி ஞல் ஒருவராய் இருக்கின்ருர்.

அவர் அருளும் உண்மையும் நிறைந்தவராய் நம் மிடையே குடிகொண்டார். அவர் கடவுளின் அரசை அறி வித்து நிறுவினுர். பரம தந்தையை தம்மில் நமக்கு வெளிப் படுத்தினுர் தாம் நம்மை நேசித்ததுபோல் நாமும் ஒரு வரை ஒருவர் நேசிக்க வேண்டுமென்ற தமது புதிய கட்ட ளையை நமக்குத் தந்தார். நற்செய்திப் பேறுகளின் வழியை நமக்குப் படிப்பித்தார். அதாவது, மன எளிமை, சாந்த குணம், துன்பத்தில் பொறுமை, நீதியின்பால் பசிதாகம், இரக்கம், தூய உள்ளம், சமாதான வேட்கை, நீதியின் நிமித்தம் துன்பத்தை அனுபவித்தல், என்பனவாம்''.

(6-ம் சின்னப்பரின் விசுவாச அறிக்கை)

''மேலும் அவர் நமக்காகப் போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் சிலுவையிலே அறையுண்டு, பாடுபட்டு அடக்கம் செய்யப்பட்டார். வேதாகமத்தின்படியே மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தார், வானகத்துக்கு எழுந்தருளிப் பிதாவின் வலப் பக்கம் வீற்றிருக்கின்றூர்''. (நிசேயா விசுவாசப் பிரமாணம்)

## புனித லூக்காஸ் நற்செய்தி நூல்

(தேர்ந்தெடுக்கப்பட்ட பாகங்கள்)

### 1. அருளப்பர், இயேசு இவர்கள் பிறப்பின் அறிவிப்பு

**ஸ்நாபக அருளப்பருடைய பிறப்பின் அறிவிப்பு**

1 †5 ஏரோது யூதேயா நாட்டு அரசனுக இருந்த காலத்தில்,
அபியா வகுப்பைச் சார்ந்த சக்கரியாஸ் என்னும் குரு
ஒருவர் இருந்தார். அவர் மனைவி, ஆரோன் குலத்தவள்
6 பெயர் எலிசபெத்து. இவ்விருவரும் ஆண்டவருடைய
கற்பனைகள் முறைமைகளின்படி குறைகூற இடமில்லாமல்
கடவுள் முன்னிலையில் நீதிமான்களாய் நடந்து வந்தனர்.
7 எலிசபெத்து மலடியாய் இருந்தமையால், அவர்களுக்கு
மகப்பேறு இல்லை. மேலும், இருவரும் வயது முதிர்ந்தவர்
8 களாயும் இருந்தனர். இவ்வாறு இருக்க, தம் பிரிவின்
முறை வந்தபோது சக்கரியாஸ் கடவுள் முன்னிலையில்
9 குருத்துவப் பணி செய்து வருகையில், இறைவழிபாட்டு
முறைமைப்படி ஆலயத்துள் சென்று தூபங்காட்ட அவ
10 ருக்குச் சீட்டு விழுந்தது. தூபங் காட்டுகிற வேளையிலே,

---

† ஏரோது கி. மு. 37-ல் இருந்து பலஸ்தீன் நாடு முழுவதற்கும் அரசனுக இருந்தான். அவன் 'பெரிய ஏரோது' என்றசிறப்புப்பெயரைப் பெற்றுன்.

ஆலய வழிபாட்டை முறையாக நிறைவேற்றுமாறு யூத குருக்கள் 24 பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தனர்.

மக்களெல்லாரும் கூட்டமாய் வெளியே செபித்துக்
கொண்டிருந்தனர்.

11 அப்பொழுது ஆண்டவருடைய தூதர் தூபப்பீடத்தின்
வலப்பக்கத்தில் நின்ற வண்ணம் அவருக்குத்
தோன்றினர்.

12 அவரைக் கண்டு, சக்கரியாஸ் கலங்கினர்; அவரை அச்சம்
13 ஆட்கொண்டது. வானதூதர் அவரிடம், ''சக்கரியாசே,
அஞ்சாதே, உன் வேண்டுகோள் ஏற்கப்பெற்றது. உன்
மனைவி எலிசபெத்து உனக்கு ஒரு மகனைப் பெறுவாள்.
14 அவருக்கு 'அருளப்பர்' எனப் பெயரிடுவாய். உனக்குஅக
மகிழ்வும் அக்களிப்பும் உண்டாகும். அக்குழந்தையின்
15 பிறப்பால் பலரும் மனமகிழ்வர். அவர் ஆண்டவர் முன்
னிலையில் மேலானவராய் இருப்பார்; திராட்சைஇரசமோ
மதுவோ குடிக்கமாட்டார். தாய்வயிற்றில் இருக்கும்
16 போதே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெறுவார். அவர்
இஸ்ராயேலர் பலரை அவர்களுடைய கடவுளாகிய
ஆண்டவர் பக்கம் திருப்புவார்.

17 தந்தையரையும் மக்களையும் ஒப்புரவாக்குவார். இறை
வனுக்கு அடங்காதவர்களை நீதிமான்களின் மனநிலைக்குத்
திருப்புவார். இவ்வாறு, ஆண்டவருக்கு ஏற்ற மக்களை
ஆயத்தப்படுத்துவார். எலியாசை ஆட்கொண்டிருந்த
தேவ ஆவியும் வல்லமையும் உடையவராய் அவர் ஆண்ட
18 வருக்கு முன்னே செல்வார்'' என்றார். சக்கரியாஸ் தூத
ரிடம், ''இவை யாவும் நிகழும் என எனக்கு எப்படித்
தெரியும்? நானோ வயதானவன், என் மனைவியும் வயது
19 முதிர்ந்தவள்'' என்றார். அதற்குத் தூதர், ''நான் கட
வுளின் திருமுன்நிற்கும் கபிரியேல். உன்னிடம் பேசவும்,
இந்நற்செய்தியை உனக்கு அறிவிக்கவும் அனுப்பப்
20 பெற்றேன். இதோ! இவை நடைபெறும் நாள்வரை நீ
பேசாமலும் பேசமுடியாமலும் இருப்பாய். ஏனெனில்
உரிய காலத்தில் நிறைவேறும் என் சொல்லை நீ நம்ப

21 வில்லை'' என்றார். மக்கள் சக்கரியாசுக்காகக் காத்திருந்
தனர். ஆலயத்தில் அவர் காலந்தாழ்த்தியதுபற்றி வியப்
22 படைந்தனர். அவர் வெளியே வந்தபொழுது, அவர்
களிடம் பேச முடியவில்லை. ஆலயத்தில் ஏதோ காட்சி
கண்டிருக்கவேண்டும் என்று அவர்கள் அறிந்துகொண்
டார்கள். அவர் அவர்களுக்குச் சைகைகள் காட்டி நின்
23 றார். அதுமுதல் ஊமையாகவே இருந்தார். தம்முடைய
திருப்பணி நாட்கள் கடந்ததும் அவர் வீடு திரும்பினார்.
24 அடுத்து அவர் மனைவி எலிசபெத்து கருத்தரித்து ஐந்து
25 மாதமளவும் பிறர் கண்ணில் படாதிருந்து, ''மக்களுக்
குள் எனக்கிருந்த இழிவைப் போக்க ஆண்டவர் என்னைக்
கடைக் கண் நோக்கி இந்நாளில் இவ்வாறு செய்தருளி
னார்'' என்றாள்.

### இயேசுவினுடைய பிறப்பின் அறிவிப்பு

26 ஆறும் மாதத்திலே, கபிரியேல் தூதரைக் கடவுள் கலி
லேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்து ஒரு
27 கன்னிகையிடம் அனுப்பினார். அவள் தாவீது குலத்தவ
ராகிய சூசை என்பவருக்கு மண ஒப்பந்தமானவள். அவள்
*28 பெயர் மரியாள். தூதர் அவளது இல்லம்சென்று, ''அருள்
நிறைந்தவளே வாழ்க, ஆண்டவர் உம்முடனே'' என்றார்.
29 இவ்வார்த்தைகளை அவள் கேட்டுக் கலங்கி, இவ்வாழ்த்து
30 எத்தகையதோ என்று எண்ணிக்கொண்டிருந்தாள். அப்
போது வானதூதர் அவளைப்பார்த்து: ''மரியே, அஞ்சா
31 தீர்; கடவுள் அருளை அடைந்துள்ளீர். இதோ! உம்
வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு

---

* வாழ்க :- ஒருவரையொருவர் சந்திக்கும்போது சாதாரணமாகக் கூறும் வாழ்த்துதலுக்குக் கிரேக்க மொழியில் உள்ள சொல் அது.

32 இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் மேன்மை மிக்கவரா
யிருப்பார். உன்னதரின் மகன் எனப்படுவார். அவருடைய
தந்தையான தாவீதின் அரியணையை ஆண்டவராகிய
கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குலத்
தின்மீது என்றென்றும் அரசாள்வார். அவருடைய
33 ஆட்சிக்கு முடிவே இராது'' என்றார். மரியாள் தூத
34 ரிடம், இது எங்ஙனம் ஆகும்? நானோ கணவனை
அறியேனே'' என்றாள். அதற்கு வானதூதர், ''பரிசுத்த
*35 ஆவி உம்மீது வருவார். உன்னதரின் வல்லமை உம்
மேல் நிழலிடும். ஆதலின் பிறக்கும் திருக்குழந்தை
36 கடவுளுடைய மகன் எனப்படும். இதோ! உம் உறவின
ளான எலிசபெத்தும் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக்
37 கருத்தரித்திருக்கிறாள். மலடி எனப்படும் அவளுக்கு இது
ஆறும் மாதம். ஏனெனில், கடவுளால் ஆகாதது ஒன்று
38 மில்லை'' என்றார். ''மரியாளோ! இதோ ஆண்டவரு
டைய அடிமை. உமது வார்த்தையின்படியே எனக்கு
ஆகட்டும்'' என்றாள். என்றதும் வானதூதர் அவளிட
மிருந்து அகன்றார்.

மரியாள் எலிசபேத்தைத் தரிசித்தல்

39 அந்நாட்களில், மரியாள் புறப்பட்டு யூதா மலைநாட்டி
40 லுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்று, சக்கரியாசின்
41 வீட்டிற்கு வந்து எலிசபெத்தை வாழ்த்தினாள். மரியா
ளின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டவுடனே அவள்
வயிற்றினுள்ளே குழந்தை துள்ளியது. எலிசபெத்து

---

* நிழலிடும்:- யெருசலேம் தேவாலயத்தில் கடவுள் குடியிருக்கிறார் என்பதற்கு ஓர் அடையாளமாக அவ்வாலயத்தை மேகம் ஒன்று வந்து நிழலிடுவதுண்டு.

கன்னிமரியாளைக் கடவுள் தாம் குடியிருக்கும் ஆலயமாக்கிக் கொண்டதை இச்சொல் இங்கு குறிப்பிடுகிறது.

42 பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று, ''பெண்களுக்குள்
ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. உம்முடைய வயிற்றின்
43 கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே. என் ஆண்டவருடைய
44 தாய் என்னிடம் வர நான் வாய்ப்புப் பெற்றது எப்படி?
உமது வாழ்த்து என் காதில் ஒலித்ததும், என்வயிற்றி
45 னுள்ளே குழந்தை அக்களிப்பால் துள்ளியது. ஆண்டவர்
சொன்ன வாக்கு நிறைவேறும் என்று விசுவசித்தவள்
பேறு பெற்றவளே'' என்று உரக்கக் கூவினாள்.

மரியாளின் பாடல்

46 அப்போது மரியாள் உரைத்ததாவது:
''என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது.
47 என் மீட்பராம் கடவுளை நினைந்து
என் இதயம் களிகூருகின்றது.
48 ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக்
கடைக்கண் நோக்கினார்.
இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும்,
என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.
49 ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு
அரும்பெரும் செயல் பல புரிந்தார்.
அவர்தம் பெயர் புனிதமாமே.
50 அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத்
தலைமுறை தலைமுறையாய் உளதாமே,
51 அவர் தமது கைவன்மையைக் காட்டினார்,
நெஞ்சிலே செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்.
52 வலியோரை அரியணையினின்று அகற்றினார்,
தாழ்ந்தோரை உயர்த்தினார்.
53 பசித்தோரை நலன்களால் நிரப்பினார்
செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.
54,55 நம்முன்னோருக்கு அவர் சொன்னதுபோலவே
ஆபிரகாமுக்கும் அவர் தம் வழிவந்தோர்க்கும்

என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து
தம் அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்.''
56 மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு
57 தங்கியிருந்த பின்பு வீடு திரும்பினாள். எலிசபெத்துக்குப்
பேறுகாலம் வந்தது. ஒரு மகனைப் பெற்றெடுத்தாள்.
58 அவளுக்கு ஆண்டவர் மிகுந்த இரக்கம் காட்டியதைக்
கேள்விப்பட்டு அயலாரும் உறவினரும் அவளோடு
*59 மகிழ்ந்தனர். எட்டாம் நாள் குழந்தைக்கு விருத்தசேத
னம் செய்ய வந்து சக்கரியாஸ் என்று அவன் தந்தையின்
60 பெயரையே அவனுக்கு இடவிரும்பினர். ஆனால், அவன்
தாய் மறுத்து, ''அப்படியன்று, அருளப்பன் என்று
61 அவனை அழைக்கவேண்டும்'' எனக் கூறினாள். அதற்கு
அவர்கள், ''உன் உறவினருள் இப்பெயர் கொண்டவர்
62 ஒருவரும் இல்லையே'' என்று சொல்லி, ''குழந்தைக்கு
என்ன பெயரிட விரும்புகிறீர்?'' என்று தந்தையிடம்
63 சைகை காட்டிக் கேட்டனர். அவர் எழுது பலகை
யொன்றைக் கொண்டுவரச் சொல்லி, ''இவன் பெயர்
64 அருளப்பன்'' என்று எழுதினார். அனைவரும் வியப்படைந்
தனர். அந்நேரமே அவரது வாய் திறக்க, நா கட்ட
65 விழ, பேசத் தொடங்கி, கடவுளைப் போற்றினார்.
அயலார் அனைவரையும் அச்சம் ஆட்கொண்டது. இச்
செய்தியெல்லாம் யூதேயா மலைநாடெங்கும் பரவலா
66 யிற்று. கேள்விப்பட்டவர்கள் யாவரும் அதை உள்ளத்
தில் பதித்து, ''இக்குழந்தை எத்தகையவன்
ஆவானோ?'' என்றனர். உண்மையில் ஆண்டவருடைய
அருட்கரம் அவனோடு இருந்தது.

### சக்கரியாசின் பாடல்

67 அவன் தந்தை சக்கரியாஸ் பரிசுத்த ஆவியால் நிரப்
பப் பெற்று உரைத்த இறைவாக்காவது:

---

* யூதகுல மரபின்படி ஆண் குழந்தைக்குப் பிறந்த எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்யப்பட்டது.

68 ''இஸ்ராயேலின் கடவுளான ஆண்டவர் போற்றி!
ஏனெனில், தம்மக்களைத் தேடிவந்து விடுவித்தருளினார்.
69,70 தொன்று தொட்டு வந்த தம் பரிசுத்த
இறைவாக்கினர்களின் வாயினால்
அவர் மொழிந்தது போலவே,
தம் அடியானாகிய தாவீதின் குலத்திலே
மீட்கும் வல்லமை எழச் செய்தருளினார்.
71 இவ்வாறு நம் பகைவரிடமிருந்தும்,
நம்மை வெறுப்பவர் அனைவரின்
கையிலிருந்தும் மீட்டருளினார்.
72-75 நம் முன்னோர்க்கு இரக்கங் காட்டி,
நம் பகைவரின் கையினின்று விடுதலை பெற்று,
அச்சமின்றி நம் வாழ்நாளெல்லாம்
அவர் முன்னிலையில்,
புனிதத்தோடும் நீதியோடும் அவருக்குப் பணிபுரிய,
தாம் வழி வகுப்பதாக அவர்
நம் தந்தையாம் ஆபிரகாமுக்கு அளித்த
உறுதி மொழியையும்,
தமது பரிசுத்த உடன்படிக்கையையும்
நினைவுகூர்ந்தருளினார்.
76,77 நீயோ பாலனே, உன்னதரின்
வாக்குரைப்பவன் எனப்படுவாய்,
பாவ மன்னிப்பில் உளதாகிய மீட்பை
அவர்தம் மக்களுக்கு அறிவித்து,
ஆண்டவருடைய வழிகளை அமைக்க
அவர் முன்னே செல்வாய்.
‡78,79 இருளிலும், இறப்பின் நிழலிலும்
இருப்போர்க்கு ஒளி காட்டவும்,
அமைதிப் பாதையில் நம் காலடிகளைச் செலுத்தவும்
நம் கடவுளின் இரக்கப் பெருக்கத்தால்,
வானினின்று இள ஞாயிறு நம்பால் எழுந்து வரும்.''

‡ இள ஞாயிறு — மெசியாவின் சிறப்புப் பெயர்

80 பாலனே, ஆன்ம வலிமையோடு வளர்ந்து வந்தார்.
இஸ்ராயேலுக்கு வெளிப்படும் வரையிலும் பாலைவனத்
தில் மறைந்து வாழ்ந்தார்.

## 2. இயேசுவின் பிறப்பு

***2** அந்நாளில் உலகு முழுமையும் மக்கள் தொகையைக்
கணக்கிடும்படி செசார் அகுஸ்துவிடமிருந்து கட்டளை
§2 பிறந்தது. முதலாவதான இக்கணக்குக்கு சீரியா நாட்
3 டைக் கிரேனியு ஆண்டகாலத்தில் எடுக்கப்பட்டது.
அதன்படி அனைவரும் பெயரைப் பதிவுசெய்யத் தத்தம்
4,5 ஊருக்குச் சென்றனர். சூசையும் கருப்பவதியாயிருந்த
மனைவி மரியாளோடு பெயரைப் பதிவு செய்யக் கலி
லேயா நாட்டு நாசரேத்தூரை விட்டு, யூதேயா நாட்டி
லுள்ள பெத்லெகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்
றார். ஏனெனில், அவர் தாவீதின் குலத்தவரும் குடும்
பத்தவருமாக இருந்தார். அவர்கள் அங்கிருந்த
6 பொழுது, அவளுக்குப் பேறுகாலம் வந்தது. அவள்
†7 தலைப்பேறான மகனை ஈன்றெடுத்து, துணிகளில்
பொதிந்து முன்னிட்டியில் கிடத்தினாள். ஏனெனில்,
சத்திரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.
8 அதே பகுதியில் இடையர் வெட்டவெளியில் தங்கி
இரவெல்லாம் தங்கள் கிடைக்குச் சாமக்காவல் காத்துக்
9 கொண்டிருந்தனர். ஆண்டவருடைய தூதர் அவர்
களுக்குத் தோன்ற, விண்ணொளி அவர்களைச் சூழ்ந்து

---

* செசார் அகுஸ்து கி. மு. 30 முதல் கி. பி. பி. 14 வரை உரோமைப் பேரரசை ஆண்டான்.

§ முதலாவதான கணக்கு — இதே கிரேனியுஸ் சில ஆண்டுகளுக்குப் பின்னர் வேறொரு கணக்கெடுக்கக் கட்டளையிட்டான்.

† 'தலைப்பேறான மகன்' என்றால் அவருக்குப்பின் வேறு குழந்தைகளும் பிறந்தார்கள் என்ற கருத்தன்று, அவருக்குமுன் வேறு எவரும் பிறக்கவில்லை என்பதே. ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பிள்ளைதான் பிறந்தாலும் அது தலைப்பேறான பிள்ளையே.

சுடர்ந்தது. மிகுந்த அச்சம் அவர்களை ஆட்கொண்டது.
10 வான தூதர் அவர்களை நோக்கி, அஞ்சாதீர், இதோ!
மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சி யூட்டும்
*11 நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று
தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்.
12 அவரே ஆண்டவராகிய மெசியா. குழந்தை ஒன்றைத்
துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தி இருப்
13 பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அறிகுறி
யாகும்'' என்றார். உடனே வானோர் படைத்திரள்
அத் தூதரோடு சேர்ந்து,
14 ''உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையுண்டாகுக.
உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி ஆகுக''
என்று கடவுளைப் புகழ்ந்தது.
15 தூதர்கள் அவர்களை விட்டு வானகம் சென்ற பின்
இடையர் ஒருவரையொருவர் நோக்கி, ''வாருங்கள்
பெத்லேகேமுக்குப் போய் ஆண்டவர் நமக்கு அறிவித்த
இந் நிகழ்ச்சியைக் காண்போம்'' என்று சொல்லிக்
16 கொண்டு' | விரைந்து சென்று, மரியாளையும் சூசையை
17 யும், முன்னிட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும்
கண்டனர். கண்டபின்னர், அப்பாலனைப்பற்றித் தமக்
18 குக் கூறப்பட்டதைப் பிறருக்கு அறிவித்தனர். கேட்ட
யாவரும் தங்களுக்கு இடையர் கூறியதுபற்றி வியப்
19 படைந்தனர். மரியாளோ இந்நிகழ்ச்சிகளை எல்லாம்
20 உள்ளத்தில் இருத்திச் சிந்தித்து வந்தாள். இடையர்
தாம் கண்டது கேட்டதெல்லாம் நினைத்துக் கடவுளை
மகிமைப்படுத்திப் புகழ்ந்துகொண்டே திரும்பினர்
அவர்களுக்குச் சொன்னபடியே எல்லாம் நிகழ்ந்
திருந்தன.

---

* மெசியா — கடவுளால் வாக்களிக்கப்பட்ட அரச மீட்பர்.

## இயேசுவின் விருத்தசேதனமும் காணிக்கையும்

‡21 எட்டாம் நாள் வந்தபோது, குழந்தைக்கு விருத்த
சேதனம் செய்யவேண்டியிருந்தது. தாய் கருத்தரிக்கும்
முன்பே தூதர் குறிப்பிட்டிருந்த 'இயேசு' என்னும்
பெயரை அதற்கு இட்டார்கள். மோயீசன் சட்டப்படி
22 அவர்களுக்குச் சுத்திகர நாள் வந்தபோது குழந்தையை
யெருசலேமுக்குக் கொண்டுபோயினர். 'தலைப்பேறான
23 எந்த ஆணும் ஆண்டவருடைய உரிமையாகக் கருதப்
படும்' என்று ஆண்டவருடைய சட்டத்தில் எழுதி
யிருந்தபடி அதனை ஆண்டவர் திருமுன் நிறுத்தவும்,
24 அச் சட்டத்திலே கூறியுள்ளபடி ஒரு சோடி காட்டுப்
புறுக்கள் அல்லது இரண்டு மாடப் புறுக் குஞ்சுகளைப்
பலியாகக் கொடுக்கவும் வேண்டியிருந்தது. அப்போது
25 யெருசலேமிலே சிமியோன் என்னும் ஒருவர் இருந்
தார். அவர் நீதிமான், கடவுள் பக்தர். இஸ்ராயே
லுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்
தவர். பரிசுத்த ஆவி அவர்மீது இருந்தார் ஆண்ட
26 வருடைய மெசியாவைக் காண்பதற்குமுன் தாம்
சாவதில்லை என்று பரிசுத்த ஆவியால் அறிவிக்கப் பெற்
றிருந்தார். அவர் தேவ ஆவியின் ஏவுதலால் கோயி
27 லுக்கு வந்தார். திருச்சட்ட முறைமைப்படி குழந்
தைக்குச் செய்யவேண்டியதை நிறைவேற்றுவதற்குப்
பாலன் இயேசுவைப் பெற்றோர் கொண்டுவந்தபோது
28 சிமியோன் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு,
29-32 '' ஆண்டவரே, இப்போது உம் அடியானை
அமைதியாகப் போகவிடும்
ஏனெனில், உமது வாக்கு நிறைவேறிற்று.
மக்கள் அனைவரும் காண நீர் ஆயத்தம் செய்துள்ள

‡ இயேசு — 'மீட்பர்' என்பதே இப்பெயரின் கருத்து.

உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன.
இதுவே புறவினத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி.
இதுவே உம் மக்கள் இஸ்ராயேலை ஒளிர்விக்கும்
மாட்சிமை"

என்று கடவுளைப் போற்றினர்.

33 குழந்தையைக் குறித்துக் கூறியவற்றைக் கேட்டு
அதன் தாயும் தந்தையும் வியந்துகொண்டிருந்தனர்.
34 சிமியோன், அவர்களுக்கு ஆசி கூறி அதன் தாயாகிய
மரியாளைப் பார்த்து: "இதோ! இப்பாலன் இஸ்ரா
யேல் மக்கள் பலருக்கு வீழ்ச்சியாகவோ எழுச்சியாக
வோ அமைந்துள்ளான்; எதிர்க்கப்படும் அறிகுறியாக
35 இருப்பான் —உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுரு
வும். இதனால் பலருடைய உள்ளங்களினின்று எண்
36 ணங்கள் வெளிப்படும்" என்றார். அன்றியும், ஆசேர்
குலத்தைச் சார்ந்த பானுவேலின் மகளாகிய அன்னா
37 என்றொருத்தி இருந்தாள். அவள் இறைவாக்குரைப்
பவள். வயதில் மிக முதிர்ந்தவள்; மணமாகி ஏழு
ஆண்டுகள் கணவனோடு வாழ்ந்த பின், கைம்பெண்
ஆனாள். ஏறக்குறைய எண்பத்து நான்கு வயதானவள்
கோயிலைவிட்டு நீங்காமல் நோன்பாலும் செபத்தா
38 லும் அல்லும் பகலும் பணிபுரிந்து வந்தாள் அவளும்
அந்நேரத்தில் அங்கு வந்து கடவுளைப் புகழ்ந்து, யெரு
சலேமின் விடுதலையை எதிர்பார்த்திருந்த அனைவருக்
கும் குழந்தையைப்பற்றி எடுத்துரைத்தாள்.

## மறைந்த வாழ்வும் யெருசலேம் யாத்திரையும்

39 ஆண்டவருடைய சட்டப்படி எல்லாம் நிறைவேறிய
பின், அவர்கள் கலிலேயாவில் உள்ள தம் ஊராகிய
40 நாசரேத்துக்குத் திரும்பிப் போனார்கள் பாலனோ
வளர்ந்து வலிமை பெற்றார்: ஞானம் நிறைந்தவராக
வும் இருந்தார்: கடவுள் அருளும் அவர்மீது இருந்தது

*41 ஆண்டு தோறும் அவருடைய பெற்றோர் பாஸ்காத்
42 திருவிழாவுக்காக யெருசலேமுக்குப் போவார்கள்.
அவருக்குப் பன்னிரண்டு வயது நடக்கும்போது திரு
43 விழாவின் முறைப்படி யெருசலேமுக்குச் சென்றனர்.
திருநாட்கள் முடிந்து அவர்கள் திரும்பியபோது சிறு
வன் இயேசு யெருசலேமிலேயே தங்கிவிட்டார். இது
44 அவருடைய பெற்றோருக்கு தெரியாது. யாத்திரிகள்
கூட்டத்தில் அவர் இருப்பார் என்று நினைத்துக்
கொண்டு அவர்கள் ஒருநாள் வழிநடந்த பின்னர்
உற்றார் உறவினரிடையே அவரைத் தேடினார்கள்.
45 அவரைக் காணாததால் தேடிக்கொண்டு யெருசலேமுக்
46 குத் திரும்பினார்கள். மூன்று நாளுக்குப்பின் அவரைக்
கோயிலில் கண்டார்கள். அங்கே அவர் போதகர்கள்
நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்பதும்,
அவர்களை வினவுவதுமாய் இருந்தார். கேட்டவர்
47 அனைவரும் அவருடைய மறுமொழிகளில் விளங்கிய
அறிவுத்திறனைக் கண்டு திகைத்துப்போயினர். அவரு
48 டைய பெற்றோரும் அவரைக் கண்டு மலைத்துப்போயி
னர். அவருடைய தாய் அவரைப் பார்த்து. "மகனே,
ஏன் எங்களுக்கு இப்படிச் செய்துவிட்டாய்? இதோ!
உன் தந்தையும் நானும் உன்னை ஏக்கத்தோடு தேடிக்
கொண்டிருந்தோம்!" என்றாள். அதற்கு அவர், "ஏன்
49 என்னைத் தேடினீர்கள்? என் தந்தையின் இல்லத்தில்
நான் இருக்கவேண்டுமென்பது உங்களுக்குத் தெரி
யாதா?" என்றார். அவர் சொன்னது அவர்களுக்கு
50 விளங்கவில்லை. பின்பு அவர் அவர்களோடு புறப்பட்டு
51 நாசரேத்துக்கு வந்து அவர்களுக்குப் பணிந்திருந்தார்.
அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தன்
னுள்ளத்தில் கொண்டிருந்தாள். இயேசு வளர வளர
52 ஞானத்திலும் முதிர்ந்து. கடவுளுக்கும் மனிதருக்கும்
மேன்மேலும் உகந்தவரானார்.

---

பாஸ்கா திருவிழா – யூதரின் மாபெரும் திருவிழா. அவர்கள் முன்னோர் எகிப்திலிருந்து விடுதலையாகியதை அது நினைவூட்டியது.

## 3. இயேசுவின் பணித்தொடக்கம்

### ஸ்நாபக அருளப்பர்

*3 திபேரியு செசார் ஆட்சியேற்ற பதினைந்தாம் ஆண்
டில், போன்சியு பிலாத்து யூதேயாவின் ஆளுநராகவும்,
கலிலேயா நாட்டுக்கு ஏரோதும், இத்துரேயா-திராக்
கோனித்து நாட்டுக்கு அவன் சகோதரன் பிலிப்பும்,
அபிலேனே நாட்டுக்கு விசானியாவும் சிற்றரசர்களாக
† 2 வும், | அன்னாஸ், கைப்பாஸ் தலைமைக்குருக்களாகவும்,
இருக்க, சக்கரியாசின் மகனான அருளப்பருக்குப் பாலை
வனத்தில் கடவுளின் வாக்கு அருளப்பட்டது. பாவ
3 மன்னிப்படைய, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற
வேண்டுமென்று அவர் யோர்தான் ஆற்றை அடுத்த
4 நாடெல்லாம் சுற்றி அறிவித்தார். இதைப்பற்றி
இசையாஸ் இறைவாக்கினரின் திருச்சொல் ஆகமத்தில்,
'' பாலைவனத்தில் ஒருவன் கூக்குரல் ஒலிக்கிறது;
ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள்;
அவர்தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள்;
5 பள்ளத்தாக்குகளெல்லாம் நிரவப்படுக.
மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படுக,
கோணலானவை நேராகவும்,
கரடுமுரடானவை சமமான வழிகளாகவும் ஆக்கப்

---

*பதினைந்தாம் ஆண்டில்; கி. பி. 28 ஆகஸ்டுக்கும், கி. பி. 29 ஆகஸ்டுக்கும் இடையில்.

போன்சியு பிலாத்து—கி. பி. 26-35 வரை யூதேயா நாட்டை ஆண்டான்.

ஏரோது—கி. மு. 4 முதல் கி. பி. 39 வரை கலிலேயாவை ஆண்ட சிற்றரசன். இவன் பெரிய ஏரோதின் மகன். இவனது முழுப்பெயர்: ஏரோது அந்திப்பாஸ். (லூக். 13, 32; 7 காண்.)

†அன்னாஸ்—கி. பி. 6-15 பெரிய குருவாக இருந்தபின் உரோமையரால் பதவியிலிருந்து நீக்கப்பட்டான். (அ. ப. 4, 6 காண்க.)

கைப்பாஸ்—அன்னாசின் மருமகன். (கி. பி. 18-36 வரை தலைமைக் குரு.)

6 படுக. மனிதரெல்லாரும் கடவுளின் மீட்பைக்
காண்பர்'' என்று எழுதியிருந்தது.
7 தம்மிடம் ஞானஸ்நானம் பெறப் புறப்பட்டு வந்த
மக்கட் கூட்டத்தை அவர் நோக்கி, ''விரியன் பாம்புக்
குட்டிகளே, வரப்போகும் சினத்துக்குத் தப்பித்துக்
8 கொள்ள உங்களுக்குச் சொல்லிக்கொடுத்தவன் யார்?
எனவே, மனந்திரும்பியவருக்கேற்ற செயல்களைச் செய்து
காட்டுங்கள். 'ஆபிரகாமே எங்களுக்குத் தந்தை' என்று
சொல்லிக்கொள்ளத் துணிய வேண்டாம். இக்கற்களி
லிருந்தும் ஆபிரகாமுக்கு மக்களை எழுப்பக் கடவுள்
வல்லவர் என்று உங்களுக்குக் கூறுகிறேன். ஏற்கெனவே
9 அடி மரத்தில் கோடரி வைத்தாயிற்று; நற்கனி
கொடாத மரங்கமெல்லாம் வெட்டுண்டு தீயில்
போடப்படும்'' என்றார்.
10 அப்போது, ''நாங்கள் செய்யவேண்டியதென்ன?''
11 என்று மக்கள்கூட்டம் அவரைக் கேட்டது. அதற்கு
அவர், ''இரண்டு அங்கி வைத்திருப்பவன் இல்லாத
வனோடு பகிர்ந்துகொள்ளட்டும்: உணவு உடையவனும்
*12 அவ்வாறே செய்யட்டும்'' என்றார். ஆயக்காரர் ஞான
ஸ்நானம் பெற வந்து, ''போதகரே, நாங்கள் செய்ய
13 வேண்டியதென்ன?'' என்று அவரைக் கேட்க, அவர்,
''உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்குமேல் கேட்க
14 வேண்டாம்'' என்று பதிலளித்தார். ''நாங்கள்
செய்யவேண்டியதென்ன?'' என்று படை வீரரும்
கேட்டனர். அவரோ, ''ஒருவரையும் பயமுறுத்திப்
பணம் பறிக்கவேண்டாம். பொய்க் குற்றம் சாட்ட
வேண்டாம். கிடைக்கும் சம்பளமே போதுமென்
றிருங்கள்'' என்றார்.

---

* 'ஆயக்காரர்' —வரி தண்டுவதில் உரோமையருக்கு உதவிய யூதர்கள். அதன் காரணமாகவும் அவர்கள் இலஞ்சம் வாங்கி மக்களை வருத்தியதாலும் யூத மக்கள் அவர்களை அறவே வெறுத்ததோடு, பெரும் பாவிகள் எனவும் கருதினர்.

15 அந்நாட்களின் மக்கள் எதிர்பார்த்த நிலையில் இருக்
கவே, ஒருவேளை அருளப்பரே மெசியாவாக இருக்க
லாம் என்று எல்லாரும் உள்ளத்தில் எண்ணிக்கொண்
*16 டிருந்தனர். அப்போது அருளப்பர் அவர்களிடம்,
"நானே உங்களுக்கு நீரால் ஞானஸ்நானம் கொடுக்கி
றேன். ஆனால், என்னைவிட வல்லவர் ஒருவர் வருகிறார்.
அவருடைய மிதியடி வாரை அவிழ்க்க நான் தகுதி
யற்றவன். அவர் பரிசுத்த ஆவியாலும் நெருப்பாலும்
17 உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். அவர் தம்
களத்தைத் துப்புரவாக்கிக் கோதுமையைக் களஞ்சி
யத்தில் சேர்க்க சுளகைக் கொண்டுள்ளார். பதரையோ
18 அவியா நெருப்பில் சுட்டெரிப்பார்" என்றார். மேலும்
பல அறிவுரைகள் கூறி மக்களுக்கு நற்செய்தியை
அறிவித்தார்,

19 சிற்றரசனான ஏரோதை, அவன் சகோதரனின் மனைவி
யான ஏரோதியாள் பற்றியும், இன்னும் அவன்
இழைத்த எல்லாத் தீச்செயல்கள் பற்றியும் அருளப்பர்
20 கண்டிக்கவே, தான் செய்த கொடுமை எல்லாம்
போதாதென்று அவரைச் சிறையிலடைக்கவும்
செய்தான்.

## இயேசுவின் ஞானஸ்நானம்

21 மக்களெல்லாம் ஞானஸ்நானம் பெறும் வேளையில்
இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, செபித்துக்
22 கொண்டிருக்க, வானம் திறந்தது. பரிசுத்த ஆவி
புலப்படும் வடிவெடுத்து, புறாவைப்போல் அவர்மேல்
இறங்கினார். வானத்திலிருந்து குரலொலி உண்டாகி,

---

* ஞானஸ்நானத்தில் மாந்தர் பரிசுத்த ஆவியைப் பெறுவர். பொன்னைத் தீயில் புடமிடுவதுபோல் அவர் ஆன்மாவைச் சுத்திகரித்து, இறையரசில் சேரத் தகுந்ததாக்குவார். ( அ. ப. 2:3-4 காண்க. )

"நீரே என் அன்பார்ந்த மகன் உம்மிடம் பூரிப்படை
கிறேன்" என்றது.

## இயேசு சோதிக்கப்படல்

4 இயேசு பரிசுத்த ஆவியால் நிறைந்தவராய் யோர்
தான் ஆற்றங்கரையினின்று திரும்பியபின், பாலைவனத்
2 தில் தங்குமாறு ஆவியானவரால் நடத்தப்பெற்றார்
அங்கு நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார்,
அந் நாட்களில் அவர் ஒன்றும் உண்ணவில்லை. அந்
3 நாட்கள் கழிந்ததும், அவருக்குப் பசியெடுத்தது. அப்
பொழுது அலகை அவரை நோக்கி, "நீர் கடவுளின்
4 மகனானால் அப்பமாக மாறும்படி இந்தக் கல்லுக்குச்
சொல்லும்" என்றது. அதற்கு இயேசு: "'மனிதன்
உயிர்வாழ்வது அப்பத்தினால் மட்டுமன்று' என எழுதி
இருக்கிறதே" என்றார்.
5 பின்பு அலகை அவரை அழைத்துச் சென்று உலக
அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப் பொழுதில் அவ
6 ருக்குக் காட்டி, "இவற்றின்மேல் முழு அதிகாரத்தை
யும் இவற்றின் மகிமையையும் உமக்குக்கொடுப்பேன்.
ஏனெனில், இவை யாவும் என்னிடம் கையளிக்கப்
பட்டுள்ளன. என் விருப்பம்போல் எவருக்கும் இவற்
7 றைக் கொடுக்க முடியும். எனவே நீர் தெண்டனிட்டு
என்னை வணங்கினால் இவை யாவும் உம்முடையவை
8 ஆகும்" என்றது. அதற்கு இயேசு: "'உன் கடவுளா
கிய ஆண்டவரை வணங்கி அவரை மட்டுமே ஆராதிப்
பாயாக' என எழுதியிருக்கிறதே" என்றார்.
9 பின்னர் அலகை அவரை யெருசலேமுக்குக் கூட்டிச்
சென்று, கோயில் முகட்டில் நிறுத்தி, "நீர் கடவுளின்
‡10 மகனானால் இங்கிருந்து கீழே குதியும், ஏனெனில்

---

‡ சங். 90 : 11. 12.

‘உம்மைக் காக்கும்படி
தம் தூதர்களுக்குக் கட்டளையிடுவார்’
என்றும்,
11 ‘உமது கால் கல்லில் மோதாதபடி
அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத்
தாங்கிக் கொள்வார்கள்’
என்றும் எழுதியுள்ளது’’ என்றது.

12 அதற்கு இயேசு, ‘‘உன் கடவுளாகிய ஆண்டவரை
நீ சோதியாதே’ என்றும் சொல்லியிருக்கிறது’’ என்றார்.
13† இவ்வாறு, அலகை எல்லா விதத்திலும் இயேசுவைச்
சோதித்தபின், குறித்த காலம் வரும்வரைக்கும் அவரை
விட்டுச் சென்றது.

கலிலேயாவில் இயேசுவின் பணி

14 பின்னர், ஆவியானவரின் வல்லமை பூண்டவராய்
இயேசு கலிலேயாவுக்குத் திரும்பினார். அவரைப்பற்றிய
15 பேச்சு சுற்றுப்புறம் எங்கும் பரவியது. யூதர்களுடைய
செபக்கூடங்களில் அவர் போதித்துவந்தார். யாவரும்
அவரை மகிமைப்படுத்தினர்.

நாசரேத்தில் இயேசு

16 அவர் தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்திற்கு வந்
தார். வழக்கப்படி ஓய்வுநாளன்று செபக்கூடத்திற்கு
17 வந்து வாசிக்க எழுந்தார். இசையாஸ் எழுதிய இறை
வாக்குகளின் ஏட்டுச் சுருளை அவரிடம் கொடுத்தனர்.
அதை விரித்ததும் பின்வரும் பகுதியைக் கண்டார்.
18‡19 ‘ஆண்டவருடைய ஆவி என்மேலே,
ஏனெனில், என்னை அபிஷேகம் செய்துள்ளார்.

---

† ‘குறித்த காலம் வரும்வரைக்கும்’ அதாவது மீளவும் அவரைத் துன்புறுத்த வரும் நாள்வரை. 22 : 3 காண்.

‡ இசை. 61 : 1, 2 காண்.

எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும்,
சிறைப்பட்டோர் விடுதலையடைவர்,
குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும்.
ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும்,
ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும்,
அவர் என்னை அனுப்பினார்.'
20 பின்னர் ஏட்டைச் சுருட்டிப் பணிவிடைக்காரனிடம்
கொடுத்துவிட்டு அமர்ந்தார். செபக் கூடத்தில் இருந்த
வர்களின் கண்கள் அனைத்தும் அவரையே நோக்கிய
*21 வண்ணமாயிருந்தன. அப்போது அவர், "நீங்கள்
கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறை
22 வேறிற்று" என்று கூறலானார். யாவரும் அவரைப்
பாராட்டி, அவர் வாயினின்று எழுந்த அருள்மொழிகளை
வியந்து, "இவர் சூசையின் மகனன்றோ?" என்றனர்.
23 பின் அவர் அவர்களை நோக்கி, " 'மருத்துவனே,
உன்னையே குணமாக்கிக்கொள்' என்ற பழமொழியை
எனக்கே சொல்லிக் காட்டி, 'கப்பர்நகூம் ஊரில் நீர்
செய்ததாக நாங்கள் கேள்விப்பட்டதெல்லாம், உம்
சொந்த ஊராகிய இங்கேயும் செய்யும்' எனக் கண்
டிப்பாக நீங்கள் கூறுவீர்கள்" என்றார்.
24 மேலும், அவர், "உறுதியாக உங்களுக்குச் சொல்லு
கிறேன்: இறைவாக்கினர் எவரும் தம் சொந்த
25 ஊரில் ஏற்கப்படுவதில்லை உண்மையாக உங்களுக்குச்
சொல்லுகிறேன்; எலியாசின் காலத்தில் மூன்று ஆண்டு
கள் ஆறு மாதங்களாக வானம் வரண்டு நாடெங்கும்
பஞ்சம் உண்டானபோது, இஸ்ராயேல் நாட்டில் கைம்
26 பெண்கள் பலர் இருந்தனர். ஆயினும் சீதோன்
நாட்டின் சரெப்தா ஊர்க் கைம்பெண் ஒருத்தியிட
மன்றி வேறு எவரிடமும் எலியாஸ் அனுப்பப்படவில்லை.

---

* இவ் வார்த்தைகளால் இசையாஸ் முன் அறிவித்த மெசியாவும் (அரசரும்) இறைவனின் பணியாளரும் (மீட்பரும்) தாமே என்று இயேசு கூறுகிறார். (7 : 21-23 காண்).

27 இறைவாக்கினரான எலிசேயுவின் காலத்திலும் இஸ்
ராயேல் நாட்டில் தொழுநோயாளர் பலர் இருந்தனர்.
ஆயினும் சீரியா நாட்டு நாமானைத் தவிர வேறு
எவரும் குணமாக்கப்படவில்லை என்றார். இவற்றைக்
28 கேட்டுச் செபக்கூடத்தில் இருந்த அனைவரும் வெகுண்
29 டெழுந்து, அவரை ஊருக்கு வெளியே தள்ளி அவ்வூர்
அமைந்திருந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிடக்
30 கொண்டு சென்றனர். அவரோ அவர்களிடையே
நடந்து தம் வழியே போனார்.

பேய் பிடித்தவனைக் குணப்படுத்தல்

31 பின் கலிலேயா நாட்டுக் கப்பர்நகூம் ஊருக்கு வந்து,
32 அங்கே மக்களுக்கு ஓய்வுநாளில் போதித்து வந்தார்.
அவர் அதிகாரத் தொனியோடே பேசினதால் அவ
ருடைய போதனையைக் குறித்து மலைத்துப் போயினர்.
33 அப்போது, செபக்கூடத்தில் அசுத்த பேய் பிடித்த
34 ஒருவன் இருந்தான். அவன், "ஐயோ! நாசரேத்தூர்
இயேசுவே, எங்கள் காரியத்தில் ஏன் தலையிடுகிறீர்?
எங்களைத் தொலைக்க வந்தீரோ? நீர் யாரென்று எனக்
35 குத் தெரியும். நீர் கடவுளின் பரிசுத்தர்' என்று உரக்கக்
கத்தினான். அப்போது இயேசுவோ, "பேசாதே, இவனை
விட்டுப் போ" என்று அதட்டினார். அப்பொழுது, அப்
பேய் அவனை அவர்கள் நடுவே விழ்த்தி, அவனுக்கு ஒரு
36 தீங்குமின்றி அவனை விட்டு அகன்றது. அதனால்
திகில் எல்லாரையும் ஆட்கொள்ள, "இவர் வார்த்தை
எத்தகையதோ? அதிகாரத்தோடும் வல்லமையோடும்
இவர் அசுத்த பேய்களுக்கும் கட்டளையிடுகிறார். அவை
போய்விடுகின்றனவே!" என்று தங்களுக்குள்ளே பேசிக்
37 கொண்டனர். அவரைப்பற்றிய பேச்சு சுற்றுப்புற
மெல்லாம் பரவியது.

### இராயப்பரின் மாமியார்

38 பின்னர், அவர் செபக்கூடத்தைவிட்டு, சீமோன்
வீட்டிற்கு வந்தார். சீமோனுடைய மாமியார் கடுங்
காய்ச்சலால் துன்பப்பட்டுக் கொண்டிருந்ததால் அவ
39 ளுக்காக அவரிடம் வேண்டினர். அவர் அவளருகில்
நின்று காய்ச்சலைக் கடிந்து கொண்டார். காய்ச்சல்
அவளை விட்டு அகல, அவள் உடனே எழுந்து அவர்
களுக்குப் பணிவிடை புரிந்தாள்.

### புதுமைகள்

பொழுதுசாயும் வேளையில் யாவரும் தங்களிடையே
இருந்த பற்பல பிணியாளரை அவரிடம் கொண்டுவந்
தனர். ஒவ்வொருவர்மேலும் தம் கைகளை வைத்துக்
41 குணமாக்கினர். பேய்கள், "நீரே கடவுளின் மகன்"
என்று கூவிக்கொண்டு பலரிடமிருந்து வெளியேறின.
அவர் மெசியா என்று அவை அறிந்திருந்ததால் இயேசு
அவற்றை அதட்டி, பேசவிடவில்லை.

### கலிலேயா முழுவதும் இயேசுவின் பணி

42 பொழுது புலரவே, அவர் புறப்பட்டுத் தனிமையான
தோர் இடத்திற்குச் சென்றார். திரளான மக்கள் அவ
ரைத் தேடினர். அவரிடம் வந்ததும் தங்களை விட்டு
43 அகலாதபடி அவரை நிறுத்தப் பார்த்தனர். அவரோ
"நான் மற்ற ஊர்களுக்கும் கடவுளுடைய அரசைப்
பற்றிய நற்செய்தியை அறிவிக்கவேண்டும். இதற்கா
கவே அனுப்பப்பட்டேன்" என்று அவர்களிடம் கூறி
44 னார். அதன்படியே, கலிலேயாயவின் செபக் கூடங்களில்
தூது உரைத்து வந்தார்.

### முதல் அப்போஸ்தலர்களை அழைத்தது

**5** ஒருநாள் அவர் கெனேசரேத்து ஏரிக் கரையில் நின்று
கொண்டிருந்தபோது, திரளான மக்கள் கடவுளின்
வார்த்தையைக் கேட்பதற்கு அவரை நெருக்கிக்கொண்

2 டிருந்தனர். அப்போது, ஏரிக் கரையில் இரண்டு படகு
கள் இருக்கக் கண்டார். மீனவர்களோ படகை விட்டு
3 இறங்கி வலைகளை அலசிக்கொண்டிருந்தனர். அப்படகு
களுள் ஒன்று சீமோனுடையது, அதில் ஏறி, கரையி
லிருந்து சற்றே தள்ளச் சொல்லி, அமர்ந்துகொண்டு
4 படகிலிருந்தே கூட்டத்திற்குப் போதிக்கலானார். பேசி
முடிந்ததும் சீமோனிடம், ஆழத்திற்குத் தள்ளிக்
கொண்டுபோய் மீன் பிடிக்க உங்கள் வலைகளைப்
போடுங்கள்'' என்று கூறினார். அதற்குச் சீமோன்,
5 ''குருவே, இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு ஒன்றும்
கிடைக்கவில்லை; ஆயினும் உமது சொல்லை நம்பி வலை
6 களைப் போடுகிறேன்'' என்றார். அவ்வாறே செய்ததும்
ஏராளமான மீன்களை வளைத்துப் பிடித்தனர். வலைகள்
7 கிழியத் தொடங்கவே, மற்றப் படகிலிருந்த தங்கள்
தோழர்களுக்குச் சைகை காட்டி உதவிக்கு வருமாறு
அழைத்தனர். அவர்களும் வந்து படகுகள் இரண்டை
யும் நிரப்ப, அவை மூழ்குவனபோல் இருந்தன.
8 இதைக் கண்ட சீமோன் இராயப்பர் இயேசுவின் காலில்
விழுந்து, ''ஆண்டவரே, பாவியெனை விட்டு அகலும்''
9 என்றார். அவரும் அவரோடிருந்த அனைவரும், அகப்
10 பட்ட மீன்பாட்டைக் கண்டு திகிலுற்றனர். சீமோ
னுடைய கூட்டாளிகளான செபதேயுவின் மக்கள்,
யாகப்பரும் அருளப்பரும் அவ்வாறே திகிலுற்றனர்.
இயேசுவோ சீமோனை நோக்கி, ''அஞ்சாதே, இன்றுமுதல்
11 நீ மனிதர்களைப் பிடிப்பவன் ஆவாய்'' என்றார். அவர்
கள் படகுகளைக் கரைசேர்த்ததும், யாவற்றையும்
துறந்து அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

தொழுநோய் குணமாதல்

12 அவர் ஓர் ஊரில் இருந்தபோது, இதோ! உடலெல்
லாம் தொழுநோயாயிருந்த ஒருவன் இயேசுவைக் கண்டு
முகங்குப்புற விழுந்து, ''ஆண்டவரே, நீர் விரும்பினால்

13 என்னைக் குணமாக்க உம்மால் கூடும்'' என்று மன்றாடி
ஞன். அவர் தம் கையை நீட்டி, "விரும்புகிறேன்,
குணமாகு'' என்று சொல்லி அவனைத் தொட்டார்.
*14 உடனே தொழுநோய் அவனை விட்டு நீங்கியது. "ஒரு
வருக்கும் இதைச் சொல்லவேண்டாம்'' என்று அவ
னுக்குக் கட்டளையிட்டு, "போய், உன்னைக் குருவிடம்
காட்டி, நீ குணமானதற்காக மோயீசன் கற்பித்தபடி
காணிக்கை செலுத்து. அது அவர்களுக்கு அத்தாட்சி
யாகும்'' என்றார்.
15 அவரைப்பற்றிய பேச்சு இன்னும் மிகுதியாய்ப் பர
விற்று. அவர் சொல்வதைக் கேட்கவும், தங்கள் பிணி
கள் நீங்கவும் மக்கள் திரள் திரளாக அவரிடம் வரு
16 வார்கள். அவரோ தனிமையான இடங்களுக்குச்
சென்று செபஞ் செய்வது வழக்கம்.

திமிர்வாதம் குணமாதல்

17† ஒருநாள் அவர் போதித்துக் கொண்டிருக்கும்பொழுது
கலிலேயா, யூதேயா நாடுகளிலுள்ள எல்லா ஊர்களி
லிருந்தும் யெருசலேமிலிருந்தும் வந்த பரிசேயரும் சட்ட
வல்லுநரும் அமர்ந்திருந்தனர். நோய் நீங்குவதற்கென
ஆண்டவருடைய வல்லமை இயேசுவோடு இருந்தது.
அப்போது இதோ! திமிர்வாதங்கொண்ட ஒருவனைச்
18 சிலர் கட்டிலோடு தூக்கி வந்து உள்ளே கொண்டு
போய் அவர் முன்னே கிடத்த முயன்றனர். கூட்ட
19 மிகுதியால் உள்ளே கொண்டுபோக வழியறியாது கூரை
மேலேறி ஓடுகளைப் பிரித்து அவனைக் கட்டிலோடு நடு
வில் இயேசுவின் முன்பாக இறக்கினர். அவர்களுடைய

---

* 'அத்தாட்சி — எதற்கு? கடவுளின் அரசு வந்து விட்டது என்பதற்கு (11 : 20 காண்).

† 'பரிசேயர்' மோயீசனின் சட்டத்தை நுணுநுணுக்கமாய் அனுசரிக்கும் கட்சியைச் சேர்ந்தவர்கள் (11:37-44; 18:9-14 காண்).

20 விசுவாசத்தைக் கண்டு, "அன்பனே, உன் பாவங்கள்
மன்னிக்கப்பட்டன" என்றார்.
21† மறைநூல் அறிஞரும் பரிசேயரும், "கடவுளைத் தூஷித்
துப் பேசும் இவர் யார்? கடவுள் ஒருவரே யன்றிப்
பாவத்தை மன்னிக்க வல்லவர் யார்?" என்று எண்ணி
னர். அவர்களுடைய எண்ணங்களை அறிந்த இயேசு
22 அவர்களிடம், "நீங்கள் உள்ளத்தில் எண்ணுவதென்ன?
23* எது எளிது? 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்
பதா? 'எழுந்து நட' என்பதா?" என்று கேட்டார்.
24 "மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு
அதிகாரம் உண்டு என்று நீங்கள் உணருமாறு"—திமிர்
வாதக்காரனை நோக்கி—"நான் உனக்குச் சொல்லு
கிறேன்: எழுந்து, உன் கட்டிலைத் தூக்கிக் கொண்டு
வீட்டிற்குப் போ" என்றார். உடனே அவன் அவர்
25 கள் எதிரில் எழுந்து, தன் படுக்கையைத் தூக்கிக்
கொண்டு, கடவுளை மகிமைப்படுத்திக்கொண்டே வீடு
சென்றான்.
26 அனைவரும் திகைப்புற்றுக் கடவுளை மகிமைப்படுத்தி
னர். அன்றியும் அச்சம் மேலிட்டவராய், "இன்று புது
மையானவற்றைக் கண்டோம்" என்றனர்.

### லேவியை அழைத்தது

27 அதன்பின் வெளியே சென்று, சுங்கத்துறையில் அமர்ந்
திருந்த லேவி என்ற ஆயக்காரனைக் கண்டு, "என்னைப்
23 பின் செல்" என்றார். அவர் எழுந்து, அனைத்தையும்
விட்டு அவரைப் பின்சென்றார்.
29 லேவி தம் வீட்டில் அவருக்கு ஒரு பெரிய விருந்து
செய்தார். ஆயக்காரரும் பிறரும் பெருங்கூட்டமாய்

---

† 'பரிசேயர்'—மோயீசனின் சட்டத்தை நுணுநுணுக்கமாய் அனுசரிக்கும் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

* பிணி தீர்க்கும் வல்லமை பாவம் தீர்க்கும் வல்லமை ஆகிய இருவகை வல்லமை ஆண்டவருக்கு இயல்பாக உண்டு. இவ்விரண்டிலும் பாவம் போக்கும் வல்லமையே மேலானது, மற்றையது இதற்கு ஓர் அறிகுறியாக இங்கு அமைகின்றது.

30 அவர்களோடு பந்தியில் அமர்ந்திருந்தனர். பரிசேயரும்
அவர்களைச் சார்ந்த மறைநூல் அறிஞரும் முணு
முணுத்து அவருடைய சீடர்களிடம் ''ஆயக்காரரோ
31 டும் பாவிகளோடும் நீங்கள் உண்பதும் குடிப்பதும்
ஏன்?'' என்றனர். இயேசு அதற்கு, ''மருத்துவன் நோய்
32 அற்றவர்க்கன்று, நோயுற்றவர்க்கே தேவை. நீதிமான்
களை அன்று, மனந்திரும்பும்படி பாவிகளையே அழைக்க
வந்துள்ளேன்'' என்று மறுமொழி கூறினார்.

நோன்புபற்றிய தர்க்கம்

33 அவர்களோ, ''அருளப்பரின் சீடர் அடிக்கடி நோன்பு
இருந்து செபம் செய்கின்றனர். பரிசேயர்களின் சீடரும்
அவ்வாறே செய்கின்றனர். உம்முடைய சீடரோ, உண்
பதும் குடிப்பதுமாக இருக்கின்றனரே'' என்று அவரிடம்
34 சொன்னார்கள். அதற்கு இயேசு, ''மணமகன் தன்
தோழர்களோடு இருக்குமளவும் அவர்களை நோன்
35 பிருக்கச் செய்யக்கூடுமா? மணமகன் அவர்களை விட்டுப்
பிரியும் நாள் வரும், அப்பொழுஅ அவர்கள் நோன்பு
இருப்பார்கள்'' என்றார்.
36* மேலும் அவர்களுக்கு ஓர் உவமை கூறினார். அதாவது,
''புதிய போர்வையிலே ஒரு துண்டைக் கிழித்துப்
பழைய போர்வைக்கு ஒட்டுப் போடுவார் யாருமில்லை.
அவ்வாறு போட்டால் புதியதும் கிழிபடும். அதிலிருந்து
கிழித்த துண்டும் பழையதோடு பொருந்தாது. புது
37 திராட்சை இரசத்தைப் பழஞ் சித்தைகளில் ஊற்றி
வைப்பவர் எவருமில்லை. வைத்தால், புது இரசம் சித்
தைகளைக் கிழித்துச் சிந்திப்போவதும் அல்லாமல்,
சித்தைகளும் பாழாகும். ஆனால், புதுத் திராட்சை
38 இரசத்தைப் புதுச் சித்தைகளில் ஊற்றி வைக்க வேண்

* பழைய போர்வை, பழஞ்சித்தை யூதருடைய பழைய வேதத்தையும், புதிய போர்வை, புது இரசம் இயேசு போதிக்கும் புதிய வேதத்தையும் குறிக்கின்றன.

39 டும். பழைய திராட்சை இரசத்தைக் குடித்தவன்
புதியதை விரும்புவதில்லை. பழையதே சிறந்தது என்
பான்'' என்றார்.

### ஓய்வுநாளில் கதிர் கொய்தல்

6 ஓர் ஓய்வுநாளன்று விளைச்சல் வழியே அவர் செல்லும்
பொழுது, சீடர் கதிர்களைக் கொய்து கையில் கசக்கித்
தின்றனர். பரிசேயருள் சிலர், ''ஓய்வுநாளில் செய்யத்
2 தகாததை நீங்கள் செய்வதேன்?'' என்றனர். அதற்கு
3 இயேசு, ''தாவீதும் அவருடன் இருந்தவர்களும் பசியாய்
இருந்தபொழுது, அவர் என்ன செய்தார் என்று நீங்
கள் வாசித்ததில்லையோ? அவர் கடவுளின் இல்லத்தில்
4 நுழைந்து, குருக்கள் தவிர மற்றெவரும் உண்ணக்
கூடாத காணிக்கை அப்பங்களை எடுத்து, தாம் உண்டது
மன்றி கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தாரே'' என்
5 றார். மேலும், ''மனுமகன் ஓய்வுநாளுக்கு ஆண்டவர்''
என்றார்.

### சூம்பிய கை ஓய்வுநாளில் குணமானது

6 மற்றோர் ஓய்வுநாளில் செபக்கூடத்திற்குப் போய்ப்
போதிக்கலானார். வலது கை சூம்பிப்போன ஒருவன்
7 அங்கு இருந்தான். மறைநூல் அறிஞரும் பரிசேயரும்
அவரிடம் குற்றம் காணும்படி, ஓய்வுநாளில் குணமாக்கு
வாரா என்று பார்த்துக்கொண்டே இருந்தனர், அவர்
8 களுடைய எண்ணங்களை அவர் அறிந்து, சூம்பிய கை
யனை நோக்கி, ''எழுந்து நடுவில் நில்'' என்றார். அவன்
9 எழுந்து நின்றான். இயேசு அவர்களிடம், ''உங்களை
ஒன்று கேட்கிறேன்; ஓய்வுநாளில் எது செய்வது முறை?
பிறருக்கு நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயி
ரைக் காப்பதா, அழிப்பதா?'' என்று கேட்டார். எல்
10 லாரையும் சுற்றி ஒரு பார்வை பார்த்தபின், அவனை
நோக்கி, ''கையை நீட்டு'' என்றார். அப்படியே செய்

11 தான்; கை குணமாயிற்று. அவர்களோ கோபவெறி
கொண்டு இயேசுவை என்ன செய்யலாமென்று கலந்து
பேசலாயினர்.

### பன்னிருவரை அழைத்தது

12 அந்நாட்களில் அவர் செபிக்கும்படி மலைக்குச் சென்று
13† கடவுளை வேண்டுவதில் இரவெல்லாம் கழித்தார்.
பொழுது புலர்ந்ததும், தம் சீடரை அழைத்து அவர்
களுள் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு
14 'அப்போஸ்தலர்' என்று பெயரிட்டார். அவர்கள்
யாரெனில்: இராயப்பர் என்று அவர் பெயரிட்ட
சீமோன், அவருடைய சகோதரர் பெலவேந்திரர், யாகப்
15* பர், அருளப்பர், பிலிப்பு, பார்த்தொலொமேயு, |
16 மத்தேயு, தோமையார், அல்பேயின் மகன் யாகப்பர்,
'தீவிரவாதி' எனப்படும் சீமோன், | யாகப்பரின் சகோ
தரர் யூதா, காட்டிக்கொடுத்தவனான யூதாஸ் இஸ்காரி
யோத்தும் ஆவர்.

### மக்கள் திரள் இயேசுவைப் பின்தொடர்தல்

17 அவர் அவர்களோடு இறங்கிவந்து சமதளமான ஓரிடத்
திலே நின்றார். அங்கே அவருடைய சீடர்கள் பெருங்
கூட்டமாய் இருந்தனர். யூதேயா முழுவதிலிருந்தும்
யெருசலேமிலிருந்தும், தீர் சீதோன் கடற்கரையிலிருந்
தும் மாபெரும் திரளாக மக்களும் வந்திருந்தனர். அவர்
சொல்லுவதைக் கேட்கவும், தங்கள் நோய்கள் நீங்கிக்
18 குணமாகவும் அவர்கள் வந்திருந்தனர். அசுத்த ஆவி
19 களால் தொல்லைப்பட்டவர்கள் குணமானார்கள். அவரிட
மிருந்து வல்லமை வெளிப்பட்டு யாவரையும் குண
மாக்கியதால் அங்கு திரண்டிருந்த யாவரும் அவரைத்
தொடுவதற்கு முயன்றனர்.

---

† 'அப்போஸ்தலர்'—தூதுவர் என்று பொருள்படும்.

* 'தீவிரவாதி' — உரோமையருடைய ஆதிக்கத்தை வன்மையுடன் எதிர்த்து வந்த ஒரு கட்சியினர் 'தீவிரவாதிகள்' எனப்பட்டனர், தாங்கள் நிகழ்த்திய இந்த எதிர்ப்பில் வன்முறைகளைக் கையாளப் பின்வாங்காதவர்கள். அங்ஙனம் செய்தால் மெசியா விரைவாகவே வரக்கூடும் என்று எண்ணியவர்கள்.

மலைப்பொழிவு—பேறுபெற்றோர் யாவர் ?

20 அவரோ தம் சீடரை ஏறெடுத்துப் பார்த்துக் கூறிய
தாவது ;
"ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றவர்கள்;
ஏனெனில் கடவுளின் அரசு உங்களதே.
21* "இப்பொழுது பசியாய் இருப்பவர்களே, நீங்கள்
பேறுபெற்றவர்கள்.
ஏனெனில், நிறைவு பெறுவீர்கள்.
இப்பொழுது அழுபவர்களே, நீங்கள்
பேறுபெற்றவர்கள்.
ஏனெனில், சிரிப்பீர்கள்.
22 மனுமகன் பொருட்டு மனிதர் உங்களை வெறுத்துப்
புறம்பாக்கி வசை கூறி,உங்கள் பெயரே ஆகாது என்று
23 இகழ்ந்து ஒதுக்கும்பொழுது நீங்கள் பேறுபெற்றவர்
கள். அந்நாளில் துள்ளி அகமகிழுங்கள். ஏனெனில்,
இதோ! வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியா
கும். அவர்களுடைய முன்னோரும் இறைவாக்கினருக்கு
அவ்வாறே செய்தனர்.

சாபங்கள்

24† "ஆனால் பணக்காரர்களே, உங்களுக்கு ஐயோ கேடு!
ஏனெனில், உங்களுக்கு ஆறுதல் கிடைத்துவிட்டது.
25† இப்பொழுது திருப்தியாயிருப்பவர்களே, உங்களுக்கு
ஐயோ கேடு!
ஏனெனில், பசியாயிருப்பீர்கள்.
இப்பொழுது சிரிப்பவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு!
ஏனெனில், துயருற்று அழுவீர்கள்.
26 மனிதர் எல்லாரும் உங்களைப் புகழும்பொழுது உங்
களுக்கு ஐயோ கேடு!
ஏனெனில், அவர்களுடைய முன்னோரும் போலித்
தீர்க்கதரிசிகளுக்கு அவ்வாறே செய்தனர்.

---

* பசியாய் இருப்பவர்களே—1:53 காண்.

‡ லூக். 16:25.

† திருப்தியாயிருப்பவர்களே—லூக். 16:19-31.

பகைவருக்கு அன்பு செய்தல்

27 "நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கும் உங்
களுக்குக் கூறுகிறேன்: உங்கள் பகைவர்களுக்கு அன்பு
செய்யுங்கள். உங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை
செய்யுங்கள்.
28 "உங்களைச் சபிக்கிறவர்களுக்கு ஆசி கூறுங்கள். உங்
களைத் தூற்றுவோருக்காகச் செபியுங்கள்.
29 "ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு, மறு கன்னத்தை
யும் காட்டு. உன் மேலாடையைப் பறிப்பவனுக்கு,
உள்ளாடையையும் மறுக்காதே.
30 "உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு. உன்
உடைமைகளைப் பறிப்பவனிடமிருந்து திருப்பிக் கேட்
காதே.
31 "பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று
விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்
குச் செய்யுங்கள்.
32 "உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே நீங்கள் அன்பு
செய்தால், அதனால் உங்களுக்கு என்ன பலன்? பாவி
களும் தமக்கு அன்பு செய்பவர்களுக்கு அன்பு செய்கின்
றனரே.
33 "உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கே நீங்கள் நன்மை
செய்தால், அதனால் உங்களுக்கு என்ன பலன்? பாவி
களும் அவ்வாறு செய்கின்றனரே.
34 "எவரிடமிருந்து திரும்பிப்பெற எதிர்பார்க்கிறீர்களோ,
அவர்களுக்கே கடன் கொடுத்தால் உங்களுக்கு என்ன
பலன்? ஏனெனில், சரிக்குச் சரி பெறுமாறு பாவிகளும்
பாவிகளுக்குக் கடன் கொடுக்கின்றனரே.
35 "உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். அவர்
களுக்கு நன்மை புரியுங்கள். ஒன்றும் எதிர்பாராமல்
கடன் கொடுங்கள். அப்போது உங்களுக்கு மிகுதியான
கைம்மாறு கிடைக்கும். உன்னதரின் மக்களாயிருப்பீர்
கள். ஏனெனில், அவர் நன்றிகெட்டவர்க்கும் தீயவர்க்
கும் பரிவு காட்டுகிறார்.

### தீர்ப்பிடாதீர்கள்

36 "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல்,
37 நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள். தீர்ப்பிடா
தீர்கள், நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாகமாட்டீர்கள்,
கண்டனம் செய்யாதீர்கள். கண்டனம் பெறமாட்
டீர்கள்.

38 மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள். கொடுங்கள்.
உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச்
சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில்
போடுவார்கள். ஏனெனில், எந்த அளவையால் அளப்
பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்
39 படும்" அவர்களுக்கு ஓர் உவமையும் கூறினார்: "குரு
டன் குருடனுக்கு வழிகாட்ட முடியுமா? இருவரும் குழி
40 யில் விழமாட்டார்களா? | சீடன் குருவுக்கு மேற்
பட்டவனல்லன். தேர்ச்சிபெற்ற எவனும் தன் குரு
41 வைப் போன்றிருப்பான். உன் கண்ணிலே உள்ள
விட்டத்தைக் கவனியாது, உன் சகோதரன் கண்ணி
லிருக்கும் துரும்பைப் பார்ப்பதேன்? உன் கண்ணிலுள்ள
42 விட்டத்தைப் பார்க்காத நீ, உன் சகோதரனை நோக்கி,
'தம்பி, உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுக்க விடு'
என்று எப்படிச் சொல்லலாம்? வெளிவேடக்காரனே,
முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்தெறி,
பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை
எடுக்க நன்றாய்க் கண் தெரியும்.

### நற்செயல் புரிவதன் அவசியம்

43 "கெட்ட கனி தரும்; நல்ல மரமில்லை; நல்லகனிதரும்
44 கெட்ட மரமில்லை; ஒவ்வொரு மரத்தையும் அறிவது
அதனதன் கனியாலே. ஏனெனில், முட்செடியில் அத்
திப் பழம் பறிப்பாருமில்லை; நெருஞ்சியில் திராட்சைக்
குலை கொய்வாருமில்லை. நல்லவன் தன் உள்ளமாகிய

45 நற்கருவூலத்தினின்று நல்லவற்றை எடுத்துக்கொடுக்
கிறான். தீயவனோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக்
கொடுக்கிறான். ஏனெனில், உள்ளத்தின் நிறைவி
னின்றே வாய் பேசும்.

46 ‘‘நான் சொல்லுவதைச் செய்யாமல் ‘ஆண்டவரே,
ஆண்டவரே’ என்று என்னை நீங்கள் அழைப்பானேன்?
47 ‘‘என்னிடம் வந்து என் வார்த்தைகளை கேட்டு அதன்
படி நடப்பவன் எவனும் யாருக்கு ஒப்பாவான் என்று
48 உய்களுக்குக் கூறுவேன். அவன், ஆழத்தோண்டி.
பாறைமீது அடித்தளம் அமைத்து,வீடு கட்டுகிறவனுக்கு
ஒப்பாவான். ஆறு பெருக்கெடுத்து வீட்டின்மீது மோதி
யும், அதை அசைக்க முடியாமல் போயிற்று. ஏனெ
49 னில், நன்றாகக் கட்டியிருந்தது. ஆனால், கேட்டும் அதன்
படி நடக்காதவன், அடித்தளமில்லாமல் மண்மீது வீடு
கட்டியவனுக்கு ஒப்பாவான். ஆறு அதன்மீது மோதிய
தும் அது இடிந்து விழுந்தது. அவ்வீட்டிற்குப் பெரும்
அழிவு ஏற்பட்டது.’’

### ஊழியன் குணமாதல்

**7** இவை எல்லாம் மக்களுக்குச் சொல்லி முடித்தபின்
2* இயேசு கப்பர்நகூம் ஊருக்கு வந்தார். நூற்றுவர் தலை
3 வன் ஒருவனுடைய ஊழியன் நோயுற்றுச் சாகக்கிடந்
தான். தலைவன் அவன்மீது மிருந்த பற்றுக்கொண்டி
தான். இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டு, யூதரின்
4 மூப்பரை அவரிடம் அனுப்பித் தன் ஊழியனைக் காப்
பாற்ற வருமாறு வேண்டினான். அவர்களும் இயேசு
5 விடம் வந்து, வருந்திக் கேட்டதாவது: ‘‘உம்மிடம் இவ்

* ‘நூற்றுவர் தலைவன்’—நூறு போர் வீரருக்குத் தலைவனாயிருந்த உரோமைப் பட்டாள அதிகாரி.

வரம் பெறுவதற்கு அவர் தகுதியுள்ளவரே. ஏனெனில்.
6 நம் மக்கள்மீது அவருக்கு அன்பு மிகுதி. நமக்கெனச்
செபக்கூடம் கட்டியிருக்கிறார்.'' இயேசு அவர்களூடப்
போனார். வீட்டுக்குச் சற்றுத் தொலைவிலிருந்தபொழுதே
அவரிடம் நூற்றுவர் தலைவன் நண்பர்களை அனுப்பி,
7 "ஆண்டவரே, இவ்வளவு தொந்தரை வேண்டாம்;
நீர் என் இல்லத்துள் வர நான் தகுதியற்றவன். அத
னால்தான் நானும் உம்மிடம் வரத் தகுதியற்றவன்
8 எனக் கருதினேன். ஒரு வார்த்தை சொல்லும், என்
ஊழியன் குணமாகட்டும். ஏனெனில், நான் அதிகாரத்
திற்கு உட்பட்டவனாயிலும் எனக்கு அடியிலும் படை
வீரர் உள்ளனர். ஒருவனை நோக்கிப் 'போ' என்றால்
போகிறான்; வேறொருவனை நோக்கி 'வா' என்றால் வரு
கிறான். என் ஊழியனைப் பார்த்து 'இதைச் செய்' என்
9 றால் செய்கிறான்'' என்றான். அதைக் கேட்ட இயேசு
அவனை வியந்து தம்மைப் பின்தொடரும் மக்கட் கூட்
டத்தைத் திரும்பிப் பார்த்து, "இஸ்ராயேல் மக்களிடை
யிலும் இத்துணை விசுவாசத்தை நான் கண்டதில்லை
என உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார். அனுப்
10 பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்து ஊழியன்
உடல் நலத்தோடு இருப்பதைக் கண்டார்கள்.

### கைம்பெண்ணின் மகன் உயிர் பெறுதல்

11 அதன்பின் நயீன் என்ற ஊருக்குச் சென்றார் அவரு
டைய சீடரும், திரளான மக்களும் அவரோடு சென்று
12 கொண்டிருந்தனர். இயேசு ஊர் வாயிலை நெருங்கிய
பொழுது, இறந்த ஒருவனைத் தூக்கி வந்தனர். தாய்க்கு
அவன் ஒரே பிள்ளை. அவளோ கைம்பெண் ஊராரும்
13 அவளோடு பெருங்கூட்டமாக இருந்தனர் அவளைக்
14 கண்டு ஆண்டவர் அவள்மீது மனமிரங்கி ''அழாதே''
என்றார். பின்பு முன்னால் சென்று பாடையைத்
தொட்டார். அதைத் தூக்கி வந்தவர்கள் நின்றார்கள்.

நின்றதும், ‘‘இளைஞனே, உனக்கு நான் சொல்லுகி
15 றேன், எழுந்திரு’’ என்றார். இறந்தவன் எழுந்து உட்
*16 கார்ந்து பேசத் தொடங்கினன். தாயிடம் அவனை ஒப்ப
டைத்தார். அனைவரையும் அச்சம் ஆட்கொள்ள, ‘‘நம்
மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றி
யுள்ளார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்
17 கிறார்’’ என்று அவர்கள் கடவுளை மகிமைப்படுத்தி
னார்கள். அவரைப்பற்றிய பேச்சு யூதேயா முழுவதிலும்
சுற்றுப்புறமெங்கும் பரவியது.

### அருளப்பரின் கேள்வியும் இயேசுவின் சான்றும்

18 அருளப்பரின் சீடர் இவற்றையெல்லாம் அவருக்குத்
19 தெரிவித்தனர். அருளப்பர் தம் சீடருள் இருவரை
அழைத்து, ‘‘வரப்போகிறவர் நீர் தாமோ? வேறொரு
வரை எதிர்பார்க்க வேண்டுமோ?’ என்று கேட்டு
வர ஆண்டவரிடம் அனுப்பினார்.
20 அவர்கள் அவரிடம் வந்து, ‘‘ ‘வரப்போகிறவர் நீர்
தாமோ? வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமோ?’
என்று கேட்குமாறு ஸ்நாபக அருளப்பர் எங்களை உம்
21 மிடம் அனுப்பினார்’’ என்று சொன்னார்கள். அந்நேரத்
தில் நோய் நோய்க்காடுகளாலும், பொல்லாத ஆவி
களாலும் வருந்தியவர்களைக் குணமாக்கி, குருடர் பல
†22 ருக்குப் பார்வை அளித்துக்கொண்டிருந்தார். அவர்
அவர்களுக்கு மறுமொழியாக, ‘‘நீங்கள் போய்க்
கண்டதையும் கேட்டதையும் அருளப்பருக்கு அறிவி
யுங்கள்: குருடர் பார்க்கின்றனர், முடவர் நடக்கின்

---

* லூக். 1 : 68 காண்

† இவ்வார்த்தைகளால், இசையாஸ் முன்னறிவித்த மெசியாவும் (அரசரும்). இறைவனின் பணியாளரும் (மீட்பரும்) தாமே என்று இயேசு எண்பிக்கிறார். (லூக். 4 : 16 - 22; காண்.)

றனர், தொழுநோயாளர் குணமடைகின்றனர், செவி
டர் கேட்கின்றனர், இறந்தவர் உயிர்க்கின்றனர்.
23 எளியவருக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. என்னைப்
பற்றி இடறல் படாதவன் பேறுபெற்றவன்'' என்றார்.
24 அருளப்பருடைய தூதர்கள் சென்ற பின்பு அவரைப்
25 பற்றி மக்கட்கூட்டத்திற்கு இயேசு சொன்னதாவது:
''எதைப் பார்க்கப் பாலைவனத்திற்குப் போனீர்கள்?
காற்றில் அசையும் நாணலையோ? பின் எதைப் பார்க்க
போனீர்கள்? மெல்லிய ஆடை அணிந்த மனிதனையோ?
இதோ! அலங்கார ஆடை அணிந்து இன்பமாய் வாழ்
26 வோர் அரச மாளிகையில் உள்ளனர் பின் எதைத்தான்
பார்க்கப் போனீர்கள்? இறைவாக்கினரையா? ஆம்
இறைவாக்கினர்க்கும் மேலானவரைத்தான் என்று
உங்களுக்குச் சொல்லுகிறேன்.

*27 ''இவரைப்பற்றித்தான், 'இதோ! என் தூதனை உமக்கு
முன்பாக அனுப்புகிறேன், அவர் உமக்குமுன் உமது
வழியை ஆயத்தம் செய்வார்' என்று எழுதியுள்ளது.
28 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பெண்களிடம்
பிறந்தவர்களுள் அருளப்பருக்கு மேலானவர் யாரு
மில்லை. ஆயினும் கடவுளுடைய அரசில் மிகச் சிறியவன்
29 அவரிலும் பெரியவன். அருளப்பர் சொன்னதை மக்கள்
எல்லாரும் கேட்டு, அவர் கொடுத்த ஞானஸ்நானத்
தைப் பெற்றுக் கடவுளின் திட்டம் ஏற்கத்தக்கது என்று
30 காட்டினார்கள். ஆயக்காரரும்கூட ஞானஸ்நானம்
பெற்றனர். ஆனால் பரிசேயரும் சட்ட வல்லுநரும் அவர்
கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெறாமல் கடவுளுடைய
திட்டத்தை பொறுத்தமட்டில் வீணாக்கினார்கள்.

---

* 'கடவுளுடைய அரசில்' - கிறிஸ்துநாதரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசாகிய திருச்சபையில்,

### தம் காலத்தவரைப்பற்றி இயேசுவின் தீர்ப்பு

31 ''இத்தலைமுறையின் மக்களை யாருக்கு ஒப்பிடுவேன்?
32 அவர்கள் யாருக்கு ஒப்பானவர்கள்? | பொது இடத்தில்
உட்கார்ந்து ஒருவரை ஒருவர் அழைத்து,

'நாங்கள் குழல் ஊதினோம்,
நீங்கள் ஆடவில்லை;
நாங்கள் புலம்பினோம்,
நீங்கள் அழவில்லை'

33 என்று கூறும் சிறுவரைப் போன்றவர்கள் அவர்கள்.
ஏனெனில், ஸ்நாபக அருளப்பர் வந்தபோது அப்பம்
34 உண்ணவில்லை, திராட்சை இரசம் குடிக்கவில்லை, அவ
ரைப் பேய் பிடித்தவன் என்று சொல்லுகிறீர்கள். மனு
மகன் வந்தபோதோ உண்டார்; குடித்தார். அவரை,
இதோ! போசனப் பிரியன், குடிகாரன், ஆயக்காரருக்
35 கும் பாவிகளுக்கும் நண்பன்' என்று சொல்லுகிறீர்கள்.
ஆனால் தேவஞானம் சரியென்று அதை ஏற்றுக்கொண்ட
மக்கள் அனைவராலும் விளங்கிற்று.''

### பாவிக்கு மன்னிப்பு

36 பரிசேயன் ஒருவன் அவரைத் தன்னுடன் உண்பதற்கு
அழைத்தான். அவரும் பரிசேயனுடைய வீட்டுக்கு
வந்து உணவருந்த அமர்ந்தார். இதோ! பாவி ஒருத்தி
37 அந்நகரிலே இருந்தாள். பரிசேயனுடைய வீட்டில்
அவர் உணவருந்தப்போகிறார் என்று அறிந்து பரிமளத்
தைலம் நிறைந்த படிகச் சிமிழ் ஒன்றை எடுத்து வந்
38 தாள். அவருடைய கால்மாட்டில் பின்புறமாக இருந்து,
அழுதுகொண்டே அவர் பாதங்கள் மேல் கண்ணீர்
பொழிந்து அவற்றைக் கூந்தலால் துடைத்து, முத்த
மிட்டு அப்பாதங்களில் தைலம் பூசினாள்.
39 அவரை அழைத்த பரிசேயன் இதைக் கண்டு, ''இவர்
இறைவாக்கினராய் இருந்தால் தம்மைத்தொடும் இவள்

யார், எத்தகையவள் என்று அறிந்திருப்பார். இவளோ
40 பாவி'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். இயேசு
அவனை நோக்கி, ''சீமோனே, நான் உமக்கு ஒன்று
சொல்லவேண்டும்'' என்று கூற, அவனும் ''போதகரே,
41 சொல்லும்'' என்றான். ''கடன் கொடுப்பவன் ஒருவ
னுக்கு கடன்காரர் இருவர் இருந்தனர். ஒருவன் ஐந்
நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்
42 காசும் கடன்பட்டிருந்தனர். கடனைத் திருப்பிக்
கொடுக்க அவர்களால் முடியாமற் போகவே இருவர்
கடனையும் மன்னித்துவிட்டான், அவர்களுள் யார்
அவனுக்கு அதிகமாக அன்பு செய்வான்?'' ''யாருக்கு
43 அதிகக் கடனை மன்னித்தானோ அவன்தான் என்று
நினைக்கிறேன்'' என்றான் சீமோன். ''நீர் சொன்னது
சரி'' என்றார் அவர்.

44 பின்பு அப்பெண்ணின் பக்கம் திரும்பி, சீமோனிடம்,
''இவளைப் பார்த்தீரா? நான் உம் வீட்டுக்குள் வந்த
பொழுது, நீர் என் பாதங்களைக் கழுவத் தண்ணீர் தர
வில்லை; இவளோ, என் பாதங்கள்மேல் கண்ணீர்
45 பொழிந்து அவற்றைக் கூந்தலால் துடைத்தாள். நீர்
46 எனக்கு முத்தமளிக்கவில்லை; இவளோ, நான் உள்ளே
வந்தது முதல் என் பாதங்களை முத்தம் செய்து ஓய
வில்லை. நீர் என் தலையில் எண்ணெய் பூசவில்லை;
47 இவளோ, என் பாதங்களுக்குப் பரிமளத் தைலம் பூசி
னாள். அதனால்,நான் உமக்குச் சொல்வதாவது; 'அவள்
48 செய்த பாவங்கள் பல மன்னிக்கப்பட்டன, அவள் காட்
டிய பேரன்பே அதற்குச் சான்று. குறைவாக மன்னிப்
புப் பெறுபவர்களோ குறைவாக அன்பு செய்கிறார்கள்''
49 என்றார். பின் அவளை நோக்கி, ''உன் பாவங்கள் மன்
னிக்கப்பட்டன'' என்றார். ''பாவங்களையும் மன்னிக்கும்
இவர் யார்?'' என்று அவரோடு பந்தி அமர்ந்திருந்தவர்

50 கள் தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.
அவரோ, அப்பெண்ணை நோக்கி, "உன் விசுவாசம்
உன்னை மீட்டது, சமாதானமாய்ப் போ" என்றார்.

### இயேசுவின் தோழர்

8 பின்னர், கடவுளின் அரசைப்பற்றிய நற்செய்தியை
அறிவித்துக்கொண்டே இயேசு ஊர் ஊராய்ச் செல்ல
லானார். பன்னிருவரும் அவருடன் சென்றனர். பொல்
2 லாத ஆவிகளினின்றும் பிணிகளினின்றும் குணமான
பெண்கள் சிலரும் அவர்களோடு இருந்தனர். இப்
3 பெண்கள் யாரெனில், ஏழு பேய்கள் நீங்கப் பெற்ற
மதலேன் என்னும் மரியாள், ஏரோதின் காரியத் தலை
வன் கூசாவின் மனைவி அருளம்மாள், சூசன்னா, மற்றும்
பெண்கள் பலர். இவர்கள் தங்கள் உடைமைகளைக்
கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்.

### விதைப்பவன் உவமை

4 பெருந் திரளான மக்கள் எல்லா ஊர்களிலிருந்தும்
அவரிடம் வந்தபோது அவர் உவமையாகக் கூறியது:
5 "விதைப்பவன் விதையை விதைக்கச் சென்றான்.
விதைக்கும்பொழுது சில விதைகள் வழியோரமாய்
விழுந்தன; அவை மிதிபட்டு வானத்துப் பறவைகளால்
6 தின்னப்பட்டன. சில பாறைமீது விழுந்தன; முளைத்
தும் ஈரமின்மையால் காய்ந்துபோயின. சில முட்செடி
7 களின் நடுவே விழுந்தன. கூட வளர்ந்த முட்செடி
களோ அவற்றை நெரித்துவிட்டன. சில நன்னிலத்தில்
8 விழுந்தன; அவை முளைத்து நூறு மடங்கு பலன்
கொடுத்தன. கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்."

### இயேசு உவமைகளில் பேசுவானேன்?

9 பின்னர், அவருடைய சீடர், ''இவ்வுவமையின் பொருள்
10 யாது?'' என்று வினவினர். அவர் அவர்களுக்குக் கூறி
யது: ''கடவுளுடைய அரசின் மறைபொருளை அறிய
உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. மற்றவர்
களுக்கோ அவர்கள் கண்டும் காணுதவாறும், கேட்டும்
உணராதவாறும்,அவை உவமைகளாகக் கூறப்பட்டன.

### விதைப்பவன் உவமையின் விளக்கம்

11 ''இந்த உவமையின் பொருளாவது: விதை கடவுளின்
12 வார்த்தை. வழியோரமாய் விழுந்த விதை அவ்வார்த்
தையைக் கேட்பவர்களைக் குறிக்கிறது. அவர்கள் அதைக்
கேட்கிருர்கள். ஆனுல், அலகை வந்து அவர்கள் விசு
வசித்து மீட்புப் பெருதபடி அவ்வார்த்தையை அவர்கள்
13 உள்ளத்திலிருந்து எடுத்துவிடுகிறது. பாறைமீது விழுந்த
விதை அவ்வார்த்தையைக் கேட்கும்போது அதை ஏற்
றுக்கொள்பவர்களைக் குறிக்கிறது. மகிழ்வோடு ஏற்றுக்
கொள்கிருர்கள்; ஆனுல், அவர்கள் வேரற்றவர்கள்;
சிறிது காலம் விசுவசித்து, சோதனை வேளையில் பின்
14 வாங்குகிருர்கள். முட்செடிகள் நடுவில் விழுந்த விதை
வார்த்தையைக் கேட்கும் வேறு சிலரைக் குறிக்கிறது.
அவர்களும் கேட்கிருர்கள்; ஆனுல், நாளாவட்டத்தில்
கவலைகள், செல்வம், வாழ்வின் இன்பங்களால் நெரிக்கப்
15 பட்டு முதிர்ச்சியடைவதில்லை. நல்ல நிலத்தில் விழுந்த
விதையோ வார்த்தையைக் கேட்டுச் சீரிய செம்மனத்
தில் பதித்து நிலையாயிருந்து பலன் அளிப்பவர் ஆவர்.

### விளக்கின் உவமை

16 '' எவனும் விளக்கை ஏற்றிப் பாத்திரத்தால் மூடுவ
தில்லை; கட்டிலின் கீழ் வைப்பதுமில்லை. உள்ளே வரு

பவர் ஒளியைக் காணும்படி அதை விளக்குத் தண்டின்
17 மீது வைப்பான். வெளிப்படாமல் ஒளிந்திருப்பது ஒன்று
மில்லை. அறியப்படாமலும் வெளியாகாமலும் மறைந்
18 திருப்பது ஒன்றுமில்லை. ஆகையால், நீங்கள் எத்தகைய
மனநிலையில் தேவ வார்த்தையைக் கேட்கிறீர்கள் என்று
பார்த்துக் கொள்ளுங்கள். உள்ளவனுக்குக் கொடுக்கப்
படும். இல்லாதவனிடமிருந்து, உள்ளதாகக் கருதுவ
தும் எடுக்கப்படும்."

### இயேசுவின் உண்மையான உறவினர்

19* அவருடைய தாயும் சகோதரரும் அவரிடம் வந்தனர்.
ஆனால் கூட்ட மிகுதியினால் அவரை அணுக முடியவில்லை.
20 "உம் தாயும் சகோதரரும் உம்மைக் காண விரும்பி
வெளியே நிற்கின்றனர்" என்று அவருக்கு அறிவித்தனர்.
21 அதற்கு அவர், "கடவுளின் வார்த்தையைக் கேட்டு
அதன்படி நடக்கிறவர்களே எனக்குத் தாயும் சகோ
தரரும் ஆவர்" எனக் கூறினார்.

### புயலை அடக்குதல்

22 ஒருநாள் தம்முடைய சீடரோடு படகேறி, "ஏரியின்
அக்கரைக்குச் செல்வோம்" என அவர்களுக்குச் சொன்
23 னார். அவர்களும் படகைச் செலுத்தினார்கள். | அவர்கள்
படகு ஓட்டுகையில் அவர் உறங்கினார். அப்போது புயற்
காற்று கடலில் வீசியது. படகு நீரால் நிறைந்து
போகவே, அவர்கள் ஆபத்துக்குள்ளானார்கள். அவரிடம்
24 வந்து, "குருவே, குருவே, மடிந்துபோகிறோம்" என்று

---

* இயேசுவின் சகோதரர் என்றது ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளை யன்று, நெருங்கிய உறவினரையே என்க. எத்தகைய உறவினரையும் சகோதரர் என்பது எபிரேய வழக்கு.

அவரை எழுப்பினர். அவர் எழுந்து காற்றையும் கொந்
தளிப்பையும் கடியவே, அவை அடங்கின. அமைதி
உண்டாயிற்று. பின்னர், அவர் அவர்களிடம், "உங்கள்
25 விசுவாசம் எங்கே?" என்றார். அவர்களோ அச்சமுற்று,
"காற்றிற்கும் கடலிற்கும் இவர் ஆணையிட, அவை
இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே, இவர் யாராயிருக்க
லாம்!" என்று ஒருவருக்கொருவர் வியப்புடன் பேசிக்
கொண்டனர்.

பேய் பிடித்தவனும் பன்றிக் கூட்டமும்

26 பின்பு கலிலேயாவிற்கு எதிரே இருக்கும் கெரசேனர்
27 நாட்டை நோக்கிப் படகை ஓட்டினர். கரையேறியதும்
அந்த ஊரைச் சார்ந்த ஒருவன் அவருக்கு எதிரே வந்
தான். அவன் பேய் பிடித்தவன். நெடுநாளாய் ஆடை
யணியாது, வீட்டிலும் தங்காது, கல்லறைகளில் தங்கி
28 யிருந்தான். இயேசுவைக் கண்டதும், கூக்குரலிட்டு அவர்
முன் விழுந்து, "இயேசுவே, உன்னத கடவுளின் மகனே,
என் காரியத்தில் ஏன் தலையிடுகிறீர்? உம்மை மன்றாடு
கிறேன்; என்னை வதைக்கவேண்டாம்" என உரக்கக்
29 கத்தினான். ஏனெனில், அம்மனிதனை விட்டகலும்படி
இயேசு அசுத்த ஆவிக்குக் கட்டளையிட்டிருந்தார். எத்
தனையோமுறை அது அவனைப்பிடித்து ஆட்டியிருக்கிறது.
அவன் சங்கிலியும் விலங்கும் மாட்டிக் காவல் காக்கப்
பட்டிருந்தும் அவ்வேளைகளில் கட்டுக்களை உடைப்பான்;
பேயும் அவனைப் பாலைவனத்திற்கு இழுத்துச் செல்லும்.
30 "உன் பெயர் என்ன?" என்று இயேசு அவனைக் கேட்
டார். "படை" என்றான். ஏனெனில், பல பேய்கள்
31 அவனுக்குள் புகுந்திருந்தன. பாதாளத்திற்குச் செல்
லத் தங்களுக்குக் கட்டளை இடாதபடி அவரை
வேண்டின.

32 அங்கே பல பன்றிகள் கூட்டமாக மலையில் மேய்ந்து
கொண்டிருந்தன. அவற்றிற்குள் போக விடையளிக்கு
மாறு பேய்கள் அவரை வேண்டவே, அவர் விடை
33 கொடுத்தார். பேய்கள் அம்மனிதனை விட்டுப் பன்றி
களுக்குள் புகுந்தன. அப்பன்றிக் கூட்டம் மேட்டி
லிருந்து கடலில் பாய்ந்து மூழ்கிப்போயிற்று.
34 மேய்த்தவர்களோ நடந்ததைக் கண்டு ஓடிப்போய்
35 நகரிலும் நாட்டுப்புறத்திலும் அறிவித்தார்கள். அதைக்
காண மக்கள் புறப்பட்டு இயேசுவிடம் வந்தனர். பேய்
கள் நீங்கியவன் தன்னுணர்வுடன் ஆடை அணிந்து
36 இயேசுவின் காலடியில் இருக்கக் கண்டு, அஞ்சினர். நடந்
ததைக் கண்டவர்கள், பேய் பிடித்தவன் எப்படி விடு
37 விக்கப்பெற்றான் என்று அவர்களுக்கு அறிவித்தனர்.
கெரசேன நாட்டு மக்கள் எல்லாரும் திரண்டு வந்து
தங்களை விட்டகலும்படி அவரைக் கேட்டனர். ஏனெ
னில், அச்சம் அவர்களை ஆட்கொண்டது. அவர் படகி
லேறித் திரும்பிப் போனார்.
38 பேய்கள் நீங்கியவன், ''நானும் உம்மோடு வரவிடும்''
என்று மன்றாடினான். இயேசுவோ, ''நீ உன் வீட்டுக்குத்
திரும்பிப் போ. கடவுள் உனக்குச் செய்ததெல்லாம்
39 தெரியப்படுத்து''என்று கூறி அவனை அனுப்பிவிட்டார்.
அவன் நகரெங்கும் சென்று இயேசு தனக்குச் செய்த
தெல்லாம் அறிவிக்கலானான்.

பெரும்பாடுள்ள பெண் குணமாதல், சிறுமி உயிர்த்தல்

40 இயேசு திரும்பி வரும்போது, மக்கள் திரள் அவரை
வரவேற்றது. ஏனெனில், எல்லாரும் அவரை எதிர்
41 பார்த்துக்கொண்டிருந்தனர். இதோ! செபக்கூடத்
தலைவனான யாயீர் என்னும் ஒருவன் வந்து இயேசுவின்
காலில் விழுந்து தன் வீட்டுக்கு வரும்படி வேண்டினான்.

42 ஏறக்குறைய பன்னிரண்டு வயதுள்ள அவனுடைய
ஒரே மகள் சாகக் கிடந்தாள். அவர் போகையில் மக்
கள் திரள் அவரை நெருக்கியது.

43 பன்னிரு ஆண்டுகளாய்ப் பெரும்பாட்டினால் வருந்திய
பெண் ஒருத்தி அக்கூட்டத்தில் இருந்தாள். ஒருவராலும்
44 அவளைக் குணப்படுத்த முடியவில்லை. அவள் அவருக்குப்
பின்னே சென்று அவருடைய போர்வையின் விளிம்பைத்
45 தொட்டவுடனே பெரும்பாடு நின்றது. ''என்னைத்
தொட்டது யார்?'' என்று இயேசு கேட்டார். ''யாரும்
தொடவில்லை'' என்று அனைவரும் சொல்ல, இராயப்ப
ரும் அவருடன் இருந்தோரும், ''குருவே, மக்கள் திரள்
46 உம்மைச் சூழ்ந்து நெருக்குகிறதே'' என்றனர். ''யாரோ
என்னைத் தொட்டார்கள், வல்லமை என்னிடமிருந்து
வெளியேறியதை நான் உணர்ந்தேன்'' என்று இயேசு
47 கூறினார். தான் கண்டுபிடிக்கப்பட்டதை அறிந்து, அவள்
நடுங்கிக்கொண்டு அவரிடம் வந்து, அவர் முன்பாக
விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும்,
உடனே குணமானதையும் எல்லாருக்கும் முன்பாகத்
48 தெரிவித்தாள். அவரோ, அவளை நோக்கி, ''மகளே,
உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று. சமாதான
மாய்ப் போ'' என்றார்.

49 அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, செபக் கூடத்
தலைவன் வீட்டிலிருந்து ஒருவன் வந்து, ''உம் மகள்
இறந்துவிட்டாள். போதகரை இனித் தொந்தரை செய்
50 யாதீர்'' என்றான். இதைக் கேட்ட இயேசு சிறுமியின்
தகப்பனிடம், ''அஞ்சாதே, விசுவசி, அதுபோதும், அவள்
பிழைப்பாள்'' என்றார். அவர் வீட்டிற்கு வந்ததும் இரா
51 யப்பர், யாகப்பர், அருளப்பர், சிறுமியின் தாய் தந்தை
இவர்களைத் தவிர வேறெவரையும் தம்மோடு உள்ளே
52 வர விடவில்லை. அனைவரும் அவளுக்காக மாரடித்து
அழுதுகொண்டிருந்தனர். அவரோ, ''அழவேண்டாம்.

53 அவள் சாகவில்லை, தூங்குகிறுள்'' என்றுர். ஆனல் அவர்
கள் அவள் இறந்துவிட்டாள் என அறிந்திருந்ததால்
54 அவரை ஏளனம் செய்தார்கள். அவரோ, அவள் கை
யைப் பிடித்து, ''குழந்தாய். எழுந்திரு'' என்று கூப்பிட்
55 டார். உயிர் திரும்பி வரவே, அவள் உடனே எழுந்தாள்.
அவளுக்கு உணவு கொடுக்கச் சொன்னுர். அவளுடைய
56 பெற்றேர் திகைத்துப் போயினர். நிகழ்ந்ததை எவருக்
கும் சொல்ல வேண்டாம் என அவர்களுக்குக் கட்டளை
யிட் டார்.

பன்னிருவர் அனுப்பப்படுதல்

9 பன்னிருவரையும் அழைத்து, பேய்களையெல்லாம் அடக்
கவும், நோய்களைக் குணமாக்கவும் வல்லமையும் அதி
2 காரமும் அவர்களுக்கு அளித்தார். இறை அரசைப்
பற்றிய செய்தியை அறிவிக்கவும் நோயாளிகளைக் குண
*3 மாக்கவும் அவர்களை அனுப்பினுர். அப்போது அவர்
களைப் பார்த்து, ''வழிப் பயணத்திற்குக் கோலோ
பையோ, உணவோ பணமோ, ஒன்றும் எடுத்துச் செல்லா
தீர்கள். இரண்டு உள்ளாடைகளை யாரும் வைத்திருக்க
4 வேண்டாம். எந்த வீட்டுக்குப் போனுலும், அங்கே தங்கி
5 யிருங்கள்; அங்கிருந்தே புறப்படுங்கள். யாராவது உங்
களை ஏற்றுக்கொள்ளாவிடின் அவர்களுடைய ஊருக்கு
வெளியே போய் அவர்களுக்கு எதிர் சாட்சியாக உங்
கள் காலிலிருக்கும் தூசியைத் தட்டிவிடுங்கள்'' என்றுர்.
6 அவர்கள் புறப்பட்டு ஊர் ஊராகச் சென்று, எங்கும்
நற்செய்தியைப் பரப்பி நோயாளிகளைக் குணமாக்கினர்.

ஏரோதும் இயேசுவும்

†7 நிகழ்ந்ததெல்லாம் கேள்வியுற்ற சிற்றரசன் ஏரோது
8 மனம் கலங்கினுன். ஏனெனில், சிலர், ''அருளப்பர்

---

† 3:1 காண்.

* 10:4-12 காண்

இறந்தோரிடமிருந்து உயிர்த்திருக்கிறார்'' என்றனர்.
வேறுசிலர், "எலியாஸ் மறுபடியும் தோன்றியிருக்கிறார்"
என்றனர். மற்றும் சிலர், ''முற்காலத்து இறைவாக்கினர்
9 களுள் ஒருவர் உயிர்த்தெழுந்திருக்கிறார்'' என்றனர்.
ஏரோதோ, ''அருளப்பரா? அவர் தலையை நான்தான்
வெட்டினேனே. இவர் யாரோ? இவரைப்பற்றி இப்
படியெல்லாம் கேள்விப்படுகிறேனே'' என்று சொல்லி
அவரைக் காண வாய்ப்புத் தேடினான்.

முதல் முறை அப்பங்கள் பலுகுதல்

10 அப்போஸ்தலர் திரும்பி வந்து தாங்கள் செய்ததெல்
லாம் அவருக்குத் தெரிவித்தனர். அவர் அவர்களை
அழைத்துக்கொண்டு தனித்திருக்கும்படி பெத்சாயிதா
11 என்னும் ஊருக்குச் சென்றார். அதை அறிந்த மக்கள்
கூட்டமாக அவரைப் பின்தொடர்ந்தனர். அவர்
அவர்களை வரவேற்றுக் கடவுளின் அரசைப்பற்றி
அவர்களுக்குப் போதித்து, குணமாகவேண்டியவர்களைக்
குணமாக்கினார்.
12 பொழுது சாயத் தொடங்கவே, பன்னிருவர் அவரிடத்
தில் வந்து, ''சுற்றிலுமுள்ள ஊர்களுக்கும் பட்டிகளுக்
கும் போய், விடுதியும் உணவும் பார்த்துக் கொள்ளும்படி
மக்களை அனுப்பிவிடும். நாமுள்ள இடமோ பாழ்வெளி"
13 என்றனர். அதற்கு அவர், "நீங்களே அவர்களுக்கு
உணவு கொடுங்கள்'' என்றார். அவர்களோ, ''எங்களி
டம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்தான்
உண்டு. நாங்கள் போய் இத்தனை பேருக்கும் உணவு
14 வாங்கி வந்தால்தான் முடியும்'' என்றனர். ஏனெனில்
ஆண்களே ஏறக்குறைய ஐயாயிரம் பேர் இருந்தனர்.
அவர் சீடர்களை நோக்கி, 'இவர்களை ஐம்பது ஐம்பது
15 பேராகப் பந்தி அமரச் செய்யுங்கள்'' என்றார். அவர்கள்
*16 அவர் சொன்னபடியே அனைவரையும் பந்தி அமரச்

---

* அப்பம் பலுகச் செய்த புதுமை தேவநற்கருணையாகிய புதுமைக்கு அறிகுறியாகும். ( 22 : 19 காண்க ).

செய்தார்கள். அதன்பின், ஐந்து அப்பத்தையும்
இரண்டு மீனையும் எடுத்து வானத்தை அண்ணாந்து
பார்த்து, இறை புகழ் கூறி, பிட்டு, சீடருக்கு அளித்து
17 மக்கட் கூட்டத்திற்குப் பரிமாறச் சொன்னார். அனைவ
ரும் வயிறார உண்டனர். மீதியான துண்டுகளைப் பன்
னிரண்டு கூடைகள் நிறைய எடுத்தனர்.

**இராயப்பரின் விசுவாச அறிக்கை**

18 ஒருநாள் இயேசு தனியே செபித்துக்கொண்டிருக்கும்
பொழுது, அவருடைய சீடரும் அவருடன் இருந்தனர்.
அவர் அவர்களை நோக்கி, ''மக்கள் என்னை யார் என்று
19 சொல்லுகிறார்கள்?'' எனக் கேட்டார். அவர்கள்,
''சிலர் ஸ்நாபக அருளப்பர் என்றும், சிலர் எலியாஸ்
என்றும், சிலர் முற்காலத்து இறைவாக்கினர்களுள்
ஒருவர் உயிர்த்தார் என்றும் சொல்லுகின்றனர்''
20 என்றார்கள், ''நீங்களோ என்னை யார் என்றுசொல்லு
கிறீர்கள்?'' என்று அவர்களைக் கேட்டார். இராயப்பர்,
21 மறுமொழியாக ''நீர் கடவுளின் மெசியா'' என்றார்.
இதை ஒருவருக்கும் சொல்லக் கூடாது என்று கண்டிப்
பான கட்டளையிட்டார்.
†22 மேலும் ''மனுமகன் பாடுகள் பல படவும், மூப்பராலும்
தலைமைக் குருக்களாலும் மறைநூல் அறிஞராலும்
புறக்கணிக்கப்பட்டு கொலையுண்டு மூன்றும் நாள்
உயிர்த்தெழவும் வேண்டும்'' என்று சொன்னார்.

**இயேசுவைப் பின்செல்வதெப்படி?**

23 அவர் எல்லாரையும் பார்த்து, ''என்னைப் பின் செல்ல
விரும்புகிறவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையை
நாள்தோறும் சுமந்துகொண்டு என்னைப் பின் தொட

† லூக். 20 : 17 காண்க.

24 ரட்டும். ஏனெனில், தன் உயிரைக் காத்துக்கொள்ள
விரும்புகிறவன் அதை இழந்து விடுவான். என்பொருட்
25 டுத் தன் உயிரை இழப்பவனே அதைக் காத்துக் கொள்
வான். ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக்கொண்டா
லும் தன்னையே பாழாக்கினால் பயன் என்ன? தனக்கே
26 கேடு வருவித்தால் பயன் என்ன? என்னைப்பற்றியும் என்
வார்த்தைகளைப்பற்றியும் வெட்கப்படுகிறவன் எவனோ,
அவனைப்பற்றி மனுமகன் தமக்கும் தந்தைக்கும் பரி
சுத்த வான தூதருக்கும் உரிய மாட்சிமையில் வரும்
பொழுது வெட்கப்படுவார்.

27 "நான் உங்களுக்கு உண்மையாகச் சொல்லுவதாவது:
கடவுளின் அரசைக் காணும்வரை இங்கிருப்பவர்களுள்
சிலர் சாவுக்குள்ளாக மாட்டார்கள்'' என்றார்.

### இயேசு மறுவுருப் பெறுதல்

28 இதெல்லாம் சொல்லி ஏறக்குறைய எட்டு நாள் ஆன
பின்பு, இராயப்பரையும் யாகப்பரையும் அருளப்பரை
யும் அழைத்துக்கொண்டு செபம் செய்ய மலைமீது ஏறி
29 னார். அவர் செபித்துக்கொண்டிருக்கும்பொழுது அவரது
முகத்தோற்றம் மாறியது. அவரது ஆடையும் வெண்மை
†30 யாய் ஒளி வீசியது. இதோ! அவருடன் இருவர் உரை
யாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் மோயீசனும் எலி
31 யாசும். அவர்கள் விண்ணொளியிடையே தோன்றி,
யெருசலேமில் நிறைவேறப்போகின்ற அவருடைய இறு
32 திப் பயணம்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். இராயப்
பரும் அவரோடு இருந்தவர்களும் தூக்க மயக்கமா
யிருந்தனர். விழித்தெழுந்து அவருடைய மாட்சிமையை

---

† மோயீசன் எபிரேய மக்களுக்குத் திருச் சட்டத்தைக் கொடுத்த மாபெரும் தலைவர். எலியாஸ் மாபெரும் இறைவாக்கினர். இயேசு இவர்கள் இருவரிலும் உயர்ந்தவர் என்பதை இக்காட்சி உணர்த்துகிறது. அவர் திருச் சட்டத்தையும்இறைவாக்குகளையும் நிறைவேற்றவே வந்தார். (24:44)

33 யும், அவரோடு நின்ற இருவரையும் கண்டனர். அவ்
விருவரும் அவரை விட்டுப் பிரியும்பொழுது இராயப்பர்
இயேசுவிடம், ''குருவே, நாம் இங்கே இருப்பது எத்
துணை நன்று! உமக்கொன்றும், மோயீசனுக்கொன்றும்,
எலியாசுக் கொன்றுமாகக் கூடாரம் மூன்று அமைப்
போம்'' என்று தாம் சொல்லுவது இன்னதென்று
34 அறியாமல் கூறினர். அவர் இவ்வாறு பேசிக்கொண்
டிருக்கும்பொழுது, மேகம் ஒன்று வந்து அவர்கள்மேல்
நிழலிட்டது. அவர்கள் அம்மேகத்தினுள் நுழையும்
போது, சீடர்கள் அச்சம் கொண்டனர். அப்பொழுது
*35 ''இவரே என் மகன், நான் தேர்ந்து கொண்டவர்
இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்'' என்ற குரலொலி
36 மேகத்திலிருந்து கேட்டது. அக்குரலொலி கேட்ட
பொழுது இயேசு மட்டும் இருந்தார். அவர்களோ
தாம் கண்டவற்றை அந்நாட்களில் ஒருவரிடமும்
சொல்லாமல் மௌனங் காத்தனர்.

### பேய் பிடித்த பையன்

37 மறுநாள் அவர்கள் மலையிலிருந்து இறங்கி வரும்பொழுது
பெருங் கூட்டம் ஒன்று அவர்களை எதிர்கொண்டது.
38 கூட்டத்திலிருந்து ஒருவன், ''போதகரே, என் மகனைக்
கடைக்கண் நோக்குமாறு உம்மை மன்றாடுகிறேன்.
39 அவன் எனக்கு ஒரே மகன். இதோ! ஆவி அவனை ஆட்
கொள்ளுகிறது, திடீரென்று கத்துகிறான். அவன் நுரை
தள்ளுகிறான். அவனை அலைக்கழிக்கின்றது. அவனை
40 நொறுக்கி விடுகிறது. எளிதில் அவனை விட்டுப் போவ
தில்லை. அதை ஓட்டும்படி உம் சீடரை மன்றாடினேன்.
அவர்களால் முடியவில்லை'' என்று கத்தினான்.

---

* லூக். 3 : 22 காண்க.

—5

41 அதற்கு இயேசு, ''விசுவாசமில்லாத சீர்கெட்ட தலை
முறையே எதுவரை உங்களுடன் இருந்து உங்களைப்
பொறுத்துக்கொண்டிருப்பேன்? உன் மகனை இங்கு
42 கொண்டு வா'' என்றார். அச்சிறுவன் வந்துகொண்
டிருக்கையிலேயே பேய் அவனைக் கீழே தள்ளி அலைக்
43 கழித்தது. இயேசு ஆசுத்த ஆவியைக் கடிந்து, சிறுவ
னைக் குணமாக்கி அவனுடைய தந்தையிடம் ஒப்
படைத்தார்.

பாடுகளின் இரண்டாம் முன்னறிவிப்பு

44 அனைவரும் கடவுளின் மாண்பைக் கண்டு மலைத்துப்
போயினர். அவர் செய்ததெல்லாம் பார்த்து எல்லாரும்
வியந்துகொண்டிருக்க, இயேசு, சீடரிடம், ''நான்
சொல்லுவதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்: மனு
மகன் மனிதரிடம் கையளிக்கப்படப் போகிறார்'' என்
45 றார். அவர்களோ, அவர் சொன்னதைப் புரிந்து
கொள்ளவில்லை. அவர்கள் உணர்ந்துகொள்ளாதவாறு
அது மறைபொருளாயிருந்தது. ஆயினும் அவர்
சொன்னதைப்பற்றி அவரைக் கேட்க அஞ்சினர்.

யார் பெரியவன்?

46 தங்களுள் பெரியவன் யார் என்ற விவாதம் அவர்க
47 ளிடையே எழுந்தது. இயேசு அவர்கள் உள்ளக் கருத்தை
அறிந்து ஒரு குழந்தையின் கையைப் பிடித்துத் தம்
48 அருகே நிறுத்தி | அவர்களை நோக்கி, ''என் பெயரால்
இக்குழந்தையை ஏற்றுக்கொள்பவன் எவனும் என்
னையே ஏற்றுக்கொள்கிறான். என்னை ஏற்றுக்கொள்ப
வன் எவனும் என்னை அனுப்பினவரையே ஏற்றுக்
கொள்கிறான். உங்கள் அனைவருள் சிறியவன் எவனோ,
அவனே பெரியவன்'' என்றார்.

### இயேசுவின் பெயரால் பேய் ஓட்டியவன்

49 ''குருவே, ஒருவன் உம் பெயரால் பேயோட்டுவதைக்
50 கண்டு அவனைத் தடுக்கப் பார்த்தோம். ஏனெனில்,
அவன் நம்மைச் சாராதவன்'' என்று அருளப்பர் கூறி
ஞர். இயேசு அவரை நோக்கி, "அவனைத் தடுக்காதீர்
கள்; ஏனெனில், உங்களுக்கு எதிராக இல்லாதவன்
உங்கள் சார்பாக இருக்கிறுன்'' என்றுர்.

## 4. யெருசலேமுக்குப் பயணமாதல்

### சமாரியாவில் இயேசு

51 இயேசு விண்ணேற்படையும் நாட்கள் நெருங்கி வரவே,
யெருசலேமுக்குச் செல்ல முனைந்து நின்றவராய்த்
52 தமக்கு முன்பாகத் தூதர்களை அனுப்பினுர். அவர்கள்
சென்று முன்னேற்பாடு செய்யும்படி சமாரியருடைய
ஊர் ஒன்றுக்கு வந்தார்கள். அவர் யெருசலேமுக்குச்
53* செல்லும் நோக்கமாயிருந்ததால் அவ்வூரார் அவரை
54 ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய சீடர் யாகப்பரும்
அருளப்பரும் இதைக் கண்டு, ''ஆண்டவரே, இவர்களை
அழிக்க வானத்திலிருந்து நெருப்பு விழும்படி நாங்கள்
சொல்ல வேண்டுமென்று விரும்புகிறீரா?'' என்றனர்.
55 அவர் அவர்கள் பக்கம் திரும்பி அவர்களைக் கடிந்து
56 கொண்டார். பின்பு, வேறு ஓர் ஊருக்குச் சென்றனர்.

### சீடனயிருப்பதற்கான தகுதி

57 அவர்கள் வழியே போகையில் ஒருவன் அவரிடம், ''நீர்

---

* யூதர் சமாரியரைத் தம் எதிரிகளென்றும், மதத்துக்குப் புறம்பாக்கப்பட்டவர்கள் என்றும் கருதினர். யெருசலேம் ஆலயமே முதன்மை வாய்ந்தது என்னும் யூதர்கள் கருத்தைச் சமாரியர் ஆதரிக்காமல் தங்களுக்கென்று கரிசிம் மலையில் ஓர் ஆலயத்தை அமைத்துக்கொண்டு அங்கே வழிபாடு நடத்தி வந்தனர். அதனுல் யெருசலேம் நோக்கிச் செல்லும் யூதரைச் சமாரியர் பகைமைக் கண்கொண்டு பார்ப்பதுண்டு.

எங்கு சென்றாலும் நானும் உம்மைப் பின் செல்வேன்''
58 என்றான். இயேசு அவனை நோக்கி, ''நரிகளுக்கு வளை
கள் உண்டு. வானத்துப் பறவைகளுக்குக் கூடுகள்
உண்டு. மனுமகனுக்கோ தலை சாய்க்கவும் இடமில்லை''
என்றார்.
59 அவர் வேறொருவனை நோக்கி, ''என்னைப் பின்செல்''
என, அவன், ''ஆண்டவரே, முதலில் நான் போய் என்
தந்தையை அடக்கம் செய்துவிட்டு வர விடைகொடும்''
60 என்றான் இயேசு அவனைப் பார்த்து,''இறந்தோர் தங்
கள் இறந்தோரை அடக்கம் செய்துகொள்ளட்டும். நீ
போய் கடவுளுடைய அரசை அறிவி'' என்றார்.
61 இன்னொருவன், ''ஆண்டவரே, உம்மைப் பின் செல்
வேன்; ஆனால் முதலில் வீட்டில் சொல்லிவிட்டு வர
62 விடை தாரும்''என்றான். இயேசுவோ, அவனை நோக்கி,
''கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவன்
எவனும் கடவுளின் அரசிற்குத் தகுதியற்றவன்'' என்றார்.

### எழுபத்திரண்டு சீடர்களை அனுப்புதல்

**10** இதற்குப்பின், ஆண்டவர் வேறு எழுபத்திரண்டு பேரை
நியமித்து, தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும்
இடங்களுக்கும் அவர்களை இருவர் இருவராகத் தமக்கு
2 முன்னால் அனுப்பினார். அப்போது அவர்களைப் பார்த்
துக்கூறினதாவது: ''அறுவடையோ மிகுதி; வேலையாட்
களோ குறைவு. ஆதலால் தம் அறுவடைக்கு வேலை
யாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை
3 மன்றாடுங்கள். செல்லுங்கள், ஓநாய்களிடையே ஆட்டுக்
*4 குட்டிகளைப்போல் உங்களை அனுப்புகிறேன். பணப்பை

*'வணக்கம் செலுத்தவேண்டாம்' — யூதர் வழக்கப்படி ஒருவரை யொருவர் சந்திக்கும்போது பல சடங்குகளுடன் கூடிய 'வணக்கம்' செலுத்த வெகுநேரம் ஆவதுண்டு. செல்லும் வழியில் வீணாக நேரம் போக்கலாகாது என்பது இயேசுவின் கருத்து.

யோ கைப்பையோ மிதியடியோ எதுவும் எடுத்துச்
செல்லவேண்டாம். வழியில் எவருக்கும் வணக்கம்
5 செலுத்தவேண்டாம். நீங்கள் எந்த வீட்டுக்குப் போனு
லும், முதலில், 'இவ்வீட்டுக்குச் சமாதானம்' என்று
வாழ்த்துங்கள். சமாதானத்திற்குரியவன் அங்கு இருந்
6 தால், உங்கள் சமாதம்னம் அவனிடம் தங்கும்; இல்லை
யேல் உங்களிடம் திரும்பிவிடும். அவர்களிடம் உள்ள
7 தை உண்டு குடித்து அவ்வீட்டிலேயே தங்கியிருங்கள்.
ஏனெனில், வேலையாள் கூலிக்கு உரிமையுடையவன்.
8 வீடு வீடாய்ச் செல்லவேண்டாம். நீங்கள் போகும்
9 ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டால், உங்களுக்குப் பரி
மாறுகிறதை உண்டு, அங்குள்ள பிணியாளரைக் குண
மாக்கிக் 'கடவுளின் அரசு உங்களை நெருங்கியுள்ளது'
10 என்று மக்களுக்குத் தெரிவியுங்கள். மாறுக, நீங்கள்
11 போகும் ஊரில் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால்,
தெருவில் சென்று, 'எங்கள் காலில் ஒட்டிய உங்கள்
ஊர்த் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறிப் போடு
கிறோம்; இருப்பினும் கடவுளின் அரசு நெருங்கியுள்ளது
12 என்று அறிந்துகொள்ளுங்கள்' எனச் சொல்லுங்கள்.
அந்நாளில் சோதோமுக்கு நேரிடுவது அவ்வூருக்கு
நேரிடுவதைப்போல் அவ்வளவு கடினமாயிராது என
உங்களுக்குக் கூறுகிறேன்.

13 "கொராசின் நகரே, உனக்கு ஐயோ கேடு! பெத்சாயிதா
நகரே. உனக்கு ஐயோ கேடு! ஏனெனில், உங்களிடம்
செய்த புதுமைகள் தீர் சீதோனில் செய்யப்பட்டிருப்
பின், முன்பே கோணி உடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து
மனந்திரும்பியிருப்பர். ஆனால் தீர்வை நாளில் தீர்
14 சீதோனுக்கு நேரிடுவது உங்களுக்கு நேரிடுவதைப்போல்
அவ்வளவு கடினமாயிராது. கப்பர்நகூமே, வானளாவ
15 உயர்வாயோ? பாதாளம்வரை தாழ்ந்திடுவாய்.

16 "உங்களுக்குச் செவிசாய்ப்பவன் எனக்குச் செவிசாய்க்

கிறுன். உங்களைப் புறக்கணிப்பவன் என்னைப் புறக்
கணிக்கிறுன். என்னைப் புறக்கணிப்பவனே என்னை
அனுப்பினவரையே புறக்கணிக்கிறுன்."

### சென்றவர் திரும்புதல்

17 பின்பு, எழுபத்திரண்டு பேரும் மகிழ்வுடன் வந்து
"ஆண்டவரே, உம் பெயரால் பேய்கள்கூட எங்களுக்கு
18 அடங்குகின்றன" என்றனர். அதற்கு அவர், "வானத்தி
னின்று மின்னலைப்போல் சாத்தான் விழக் கண்டேன்.
19 இதோ பாம்புகளையும் தேள்களையும் மிதிக்கவும், பகை
வரின் வலிமையை வெல்லவும் உங்களுக்கு வல்லமை
அளித்தேன். எதுவும் உங்களுக்குத் தீங்கு இழைக்காது.
‡20 ஆயினும் ஆவிகள் உங்களுக்கு அடங்கி இருக்கின்றன
என்று மகிழ வேண்டாம். ஆனுல் உங்கள் பெயர் வான
கத்தில் எழுதியுள்ளது என்றே மகிழுங்கள்" என்ருர்.

### தந்தையும் மகனும்

21 அந்நேரத்தில் இயேசு பரிசுத்த ஆவியினுல் அக்களிப்
புற்றுக் கூறியதாவது: "தந்தையே, விண்ணிற்கும் மண்
ணிற்கும் ஆண்டவரே, ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும்
இவற்றை மறைத்துச் சிறுவருக்கு வெளிப்படுத்தியதால்
உம்மைப் புகழ்கிறேன். ஆம், தந்தாய்; இதுவே உமது
22 திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் எனக்குக்
கையளித்துள்ளார். மகன் யாரென்று தந்தையன்றி
வேறெவனும் அறியான். தந்தை யாரென்று மகனும்,
மகன் எவனுக்கு வெளிப்படுத்துவாரோ அவனுமன்றி
23 வேறெவனும் அறியான்." அவர் தம் சீடர் பக்கம்
திரும்பி அவர்களுக்கு மட்டும் தனிமையாகக் கூறியதா
வது: "நீங்கள் காண்பதைக் காணும் கண்கள் பேறு

---

‡ 'வானகத்தில் எழுதியுள்ளது'—அதாவது தெரிந்துகொள்ளப்பட்ட
வர்கள் கூட்டத்தில் சேர்க்கப்படுதல் என்று பொருள்.

24 பெற்றவை. ஏனெனில், நான் உங்களுக்குச் சொல்லு
கிறேன்: இறைவாக்கினர், அரசர் பலர் நீங்கள் காண்
பதைக் காண விரும்பியும் காணவில்லை. நீங்கள் கேட்
பதைக் கேட்க விரும்பியும் கேட்கவில்லை.''

நல்ல சமாரியன்

25 சட்ட வல்லுநன் ஒருவன் எழுந்து அவரைச் சோதிக்க,
''போதகரே, முடிவில்லாத வாழ்வு பெற, நான் செய்ய
26 வேண்டியதென்ன?'' என்று வினவினன். அதற்கு அவர்,
''திருச்சட்ட நூலில் என்ன எழுதியுள்ளது? அதில் என்ன
27 வாசிக்கிறீர்?'' என்றார். அவன் மறுமொழியாக, ''உன்
கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும்,
முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும், முழு மனத்
தோடும் அன்பு செய்வாயாக. உன்மீது நீ அன்புகாட்டு
வதுபோல், உன் அயலான்மீதும் நீ அன்புகாட்டுவாயாக''
28 என்றான். அவரோ. ''சரியாய்ப் பதில் சொன்னீர்; இப்
29 படியே செய்யும்; வாழ்வீர்'' என்றார்.
அவன், தான் கேட்டது சரியான கேள்வி என்று காட்ட
விரும்பி, ''என் அயலான் யார்?'' என்று இயேசுவை
30 வினவினன். அதற்கு இயேசு. ''யெருசலேமிலிருந்து யெரி
கோவுக்கு ஒருவன் இறங்கிச் செல்லுகையில், கள்வர்
கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் ஆடைகளைப்
பறித்துக்கொண்டு அவனைக் காயப்படுத்திக் குற்றுயிராய்
31 விட்டுச் சென்றார்கள். அதே வழியாக ஒரு குருவும்
இறங்கிச் செல்ல நேர்ந்தது. அவர் அவனைக் கண்டும்
*32 விலகிச் சென்றார். அவ்வாறே லேவியன் ஒருவனும் அவ்
விடத்துக்கு வந்து அவனைக் கண்டு விலகிச் சென்றான்.
†33 ஆனால் அவ்வழியே பயணம்செய்துகொண்டிருந்த சமாரி
யன் ஒருவன் அவன் அருகில் வந்து, அவனைக்கண்டு, மன

* லேவியன் — ஆலயத்தில் வழிபாடு நடத்தும் குருவுக்குத் துணை செய்யும் பணியாள்.

† சமாரியன்—9:53 வசனத்துக்குள்ள குறிப்பைக் காண்.

34 மிறங்கினுன். அவனே அணுகி எண்ணெயும் திராட்சை
இரசமும் வார்த்து, அவன் காயங்களேக் கட்டித் தன்
சொந்த வாகனத்தில் ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டு
35 போய் அவனேக் கண்காணித்தான். மறுநாள் இரு வெள்
ளிக் காசுகளே எடுத்துச் சாவடிக்காரனிடம் கொடுத்து,
'இவனேக் கண்காணித்துக்கொள். இதற்குமேல் செலவா
ஞல் திரும்பி வரும்போது கொடுத்துவிடுவேன்' என்ருன்.
36 ''கள்வர் கையில் அகப்பட்டவனுக்கு இம்மூவருள் எவன்
அயலான் என்று உமக்குத் தோன்றுகிறது?'' என்ருர்.
37 அதற்கு அவன், ''அவனுக்கு இரக்கம் காட்டியவன்
தான்'' என்ருன். இயேசு, ''நீரும் போய் அவ்வாறே
செய்யும்'' என்று கூறினுர்.

## மார்த்தாளும் மரியாளும்

38 அவர்கள் போகும்பொழுது ஓர் ஊருக்குள் வர, மார்த்
தாள் என்னும் பெண் ஒருத்தி தன் வீட்டில் அவரைவர
39 வேற்ருள். அவளுக்கு மரியாள் என்னும் சகோதரி இருந்
தாள். அவள் ஆண்டவருடைய காலடியில் அமர்ந்து,
அவருடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.
40 மார்த்தாளோ, பலவகையாய்ப் பணிவிடை புரிவதில்
பரபரப்பாயிருந்தாள். அவள் வந்து, ''ஆண்டவரே, நான்
உமக்குப் பணிபுரிய என் சகோதரி என்னேத் தனியே
விட்டுவிட்டாளே; உமக்குக் கவலேயில்லேயா? எனக்கு
உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும்'' என்ருள்.
41 அதற்கு ஆண்டவர், ''மார்த்தா, மார்த்தா, நீ பல
காரியங்களேப்பற்றிக் கவலேப்பட்டுக் கலங்குகிருய்.
42 ஆனுல், தேவையானது ஒன்றே, மரியாள் நல்ல பங்கைத்
தேர்ந்துகொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்
படாது'' என்ருர்.

## கர்த்தர் கற்பித்த செபம்

11 அவர் ஒருநாள் ஓரிடத்தில் செபம் செய்துகொண்டிருந்
தார். அது முடிந்தபின், சீடருள் ஒருவர் அவரைப்
பார்த்து, ''ஆண்டவரே, அருளப்பர் தம் சீடருக்குச்
செபிக்கக் கற்றுக்கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்
2 றுக்கொடும்'' என்ருர். அதற்கு அவர், நீங்கள் செபிக்
கும்பொழுது இவ்வாறு சொல்லுங்கள்:
'தந்தாய், உமது பெயர் பரிசுத்தம் எனப் போற்றப்படுக,
உமது அரசு வருக;
3 எங்கள் அன்ருட உணவை
எங்களுக்கு நாள்தோறும் அளித்தருளும்.
4 எங்கள் பாவங்களை மன்னித்தருளும்,
ஏனெனில். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்பவர்
அனைவரையும் நாங்களும் மன்னிக்கிருேம்.
எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்'
என்ருர்.

## செபத்தின் பண்பு

5 மேலும் ''உங்களுள் ஒருவன் தன் நண்பனிடம் நள்ளிர
வில் சென்று, 'நண்பா, எனக்கு மூன்று அப்பம் கடன்
6 கொடு. ஏனெனில், பயணம்செய்யும் என் நண்பன் ஒரு
வன் என்னிடம் வந்திருக்கிருன். அவனுக்குக் கொடுக்க
என்னிடம் ஒன்றுமில்லை' என்று சொல்லுகிருன் என
7 வைத்துக்கொள்வோம். அவனும் உள்ளிருந்து மறுமொழி
யாக, 'என்னைத் தொந்தரைசெய்யாதே. கதவு பூட்டியா
யிற்று. என் குழந்தைகளும் என்னேடு படுக்கையில் உள்
ளனர். எழுந்து உனக்குக் கொடுக்க முடியாது' என்று
8 சொல்லுகிருன், நண்பனே கதவைத் தட்டிக்கொண்டே
இருந்தால், அவன் தன் நண்பன் என்பதற்காக எழுந்து
கொடுக்காவிட்டாலும், அவனுடைய தொல்லையின்
பொருட்டாவது எழுந்து, அவனுக்கு எத்தனை தேவை

யோ அத்தனையும் கொடுப்பான் என்று நான் உங்களுக்
குச் சொல்லுகிறேன்.

9 ''மேலும் உங்களுக்குச் சொல்லுகிறேன்: கேளுங்கள்,
உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், கண்டடை
10 வீர்கள்; தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெ
னில், கேட்கிற எவனும் பெறுகிறான்; தேடுகிறவன்
11 கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.
உங்களில் ஒருவன் தன் தந்தையிடம் அப்பம் கேட்டால்,
அவனுக்கு கல்லையா கொடுப்பான்? மீன் கேட்டால்
12 மீனுக்குப் பதிலாகப் பாம்பையா கொடுப்பான்?
13 முட்டை கேட்டால், தேளையா கொடுப்பான்? ஆகவே
தீயோராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நன்
கொடைகள் அளிக்க அறிவீர்களானால், வானகத்தி
லுள்ள உங்கள் தந்தை, தம்மிடம் கேட்பவர்களுக்கு
எவ்வளவோ அதிகமாய் பரிசுத்த ஆவியை அளிப்பார்!''
என்றார்.

### இயேசுவும் பெயல்செபூலும்

14 ஒருநாள் அவர் பேய் ஓட்டிக் கொண்டிருந்தார். அது
ஊமைப் பேய். பேயை ஓட்டிவிடவே, ஊமையன் பேசி
15 னான். மக்கள் வியப்படைந்தனர். அவர்களுள் சிலர்,
''பேய்கள் தலைவனான பெயல்செபூலைக்கொண்டே
16 இவன் பேய் ஓட்டுகிறான்'' என்றனர். வேறு சிலர் அவ
ரைச் சோதிக்க வானிலிருந்து அருங்குறி ஒன்று காட்டும்
17 படி கேட்டனர். அவர்களுடைய எண்ணங்களை அறிந்த
இயேசுவோ' ''தனக்கு எதிராகப் பிரியும் எந்த அரசும்
பாழாய்ப்போகும்; வீடுகளும் ஒன்றன் மேல் ஒன்றாய்
18 விழுந்தழியும். பெயல்செபூலைக்கொண்டு நான் பேய்
ஓட்டுகிறேன் என்று சொல்லுகிறீர்களே; தனக்கு எதி
ராகத் தானே பிரியும் சாத்தானின் அரசு எப்படி
19 நிலைக்கும்? நான் பேய்களை ஓட்டுவது பெயல்செபூலைக்

கொண்டு என்றால், உங்கள் மக்கள் யாரைக் கொண்டு
ஓட்டுகிறார்கள். எனவே அவர்களே உங்களுக்குத் தீர்ப்
*20 பிடுவார்கள். நான் பேய்களை ஓட்டுவது கடவுளின் விர
லால் என்றால், கடவுளின் அரசு உங்களிடம் வந்துள்ளது.
21 வலியவன் போர்க்கோலம் பூண்டு தன் அரண்மனையைப்
பாதுகாத்தால், அவன் உடைமைகள் பத்திரமாக இருக்
22 கும். அவனிலும் வலியவன் ஒருவன் எதிர்த்து வந்து
அவனை வென்றால், அவன் நம்பியிருந்த போர்க் கருவி
களையெல்லாம் பறித்துக்கொண்டு கொள்ளைப் பொருளை
யும் பங்கிடுவான்.
23 என்னோடு இல்லாதவன் எனக்கு எதிராய் இருக்கிறான்.
என்னோடு சேகரிக்காதவன் சிதறடிக்கிறான்.

## அசுத்த ஆவி திரும்பி வருதல்

24 "அசுத்த ஆவி ஒருவனை விட்டு வெளியேறியபின்
வறண்ட இடங்களிலெல்லாம் சுற்றி அலைந்து, இளைப்
பாற இடம் தேடிக் கண்டடையாமல் 'நான் விட்டு
வந்த என் வீட்டிற்கே திரும்புவேன்' என்று சொல்லுகி
25 றது. திரும்பி வந்து அவ்வீடு கூட்டி அழகுபடுத்தியிருப்
26 பதைக் காண்கிறது. மீண்டும் சென்று தன்னிலும்
பொல்லாத வேறு ஏழு பேய்களை அழைத்துவர, அவை
அதனுள் நுழைந்து குடியிருக்கின்றன. அம்மனிதனின்
பின்னைய நிலை முன்னைய நிலையிலும் மோசமாயிற்று"
என்றார்.

## உண்மையான பேறு

27 அவர் இதைச் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது,
கூட்டத்திலிருந்த பெண் ஒருத்தி, உம்மைத் தாங்கிய
வயிறும், நீர் பாலுண்ட கொங்கைகளும் பேறுபெற்ற

---

* 'கடவுளின் விரல்'—கடவுளின் வல்லமையைக் குறிப்பிடும்; கடவு
ளின் கரம் அல்லது கை வன்மை (1: 51) அதையே குறிப்பிடும்.

28 வையே'' என்று குரலெடுத்துக் கூறினாள். அவரோ,
''ஆயினும், கடவுளுடைய வார்த்தையைக் கேட்டுக்
கடைப்பிடிப்பவர்கள் அதிலும் பேறு பெற்றவர்கள்''
என்றார்;

### யோனாசின் அருங்குறி

*29 கூட்டம் பெருகப் பெருக, அவர் கூறலானார்: ''இத்
தலைமுறை பொல்லாத தலைமுறை. அருங்குறி ஒன்று
கேட்கிறது. யோனாஸ் இறைவாக்கினரின் அருங்குறியே
யன்றி வேறெந்த அருங்குறியும் அதற்கு அளிக்கப்
30 படாது. எவ்வாறு யோனாஸ் நினிவே மக்களுக்கு அருங்
குறியாய் இருந்தாரோ, அவ்வாறே மனுமகனும் இத்
31 தலைமுறைக்கு அருங்குறியாய் இருப்பார். தீர்வையின்
போது தென்னாட்டு அரசி இத்தலைமுறையின் மக்களுக்கு
எதிராக எழுந்து, இவர்களைக் கண்டனம் செய்வாள்.
ஏனெனில், சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க
உலகின் கடையெல்லையிலிருந்து வந்தாள். சாலொமோ
32 னிலும் மேலானது இதோ! இங்குள்ளது. தீர்வையின்
போது, நினிவே மக்கள் இத்தலைமுறைக்கு எதிராக
எழுந்து இதனைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில்
அவர்கள் யோனாஸ் உரைத்த தூதைக் கேட்டு மனந்
திரும்பினார்கள். யோனாசிலும் மேலானது இதோ!
இங்குள்ளது.

### விளக்கின் உவமை

33 ''எவனும் விளக்கை ஏற்றி நிலவறையிலோ, மரக்
காலின் கீழோ வைப்பதில்லை. மாறாக, உள்ளே வருவோ
ரெல்லாரும் வெளிச்சத்தைக் காணும்படி விளக்குத்

---

* அருங்குறி ஒருவர் கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதகுப்ற் புதுமை ஒரு அடையாளமாகவும், அரிய சான்றாகவும் அமைவதால் ''அருங்குறி'' எனப்பட்டது.

✝34 தண்டின்மீது வைக்கிறுன். உன் கண்தான் உடலுக்கு
விளக்கு. உன் கண் தெளிவாக இருந்தால் உடல் முழு
35 வதும் ஒளியோடு விளங்கும். உன் கண் கெட்டிருந்தால்
உடல் இருண்டிருக்கும் எனவே, உன்னிலுள்ள ஒளி
36 இருளாயிருக்கிறதா என்று பார். இருள் சிறிதுமின்றி
உன் உடல் முழுவதும் ஒளியாயிருந்தால், விளக்கு தன்
கதிரால் உனக்கு ஒளி செய்வதுபோல், உன் உடல் முழு
வதும் ஒளியோடு விளங்கும்.''

அஞ்சாதீர்கள்

**12** அப்போது ஒருவரையொருவர் மிதித்துக்கொண்டு
ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருக்கையில் அவர்
தம் சீடருக்குக் கூறியதாவது: ''பரிசேயரின் வெளி
2 வேடமாகிய புளிப்புமாவைக் குறித்து எச்சரிக்கையா
யிருங்கள், வெளிப்படாதபடி மறைந்திருப்பது ஒன்று
3 மில்லை; அறியப்படாதபடி ஒளிந்திருப்பதும் ஒன்று
மில்லை. ஆதலின், நீங்கள் இருளில் கூறியதெல்லாம்
ஒளியில் கேட்கப்படும். அறைகளில் காதோடு காதாய்ப்
பேசியது கூரைமீதிருந்து அறிவிக்கப்படும்.

4 என் நண்பர்களாகிய உங்களுக்குச் சொல்லுகிறேன்.
உடலைக் கொன்றபின் அதற்குமேல் ஒன்றும் செய்ய
5 இயலாதவர்களுக்கு அஞ்சாதீர்கள். யாருக்கு அஞ்ச
வேண்டும் என்று உங்களுக்குக் காண்பிப்பேன். கொன்ற
பின் நரகத்தில் வீழ்த்தவும் வல்லவருக்கு அஞ்சுங்கள்.
6 ஆம், அவருக்கே அஞ்சுங்கள் என உங்களுக்குச் சொல்லு
கிறேன். இரண்டு காசுக்கு ஐந்து குருவிகள் விற்பதில்
லையா? அவற்றில் ஒன்றும் கடவுள் முன்னிலையில்

---

✝ உலக வாழ்க்கையில் கண் சீராயிருந்தால்தான் காண முடியும். ஞான வாழ்க்கையில் கண் போலிருப்பது மனச்சான்று, இதன் வாயிலாகத்தான் ஆன்மா நன்னெறியை அறிய முடியும்.

7 மறக்கப்படுவதில்லையே! ஆம், உங்கள் தலைமயிரெல்லாம்
எண்ணப்பட்டுள்ளது. அஞ்சாதீர்கள். ஏனெனில் குருவி
கள் பலவற்றிலும் நீங்கள் மேலானவர்கள்.

8 "நான் உங்களுக்கு சொல்லுகிறேன்: மனிதர் முன்
என்னை வெளிப்படையாக ஏற்றுக்கொள்பவன் எவனோ,
அவனை மனுமகனும் கடவுளின் தூதர்கள்முன் வெளிப்
9 படையாக ஏற்றுக்கொள்வார். மனிதர்முன் என்னை
மறுதலிக்கிறவனோ கடவுளின் தூதர்முன் மறுதலிக்கப்
*10 படுவான். மனுமகனுக்கு எதிராய்ப் பேசுகிறவன் எவ
னும் மன்னிப்புப் பெறுவான். ஆனால் பரிசுத்த ஆவி
யைப் பழிப்பவனோ மன்னிப்புப் பெறான்.

11 "செபக்கூடங்களுக்கும் ஆள்வோர் முன்னும், அதி
காரிகள் முன்னும் உங்களைக் கூட்டிக்கொண்டு போகும்
போது, எப்படிப் பதில் சொல்வது, என்ன பதில் அளிப்
பது, என்ன பேசுவது என்று கவலைப்பட வேண்டாம்.
12 ஏனெனில், அவ்வேளையில் என்ன சொல்ல வேண்டு
மென்று பரிசுத்த ஆவி உங்களுக்குக் கற்பிப்பார்."

## அறிவற்ற செல்வனின் உவமை

13 அப்போது, கூட்டத்தில் ஒருவன், "போதகரே, என்
சகோதரன் என்னுடன் சொத்தைப் பங்கிட்டுக்கொள்ளு
14 மாறு சொல்லும்" என்றான். அதற்கு அவர், 'அன்பனே,
நியாயம் தீர்க்கவோ, பாகம் பிரிக்கவோ என்னை ஏற்
15 படுத்தியதார்?" என்றார். பின் மக்களைப் பார்த்து,
"எவ்வகைப் பொருளாசையும் கொள்ளாதபடி, கவன
மாயிருங்கள். ஏனெனில், ஒருவனுக்கு எவ்வளவுதானி
ருந்தாலும் செல்வப் பெருக்கினால் வாழ்வு வந்து
விடாது" என்றார்.

---

* 'பரிசுத்த ஆவியைப் பழிப்பது' என்றால் அவருடைய வல்லமையால் நிகழும் புதுமைகளைக் கண்டும் அவை பேயின் செயல்கள் என்று மனம் அறியக் கூறுதலாம்.

16 பின்னர், அவர்களுக்கு இவ்வுவமையைச் சொன்னார்:
"பணக்காரன் ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.
17 அவன் 'விளைபொருளைச் சேர்த்துவைக்க இடமில்லையே.
18 என்ன செய்வது என்று தனக்குள் எண்ணி, 'சரி, என்
களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டு
வேன். அங்கு என் உடைமை, கோதுமை எல்லாம்
19 சேர்த்து வைத்து, 'நெஞ்சே, பல்லாண்டுகளுக்கு வேண்
டிய பொருள் உனக்கு ஏராளமாய் உள்ளது. இளைப்
20 பாறு; உண்டு குடித்து விருந்தாடு என்று சொல்லிக்
கொள்வேன்' என்றான். ஆனால், கடவுள், 'அறிவிலியே,
21 இன்றிரவே உன் உயிரை வாங்கப் போகிறார்கள். நீ
தேடி வைத்தது யாருக்குக் கிடைக்குமோ?" என்றார்.
கடவுள்முன் செல்வம் இல்லாதவனாய், தனக்காகவே
செல்வந் திரட்டுகிறவன் இவ்வாறே இருக்கிறான்."

### கடவுள்மேல் நம்பிக்கை

22 பின்னர், அவர் தம் சீடருக்குக் கூறியதாவது: "ஆதலால்
உங்களுக்குச் சொல்லுகிறேன்; உயிர் வாழ எதை உண்ப
தென்றோ, உடலை மூட எதை உடுப்பதென்றோ கவலைப்
23 பட வேண்டாம். ஏனெனில், உணவைவிட உயிரும்,
24 உடையைவிட உடலும் உயர்ந்தவை. காக்கைகளைக்
கவனியுங்கள். அவை விதைப்பதுமில்லை, அறுப்பது
மில்லை. அவற்றிற்குக் குதிருமில்லை, களஞ்சியமுமில்லை.
கடவுளே அவற்றிற்கு உணவளிக்கிறார். பறவைகளைவிட
25 நீங்கள் எவ்வளவோ மேலானவர்கள். கவலைப்படுவதால்
உங்களில் எவன் தன் வளர்த்திக்கு ஒரு முழம் கூட்ட
முடியும்?

26 'ஆதலால், மிகவும் சின்னஞ்சிறிய செயலையும் செய்ய
இயலாத நீங்கள் மற்றவைபற்றிக் கவலைகொள்வா
27 னேன்? காட்டு மலர்கள் எப்படி வளர்கின்றன என்று
கவனியுங்கள். அவை உழைப்பதுமில்லை, நூற்பது

மில்லை. ஆயினும் சாலொமோன்கூடத் தம் மாட்சியி
லெல்லாம் இவற்றுள் ஒன்றைப்போல் உடுத்தியிருந்த
தில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
28 "குறைவான விசுவாசம் உள்ளவர்களே, வயலில் இன்
றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடும் புல்லைக்
கடவுள் இவ்வாறு உடுத்துவாரானால் உங்களுக்கு எவ்
29 வளவுதான் செய்யமாட்டார்? எதை உண்பது. எதைக்
குடிப்பது என்ற நினைவாக இருக்கவேண்டாம். அவற்றை
30 ஏக்கத்தோடு தேடவேண்டாம். ஏனெனில், உலகத்தில்
புறவினத்தார்தான் இவையெல்லாம் தேடியலைவர்.
31 இவை உங்களுக்குத் தேவை என்று தந்தைக்குத் தெரி
யும். கடவுளின் அரசையே முதலில் தேடுங்கள். இவை
அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.
32 சிறு மந்தையே. அஞ்சாதே; ஏனெனில், உங்கள்
தந்தை தம் அரசை உங்களுக்குக் கொடுக்கத் திருவுளங்
கொண்டார்.

விழிப்புத் தேவை

33 "உங்கள் உடைமைகளை விற்றுப் பிச்சையிடுங்கள்.
இற்றுப்போகாத பணப்பைகளையும், வானகத்தில் குறை
யாத செல்வத்தையும் தேடிக்கொள்ளுங்கள். அங்கே
34 திருடன் அண்டுவதில்லை. பூச்சி அரிப்பதுமில்லை. உங்கள்
35 செல்வம் எங்குள்ளதோ, அங்கே உங்கள் உள்ளமும்
இருக்கும். இடுப்பில் வரிந்து கட்டியிருங்கள். விளக்கு
36 களும் எரிந்துகொண்டிருக்கட்டும், திருமண விருந்துக்கு
போன தம் தலைவன், எப்பொழுது வருவானோ என்று
காத்திருக்கிறவர்களைப்போல, நீங்களும் இருங்கள். அவன்
37 வந்து தட்டிய உடனே திறக்கவேண்டுமன்றோ? எவ்வூழி
யர் விழித்திருக்கக் காண்பானோ, அவ்வூழியர் பேறு
பெற்றவர்கள். உறுதியாகவே உங்களுக்குச் சொல்லு
கிறேன். அவன் இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டு.
அவர்களைப் பந்தியிலமர்த்தி, ஒவ்வொருவனையும்

38 அணுகி அவர்களுக்குப் பணிவிடை புரிவான். அவன்
இரண்டாம் சாமத்தில் வந்தாலும், மூன்றாம்சாமத்தில்
வந்தாலும் அவர்கள் விழிப்பாயிருக்கக் கண்டால், அவ்
39 வூழியர் பேறு பெற்றவர்கள். திருடன் இன்ன சாமத்
தில் வருவான் என்று வீட்டுத் தலைவனுக்குத் தெரிந்
தால், வீட்டில் கன்னம்வைக்க விடமாட்டான் அன்றோ?
40 இதையுணர்ந்து நீங்களும் ஆயத்தமாக இருங்கள்.
ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன்
வருவார்.''
41 இதைக்கேட்ட இராயப்பர், ''ஆண்டவரே, இவ்வுவமை
எங்களுக்கு மட்டுமா? எல்லாருக்குமா?'' என்று வினவி
42 னார். ஆண்டவர் கூறியதாவது: ''தக்க காலத்தில் தன்
வேலையாட்களுக்குப் படியளக்கத் தலைவன் ஏற்படுத்திய
நம்பிக்கையும் விவேகமும் உள்ள கண்காணிப்பாளன்
43 யார்? எந்த ஊழியன் அவ்வாறு செய்துகொண்டிருப்
பதைத் தலைவன் வந்து காண்பானோ அவன் பேறுபெற்ற
44 வன். அவனைத் தன்னுடைமைக்கெல்லாம் அதிகாரியாக
ஏற்படுத்துவான் என உங்களுக்கு உறுதியாகச் சொல்லு
45 கிறேன். ஆனால் 'என் தலைவர் வரக் காலம் தாழ்த்து
கிறார்' என்று அவ்வூழியன் தனக்குள் சொல்லிக்கொண்டு,
வேலைக்காரர் வேலைக்காரிகளை அடித்து, மயக்கமுற
46 உண்டு குடிக்கத் தொடங்கினால், அவ்வூழியன் எதிர்
பாராத நாளில், அறியாத நேரத்தில் தலைவன் வந்து
அவனை நீக்கிவிட்டு, விசுவாசமற்றவர் கதிக்கு அவனை
47 உள்ளாக்குவான். தன் தலைவனின் விருப்பத்தை அறிந்
திருந்தும், முன்னேற்பாடு செய்யாமலும், அவனது
விருப்பத்தின்படி நடவாமலும் இருந்த ஊழியன் நன்றாய்
48 அடிபடுவான். அவன் விருப்பத்தை அறியாமல் தண்ட
னைக்குரியவற்றைச் செய்பவனோ கொஞ்சம் அடிபடு
வான். எவனுக்கு அதிகம் அளிக்கப்பட்டதோ, அவனி
டம் அதிகம் எதிர்பார்க்கப்படும். எவனிடம் அதிகம்

ஒப்படைத்தார்களோ, அவனிடம் இன்னும் அதிக
மாய்க் கேட்பார்கள்.

தீயை மூட்டவே வந்தேன்

*49 "மண்ணுலகில் தீயை மூட்டவே வந்தேன். இப்போதே
அது பற்றிஎரிய வேண்டுமென்று எவ்வளவோ விரும்பு
50 கிறேன்! நான் பெறவேண்டிய ஞானஸ்நானம் ஒன்
றுண்டு. அது நிறைவேறும் அளவும் நான் எவ்வளவோ
51 ஏக்கமாயிருக்கிறேன். நான் மண்ணுலகிற்குச் சமாதா
னத்தைஅளிக்க வந்தேனென்று எண்ணுகிறீர்கள்? இல்லை,
பிரிவினை உண்டாக்கவே வந்தேன் என உங்களுக்குச்
52 சொல்லுகிறேன். இதுமுதல் ஒரு வீட்டிலுள்ள ஐவருள்
மூவர் இருவருக்கு எதிராகவும், இருவர் மூவருக்கு எதி
53 ராகவும் பிரிந்திருப்பர். தகப்பன் மகனுக்கும், மகன்
தகப்பனுக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமி
மருமகளுக்கும், மருமகள் மாமிக்கும் எதிராகப் பிரிக்
கப்படுவர்."

வானிலிருந்து அருங்குறி

54 அவர் கூட்டத்தை நோக்கி, "மேற்கிலிருந்து மேகம்
எழும்புவதை நீங்கள் பார்த்ததும் மழை வரும் என்
55 கிறீர்கள். அப்படியே நடக்கிறது. தெற்கிலிருந்து காற்று
அடிப்பதைப் பார்க்கும் பொழுது மிகுந்த வெப்பம்
உண்டாகும் என்கிறீர்கள். அதுவும் அப்படியே நடக்
56 கிறது. வெளிவேடக்காரரே, வானின் தோற்றத்தை
யும், பூமியின் தோற்றத்தையும் உய்த்துணர நீங்கள்
அறிந்திருந்தும் இக்காலத்தை நீங்கள் உய்த்துணராமல்
இருப்பது எப்படி?

57 "எது நீதியானதென்று நீங்களாகவே ஏன் தீர்மானிக்க
58 முடியாது? நீ உன் எதிரியோடு அதிகாரியிடம் செல்லும்

* 'தீயை'—ஆன்மாவைப் புனிதப்படுத்தும் தீயை

போது, வழியிலேயே வழக்கைத் தீர்த்துக்கொள்ள
முயற்சிசெய். இல்லையேல், அவன் உன்னை நீதிபதியிடம்
இழுத்துக் கொண்டு போக, நீதிபதி உன்னைச் சேவகனி
டம் கையளிக்கக் கூடும். சேவகன் உன்னைச் சிறையில்
59 அடைக்க நேரிடும். கடைசிக் காசைத் திருப்பிக்
கொடுக்குமளவும் அங்கிருந்து நீ வெளியேற மாட்டாய்
என உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார்.

**காய்க்காத அத்திமரம்**

**13** அவ்வேளையில் சிலர் அவரிடம் வந்து, பிலாத்து கலி
லேயரின் இரத்தத்தை அவர்களுடைய பலியோடு கலந்
2 தான் என்ற செய்தியை அறிவித்தனர். அவர்மறுமொழி
யாக, ''இக்கலிலேயர் இத்தகைய சாவுக்கு உள்ளானோர்
கள் என்பதால், மற்றெல்லாக் கலிலேயரையும்விட
3 இவர்கள் பாவிகள் என்று கருதுகிறீர்களா? அப்படி
யன்று என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மனந்
திரும்பாவிடில் நீங்கள் எல்லோரும் அவ்வாறு அழிவீர்
4 கள். சிலோவாமில் கோபுரம் விழுந்து பதினெட்டுப்
பேரைக் கொன்றதே; அவர்கள் யெருசலேமில் வாழ்ந்த
மற்றெல்லாரையும்விடக் குற்றவாளிகள் என்று கருது
5 கிறீர்களா? அப்படியன்று என நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன். மனந்திரும்பாவிடில் நீங்கள் எல்லோ
ரும் அவ்வாறு அழிவீர்கள்'' என்றார்.

6 மேலும் அவர் இந்த உவமையைக் கூறினார்: ''ஒருவன்
தன் திராட்சைத் தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை
நட்டுவைத்திருந்தான். அவன் வந்து அதிலே பழம்
7 தேடியபொழுது ஒன்றுங் காணவில்லை. ஆகவே தோட்
டக்காரனிடம், 'மூன்று ஆண்டுகளாக வந்து இந்த அத்தி
மரத்திலே பழம் தேடுகிறேன். ஒன்றுங் காணவில்லை.
இதை வெட்டிவிடு. ஏன் வீணாக இடத்தை அடைத்துக்
கொண்டிருக்கிறது?'' என்றான். அதற்கு அவன், 'ஐயா,

8 இந்த ஆண்டும் இருக்கட்டும். சுற்றிலும் கொத்தி எருப்
9 போடுவேன். காய்த்தால் சரி, இல்லாவிட்டால் வெட்டி
விடலாம்'' என்றான்.

ஓய்வுநாளில் குணமடைந்த பெண்

10 ஓய்வுநாளில் செபக்கூடம் ஒன்றில் போதித்துக்கொண்
11 டிருந்தார். பதினெட்டு ஆண்டுகளாகப் பேயால் நோயுற்
றிருந்த பெண் ஒருத்தி அங்கிருந்தாள். அவள் நிமிர்ந்து
12 பார்க்கவும் முடியாத ஒரு கூனி. அவளைக்கண்ட இயேசு.
தம்மிடம் அழைத்து, அவளிடம், ''அம்மா, உன் நோயி
னின்று நீ விடுபட்டாய்'' என்று, தம் கைகளை அவள்
13 மீது வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து, கடவுளை
மகிமைப்படுத்தலானாள்.

14 இயேசு ஓய்வுநாளில் குணமாக்கியதைப் பார்த்து.
செபக்கூடத் தலைவன் கோபவெறிகொண்டு, கூட்
டத்தை நோக்கி, வேலைசெய்ய ஆறு நாள் உண்டே,
அந்நாட்களில் வந்து குணம்பெற்றுப் போங்கள். ஓய்வு
நாளில் ஆகாது'' என்றான். ஆண்டவர் அவனுக்கு மறு
15 மொழியாக, ''வெளி வேடக்காரரே, ஓய்வுநாளிலே
உங்களுள் ஒவ்வொருவனும் தன் எருதையோ கழுதை
யையோ தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டு
16 போய்த் தண்ணீர் காட்டுவதில்லையோ? ஆபிரகாமின்
மகளாகிய இவளைப் பதினெட்டு ஆண்டுகளாகச் சாத்
தான் கட்டிவைத்திருந்தான் இந்தக் கட்டிலிருந்து
இவளை ஓய்வுநாளில் விடுவிப்பது ஆகாதசெயலா?''
17 என்றார். என்றதும், அவருடைய எதிரிகள் அனைவரும்
வெட்கிப் போயினர். அவர் செய்த மாட்சிக்குரிய
செயல்களை எல்லாம் பார்த்து; கூட்டம் அனைத்தும்
மகிழ்ந்தது.

### கடுகு விதை, புளிப்பு மாவு உவமைகள்

18 அதன்பின் அவர், "கடவுளின் அரசு எதற்கு ஒப்
19 பானது? அதை நான் எதற்கு ஒப்பிடுவேன்? | அது
கடுகு மணிக்கு ஒப்பாகும். ஒருவன் அதை எடுத்துத்
தன் தோட்டத்திலே விதைக்கிறான். அது வளர்ந்து
பெரியமரமாயிற்று. வானத்துப் பறவைகளும் அதனு
20 டைய கிளைகளில் வந்து தங்குகின்றன'' என்றார்.
21 மீண்டும் அவர் சொன்னதாவது: ''கடவுளின் அரசை
எதற்கு ஒப்பிடுவேன்? அது புளிப்பு மாவுக்கு ஒப்பா
கும். அதைப் பெண் ஒருத்தி எடுத்து மூன்றுபடி மா
வில் பொதித்து வைக்கிறாள். மாவு முழுவதும் புளிப்
பேறுகிறது.''

### பின்னையோர் முன்னையோராதல்

22 நகரங்கள் ஊர்கள்தோறும் போதித்துக்கொண்டே
23 அவர் யெருசலேம் நோக்கிப் பயணம் செய்தார், ஒரு
வன் அவரைப் பார்த்து. "ஆண்டவரே, மீட்புப்
பெறுபவர் சிலர் தானோ?" என்று கேட்க, அவர்
24 மக்களுக்குக் கூறியது: ''ஒடுக்கமான வாயில் வழியே
நுழையப் பாடுபடுங்கள். ஏனெனில், பலர் நுழைய
25 முயன்றும் முடியாமற் போகும் என்று உங்களுக்குச்
சொல்லுகிறேன். வீட்டுத் தலைவன் எழுந்து கதவைத்
தாளிட, நீங்கள் வெளியே நின்று கதவைத் தட்டிக்
கொண்டே, 'ஆண்டவரே எங்களுக்குக் கதவைத்
26 திறந்துவிடும்' என்பீர்கள். அதற்கு அவர், 'நீங்கள் எவ்
விடத்தாரோ, யானறியேன்' என்று கூறுவார். பின்பு
நீங்கள் 'உம்முடன் உண்டோம், குடித்தோம், நீரும்
எங்கள் தெருக்களில் போதித்தீரே' என்று சொல்வீர்
27 கள். ஆனால் அவர், 'நீங்கள் எவ்விடத்தாரோ, யானறி
யேன். அநீதி புரியும் அனைவரும் என்னை விட்டு அகன்று
28 போங்கள்' என்பார். ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபும்
இன்னும் எல்லா இறைவாக்கினர்களும். கடவுளின்

அரசில் இருப்பதையும், நீங்கள் புறம்பே தள்ளப்படு
வதையும் காணும்போது, புலம்பலும் பற்கடிப்பும்
29 இருக்கும். கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்
கிலும் இருந்து மக்கள் வந்து கடவுளின் அரசில் பந்தி
அமர்வார்கள்.
30 இதோ! கடைசியானோர் சிலர் முதலாவர்,
முதலானோர் சிலர் கடைசியாவர்.''

யெருசலேமே இயேசு பலியாகும் இடம்

*31 அந்நேரத்தில் பரிசேயர் சிலர் அவரிடம் வந்து, ''இங்
கிருந்து போய்விடும். ஏரோது உம்மைக் கொல்ல
32 வேண்டுமென்றிருக்கிறான்'' என்றனர். அதற்கு அவர்,
''நீங்கள் போய் அந்தக் குள்ளநரியிடம் இதை அறிவி
யுங்கள்: இன்றும் நாளையும் பேய் ஓட்டுகிறேன். நோய்
களையும் குணமாக்குகிறேன். மூன்றும் நாள் முடிவடை
வேன். ஆயினும், இன்றும் நாளையும் அடுத்த நாளும்
33 நான் என் வழியே செல்லவேண்டும். ஏனெனில், இறை
வாக்கினர் யெருசலேமுக்கு வெளியே மடிவது முறை
யாகாதே!

†34 ''யெருசலேமே, இறைவாக்கினர்களைக் கொன்று, உன்
னிடம் அனுப்பப்பட்டோரையும் கல்லால் எறியும் யெருச
லேமே, கோழி தன் குஞ்சுகளை இறக்கைக்குள் ஒன்று
சேர்ப்பதுபோல, நானும் உன் மக்களை ஒன்றுசேர்க்க
எத்தனையோ முறை விரும்பினேன். நீயோ உடன்பட
35 வில்லை. இதோ! உங்கள் வீடு குடியற்றுப் போகும்.
'ஆண்டவருடைய பெயரால் வருகிறவர் வாழி' என்று
நீங்கள் கூறும் நாள்வரை என்னைக் காணமாட்டீர்கள்
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார்.

---

* 3 : 1 காண்.

† லூக். 19 : 38 காண்.

### ஓய்வுநாளில் நீர்க்கோவை குணமாதல்

**14** ஓய்வு நாளில் பரிசேயரின் தலைவனொருவன் வீட்டில்
உணவருந்தச் சென்றபோது, அவர்கள் அவரைக் கூர்ந்து
2 கவனித்தனர். அங்கே அவருக்கு எதிரே, நீர்க்கோவை
3 நோயுற்ற ஒருவன் இருந்தான். இயேசு சட்ட வல்லு
நரையும் பரிசேயரையும் நோக்கி, ''ஓய்வுநாளில் குண
4 மாக்குதல் முறையா? இல்லையா?'' எனக் கேட்டார்.
அவர்கள் பேசாதிருந்தனர். அவரோ அவன் கையைப்
5 பிடித்துக் குணமாக்கி அனுப்பிவிட்டார். பின் அவர்க
ளிடம், உங்களுள் ஒருவனுடைய மகனோ, மாடோ
கிணற்றில் விழுந்தால் ஓய்வு நாளென்றாலும் உடனே
6 அவன் தூக்கிவிட மாட்டானா?'' என்றார். அதற்கு
மறுமொழி கூற அவர்களால் முடியவில்லை.

### விருந்தின்பொழுது அளித்த அறிவுரை

7 மேலும், அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதலிடங்
களைத் தேர்ந்துகொள்ளுவதைக் கண்டு. அவர்களுக்கு
8 உவமையாகக் கூறினதாவது: ''உன்னை ஒருவன் மண
விருந்திற்கு அழைக்கும்போது, நீ முதலிடத்தில் அம
ராதே. ஏனெனில்,உன்னைவிட மதிப்பிற்குரிய ஒருவரை
9 அவன் அழைத்திருக்கலாம். உன்னையும் அவரையும்
அழைத்தவன் வந்து உன்னை நோக்கி, 'இவருக்கு உன்
இடத்தைவிடு' என்பான். அப்போது நீவெட்கிக் கடைசி
10 இடத்திற்குச் செல்லவேண்டியிருக்கும். மாறாக, உன்னை
ஒருவன் அழைக்கும்போது கடைசி இடத்தில் போய்
அமர்ந்துகொள். அப்படிச் செய்தால் உன்னை அழைத்
தவன் வந்து உன்னை நோக்கி. 'நண்ப, மேல் இடத்திற்
குப் போம்' என்று சொல்வான். அப்பொழுது உன்னு
11 டன் பந்தியிலிருப்பவர் முன்பாக நீ பெருமை அடை
வாய். ஏனெனில், தன்னை உயர்த்துகிற எவனும்
தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்
தப் பெறுவான்.''

12 பின் தம்மை அழைத்திருந்தவனை நோக்கி, "நீ பகல்
உணவிற்காவது, இரா உணவிற்காவது உன் நண்பர்
களையோ, சகோதரர்களையோ, உறவினர்களையோ,
செல்வரான அண்டை வீட்டாரையோ அழைக்காதே.
அவர்களும் உன்னைத் திரும்ப அழைக்கலாம். அப்
13 போது உனக்குக் கைம்மாறு கிடைத்துவிடும். மாறாக
நீ விருந்து நடத்தும்போது ஏழைகள், ஊனர்கள்,
14 முடவர்கள், குருடர்கள் ஆகியோரைக் கூப்பிடு. அப்
போது நீ பேறுபெற்றவன். ஏனெனில் உனக்குக் கைம்
மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நீதிமான்கள்
உயிர்த்தெழும்போது உனக்குக் கைம்மாறு கிடைக்கும்"
என்றார்.

திருமண விருந்து

15 அவருடன் பந்தியில் இருந்தவர்களுள் ஒருவன் இதைக்
கேட்டு அவரை நோக்கி, கடவுளின் அரசில் விருந்து
16 உண்பவன் பேறுபெற்றவன்" என்றான். அதற்கு அவர்
கூறியதாவது: "ஒருவன் பெரிய விருந்து செய்ய விரும்
17 பிப் பலரை அழைத்தான். விருந்துக்கு நேரமானதும்
'எல்லாம் ஏற்பாடாயிற்று வாருங்கள்' என்று அழைக்
கப் பெற்றவர்களிடம் சொல்லும்படி தன் ஊழியனை
18 அனுப்பினான். எல்லாரும் ஒன்றுபோல் சாக்குச் சொல்
லத் தொடங்கினர். 'தோட்டம் வாங்கியிருக்கிறேன்.
அதை நான் கட்டாயம் போய்ப் பார்க்க வேண்டும்.
என்னை மன்னிக்க வேண்டுகிறேன்' என்றான் ஒருவன்.
19 'நான் ஐந்தேர் மாடு வாங்கியிருக்கிறேன். அவற்றை
ஓட்டிப்பார்க்க போகிறேன். என்னை மன்னிக்க வேண்டு
20 கிறேன்' என்றான் இன்னொருவன். 'நான் மணமுடித்துள்
ளேன்; ஆதலால் என்னால் வரமுடியாது' என்றான்
வேறொருவன்.

21 ஊழியன் திரும்பி வந்து இதையெல்லாம் தன் தலை
வனுக்கு அறிவித்தான். வீட்டுத் தலைவன் சினமுற்று

தன் ஊழியனிடம், 'நகரத்தின் தெருக்களிலும் சந்து
களிலும் விரைவில் சென்று, ஏழைகள், ஊனர்கள்.
குருடர்கள்,முடவர்கள் ஆகியோரை இங்கே கூட்டிவா'
என்றான். ஊழியனும் ''ஐயா, நீர் கட்டளையிட்டபடி
22 செய்தாயிற்று; இன்னும் இடமிருக்கிறது' என்றான்.
23 அதற்குத் தலைவன், 'சாலைகளிலும் வேலியோரங்களி
லும் போய் என் வீடு நிறையும்படி மக்களை வற்புறுத்திக்
24 கூட்டிவா. அழைக்கப் பெற்றவர்களுள் எவனும் என்
விருந்தைச் சுவைக்க மாட்டான் என உங்களுக்குச்
சொல்லுகிறேன்' என்றான்.

### இயேசுவைப் பின்தொடர்தல்

25 ஒருநாள் அவருடன் பெருங்கூட்டம் சென்றுகொண்
டிருந்தது. அவர் அவர்கள் பக்கம் திரும்பிக் கூறியதா
*26 வது: ''என்னிடம் வருகிறவன் தன் தந்தை, தாய்,
மனைவி, மக்கள், சகோதரர், சகோதரிகளையும், ஏன்
தன் உயிரையுமே வெறுக்காவிட்டால் என் சீடனா
27 யிருக்க முடியாது. தன் சிலுவையைச் சுமந்துகொண்டு
என்னைப் பின் செல்லாதவன் என் சீடனாயிருக்க
முடியாது.''
28 ''உங்களுள் யாராவது கோபுரங் கட்ட விரும்பினால்
வேலையை முடிக்கத் தன்னால் முடியுமாவென்று பார்ப்
பதற்கு, முதலில் உட்கார்ந்து, வேண்டிய செலவைக்
29 கணிக்க மாட்டானா? இல்லாவிடில் அதற்கு அடித்தள
மிட்டபின் முடிக்கமுடியாததைக் கண்ணுறும் யாவரும்,
30 'இவன் கட்டத் தொடங்கினான், முடிக்கவில்லை' என்று
31 ஏளனம் செய்வர். அல்லது, ஓர் அரசன் மற்றோர்
அரசன்மேல் போர் தொடுக்கப்போகுமுன், இருபதா

* 'வெறுக்காவிட்டால்' — என்பது, செமிட்டிக் மொழிகளின் மரபுப்படி தாய் தந்தையரைவிட இயேசுவை மிகுதியாய் விரும்பித் தேர்ந்துகொள்ளா விட்டால் என்று பொருள்படும்.

யிரம் பேருடன் தன்னை எதிர்த்து வருபவனை பத்தா
யிரம் பேருடன் எதிர்க்க முடியுமோ என்று முதலில்
32 அமர்ந்து ஆராய்ந்து பார்க்க மாட்டானா? எதிர்க்க
முடியாதெனில், அவன் இன்னும் தொலைவிலிருக்கும்
33 பொழுதே தூது விடுத்து, சமாதானத்திற்கு ஆவன
கோருவான். இவ்வாறே தன் உடைமை யெல்லாம்
துறக்காவிடில் உங்களுள் எவனும் என் சீடனாயிருக்க
முடியாது.''

### சாரமற்றுப்போன உப்பு

34 ''உப்பு நல்லதுதான். ஆனால் உப்பு சாரமற்றுப்போனால்
35 வேறு எதனால் சாரம் ஏற்றப் பெறும்? நிலத்திற்கோ
எருக்குழிக்கோ பயனற்றது. வெளியில்தான் கொட்டப்
படும். கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்.''

### காணாமற்போன ஆடு

**15** அவர் சொல்வதைக் கேட்க ஆயக்காரரும் பாவிகளும்
2 அவரை அணுகியவண்ணமாயிருந்தனர். அதனால் பரி
சேயரும் மறைநூல் வல்லுநரும், ''இவர் பாவிகளை வர
வேற்கிறார். அவர்களோடு உண்கிறார்'' என்று முணு
3 முணுத்தனர். அப்போது அவர் பின்வரும் உவமையைக்
4 கூறினார்: ''உங்களுள் ஒருவனுக்கு நூறு ஆடுகள் இருக்க,
அவற்றில் ஒன்றை இழந்தால் அவன் தொண்ணூற்
றொன்பது ஆடுகளைப் பாழ்வெளியில் விட்டுவிட்டு,
இழந்த ஆட்டைக் கண்டு பிடிக்கும்வரை தேடிச் செல்ல
5 மாட்டானா? கண்டுபிடித்த பின் அதைத் தன் தோள்
6 மேல் போட்டுக்கொண்டு, மகிழ்ச்சியோடு வீட்டிற்கு
வந்து நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் அழை
த்து, 'என்னோடு மகிழுங்கள். ஏனெனில், இழந்துபோன
என் ஆட்டைக் கண்டுபிடித்து விட்டேன்' என்பான்.
7 அவ்வாறே மனந்திரும்பத் தேவையில்லாத தொண்ணூற்
றொன்பது நீதிமான்களைக் குறித்து வானகத்தில் உண்

டாகும் மகிழ்ச்சியைவிட,மனந்திரும்பும் ஒரு பாவியைக்
குறித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும் என்று உங்களுக்
குச் சொல்லுகிறேன்.''

### காணமற்போன பணம்

8 ''ஒரு பெண்ணிடம் இருந்த பத்துவெள்ளிக் காசுகளுள்
ஒன்று காணமற்போய்விட்டால்,விளக்கேற்றி,வீட்டைப்
பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும்வரை, அவள் அக்கறை
9 யோடு தேடுவதில்லையா? அதைக் கண்டுபிடித்தபின்,
தன் தோழியரையும் அண்டை வீட்டுப் பெண்களையும்
அழைத்து, 'என்னோடு மகிழுங்கள். ஏனெனில், காண
மற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்து விட்டேன்'
10 என்பாள். அவ்வாறே, மனந்திரும்பும் ஒரு பாவியைக்
குறித்துக் கடவுளுடைய தூதரிடையே மகிழ்ச்சியுண்டா
கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.''

### ஊதாரியின் உவமை

11 அவர் மேலும் கூறியதாவது : ''ஒருவனுக்கு மக்கள்
12 இருவர் இருந்தனர். இளையவன் தந்தையை நோக்கி,
'அப்பா, சொத்தில் எனக்கு வரவேண்டிய பங்கைக்
கொடும்' என்றான். அவர் தம் சொத்தை அவர்களுக்
13 குப் பகிர்ந்து கொடுத்தார். சில நாட்களுக்குப்பின்
இளையமகன் தன் சொத்தெல்லாம் விற்றுப் பணத்தைத்
திரட்டிக்கொண்டு, தொலை நாட்டிற்குப் பயணமானான்.
அவ்விடத்தில் ஊதாரித்தனமாக வாழ்ந்து, சொத்தெல்
14 லாம் அழித்தான். எல்லாவற்றையும் செலவழித்த
பின்பு,அந்நாடெங்கும் கொடிய பஞ்சம்ஏற்பட்டது. அப்
15 போது அவன் வறுமையுறலானான். அந்நாட்டுக் குடி
களுள் ஒருவனிடம் அண்டிப் பிழைக்கச்சென்றான். அவன்
16 அவனைப் பன்றி மேய்க்கத் தன் வயலுக்கு அனுப்பினான்.
பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தன்வயிற்றை நிரப்ப

17 விரும்பினுன். ஆனுல், அதையும் அவனுக்கு அளிப்பா
ரில்லை. அறிவு தெளிந்து. 'என் தந்தையின் கூலியாட்
18 கள் எத்தனையோபேருக்கு நிறைய உணவு இருக்க, நான்
இங்கு பசியால் மடிகிறேனே. எழுந்து என் தந்தை
யிடம் போவேன். போய், ''அப்பா, வானகத்திற்கு
எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன்.
19 இனிமேல் நான் உம்முடைய மகன் என்று எண்ணப்படத்
தகுதியற்றவன். என்னை உம்முடைய கூலியாட்களுள்
ஒருவனுக நடத்தும்'' என்று அவரிடம் சொல்வேன்'
20 என்ருன். அப்படியே எழுந்து தன் தந்தையிடம் வந்
தான். அவன் தொலைவில் வரும்போதே அவனுடைய
தந்தை அவனைக் கண்டு மனமுருகி, ஓடிப்போய் அவனைக்
21 கட்டி அணைத்து முத்தமிட்டார். மகன் அவரிடம்,
'அப்பா, வானகத்திற்கு எதிராகவும், உமக்கு முன்பாக
வும் குற்றம் செய்தேன். இனிமேல் உம்முடைய மகன்
என்று எண்ணப்பட நான் தகுதியற்றவன்' என்ருன்.
22 தந்தையோ ஊழியர்களை நோக்கி, 'முதல்தரமான
ஆடை கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள். கைக்கு
மோதிரமும், காலுக்கு மிதியடியும் விரைவில் அணிவி
23 யுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்
24 கள். விருந்து கொண்டாடுவோம். ஏனெனில், இறந்து
போயிருந்த என் மகன் இவன் மீண்டும் உயிர் பெற்
றுள்ளான். காணுமற்போயிருந்தவன் மீண்டும் கண்டு
பிடிக்கப்பட்டுள்ளான்' என்ருர். அவர்கள் விருந்து
25 கொண்டாடத் தொடங்கினர். அப்போது மூத்த மகன்
வயலில் இருந்தான். வயலிலிருந்து திரும்பி வீட்டை
நெருங்கியபொழுது நடனத்தையும் இசை முழக்கத்தை
26 யும் கேட்டு, ஊழியர்களுள் ஒருவனை அழைத்து நடப்ப
27 தென்னவென்று வினவினுன். அதற்கு ஊழியன், 'உம்
தம்பி வந்துவிட்டார். அவர் நலமாகத் தம்மிடம் வந்து
28 சேர்ந்ததால், உம் தந்தை கொழுத்த கன்றை அடித்
திருக்கிருர்' என்ருன். அவனே சினந்து உள்ளே நுழைய

மனமில்லாதிருந்தான். எனவே, அவனுடைய தந்தை
29 வெளியில் வந்து அவனை அழைத்தார் அவன் தன்
தந்தையிடம், 'இதோ! இத்தனை ஆண்டுகளாக உமக்கு
ஊழியம்செய்து வருகிறேன்; உம்முடைய கட்டளையை
என்றும் மீறியதில்லை. ஆயினும் என் நண்பர்களோடு
விருந்து கொண்டாட ஓர் ஆட்டுக் குட்டிகூட நீர் எனக்
30 குக் கொடுத்ததில்லை. விலைமாதரோடு உமது சொத்தை
யெல்லாம் அழித்துவிட்ட இந்த மகன் வந்தபொழுது,
அவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கின்றீரே'
31 என்றான். அதற்கு தந்தை, 'மகனே, நீ என்றும் என்
னுடன் இருக்கிறாய். என்னுடையதெல்லாம் உன்னுடை
32 யதே. நாம் விருந்தாடி மகிழ்வது முறையே. ஏனெனில்,
உன் தம்பி இறந்துபோயிருந்தான், உயிர்த்துவிட்டான்;
காணமற்போயிருந்தான், கிடைத்துவிட்டான்' என்றார்."

நீதியற்ற கண்காணிப்பாளன்

**16** மேலும் அவர் தம் சீடர்களுக்குச் சொன்னதாவது:
"பணக்காரன் ஒருவனிடம் கண்காணிப்பாளன் ஒருவன்
இருந்தான். தன் தலைவனின் உடைமைகளை விரயம்
2 செய்ததாக அவன்மீது குற்றஞ் சாட்டப்பட்டது. தலை
வன் அவனை அழைத்து, 'என்ன இது? நான் உன்னைப்
பற்றி இப்படியெல்லாம் கேள்விப்படுகிறேன். உன் கண்
காணிப்புக் கணக்கை ஒப்புவி. நீ இனி என் கண்காணிப்
3 பாளனாய் இருக்க முடியாது' என்றான் அப்போது கண்
காணிப்பாளன், 'இனி என்ன செய்வது? கண்காணிப்பி
னின்று என்னைத் தலைவன் நீக்கிவிடப்போகிறானே மண்
வெட்டவோ எனக்கு வலிமையில்லை; பிச்சையெடுக்கவோ
வெட்கமாய் இருக்கிறது. கண்காணிப்பினின்று நான்
4 தள்ளப்படும்போது, பிறர் என்னைத் தங்கள் வீட்டில்
ஏற்றுக்கொள்ளும்படி என்ன செய்ய வேண்டுமென்பது
எனக்குத் தெரியும்' என்று தனக்குள்ளே சொல்லிக்
கொண்டான்.

5 ''பின்பு, அவன் தன் தலைவனிடம் கடன்பட்டவர்களை
ஒவ்வொருவனாக அழைத்தான். ஒருவனைப் பார்த்து,
'என் தலைவனிடம் நீ எவ்வளவு கடன்பட்டிருக்கிறாய்?'
6 என்று கேட்க, அவன், 'நூறு குடம் எண்ணெய்' என்
றான். அதற்கு அவன், 'இதோ! உன் கடன் பத்திரம்,
உட்கார்ந்து ஐம்பது என்று உடனே எழுது' என்றான்.
7 பின்னர், மற்றொருவனிடம், 'நீ எவ்வளவு கடன்பட்
டிருக்கிறாய்?' என, அவன், 'நூறு கலம் கோதுமை'
என்றான். அதற்கு அவன், 'இதோ! உன் கடன் பத்தி
ரம் எண்பது என எழுது' என்றான்.

8 ''அந்த அநீத கண்காணிப்பாளன் விவேகத்தோடு
நடந்து கொண்டதற்காகத் தலைவன் அவனை மெச்சிக்
கொண்டான். ஏனெனில், ஒளியின் மக்களைவிட இவ்
வுலகின் மக்கள் தம்போன்றவர்களிடத்தில் மிக்க விவேக
முள்ளவர்களாய் இருக்கின்றனர்.

*9 ''ஆகையால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்:
அநீத செல்வத்தைக்கொண்டு நண்பர்களைச் சம்பாதித்
துக்கொள்ளுங்கள். அது உங்களைக் கைவிடும்பொழுது,
அவர்கள் உங்களை முடிவில்லாக் கூடாரங்களில் ஏற்றுக்
10 கொள்வார்கள். மிகச் சிறிய காரியத்தில் நம்பத்தக்க
வன், பெரியதிலும் நம்பத்தக்கவனே. மிகச் சிறியதில்

---

*'முடிவில்லாக் கூடாரங்கள்'—இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து வெளியேறி, வாக்களித்த நாட்டில் குடிபுகுமுன், தம் மக்களிடையே கடவுள் வாசம் செய்வதை உணர்த்தி நின்ற கடவுளின் 'கூடாரத்தை' தங்களோடு கூடவே இங்குமங்கும் எடுத்துச் சென்றனர். தம் மக்களை இறுதியில் வரவேற்கும் உண்மையான வாக்குத்தத்தப் பூமியாகிய விண்ணுலகுக்கு அக்கூடாரம் ஓர் அடையாளம்போல் இருந்தது. இதனால்தான் விண்ணுலகு முடிவில்லாக் கூடாரம் எனப்படுகிறது.

†11 நீதியற்றவன், பெரியதிலும் நீதியற்றவனே. அநீதசெல்
வத்தின் மட்டில் நீங்கள் நம்பத்தகாதவர்களாய் இருந்
தால் உங்களை நம்பி உண்மைப் பொருளை ஒப்படைப்
12 பவர் யார்? உங்களுக்குப் புறம்பான பொருட்கள் மட்
டில் நீங்கள் நம்பத்தகாதவர்களாய் இருந்தால், உங்க
ளுடையதை உங்களுக்கு அளிப்பவர் யார்?

13 ''எந்த வேலைக்காரனும் இரு தலைவர்களுக்கு ஊழியம்
செய்ய முடியாது. ஏனெனில், ஒருவனை வெறுத்து
மற்றவனிடம் அன்பாயிருப்பான். அல்லது, ஒருவனைச்
சார்ந்துகொண்டு, மற்றவனைப் புறக்கணிப்பான். கட
வுளுக்கும் செல்வத்துக்கும் நீங்கள் ஊழியம் செய்ய
முடியாது.''

14 பொருளாசை மிக்க பரிசேயர் இதெல்லாம் கேட்டு
15 அவரை ஏளனம்செய்தனர். அவர்களுக்கு அவர் கூறிய
தாவது: ''மனிதர்முன் நீதிமான்களாகக் காட்டிக்
கொள்ளுகிறவர்கள் நீங்கள்தான். கடவுளோ, உங்கள்
உள்ளங்களை அறிவார். மனிதர்களுக்கு மேன்மையானது
கடவுளுக்கு அருவருப்பானது.

## மூன்று திருமொழிகள்

16 "திருச்சட்டமும் இறைவாக்கினர்களும் அருளப்பர்
காலம்வரைதான். அதுமுதல் கடவுளின் அரசைப்பற்றிய
நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. அதில் ஒவ்வொருவனும்
பலவந்தமாய் நுழைகிறான்.''

---

† அநீதியாய் நடப்பது நல்லதென இவ்வுவமையில் இயேசு படிப்பிப்பதுபோல் தோன்றலாம். ஆனால் அதல்ல கருத்து. தங்களுக்குள்ள செல்வத்தைக் கொண்டு ஏழைகளைத் தங்களுடைய நண்பர்களாக்கிக் கொள்ளவேண்டும் என்பது மட்டுமே கருத்து. ஏனெனில், விண்ணரசு ஏழைகளுக்கே உரியது (லூக். 6:20; 18:24-27 காண்.) ஏழைகளுடைய சிபாரிசு இருந்தாலன்றி செல்வர்கள் அதில் நுழைய மாட்டார்கள். அதாவது ஏழைகளுக்கு உதவியதால் அவர்கள் செய்த நற்செயல்கள் மட்டுமே இறுதியில் அவர்களுக்குத் துணை நிற்கும் என்றவாறு.

17 “திருச்சட்டத்தின் ஒரே ஒரு புள்ளி விட்டுப்போவ
தினும் விண்ணும் மண்ணும் மறைவது எளிதாகும்.”

18 “தன் மனைவியை விலக்கி விட்டு, வேறு ஒருத்தியை
மணப்பவன் விபசாரம் செய்கிறான். தன் கணவனால் விலக்
கப்பட்டவளை மணப்பவனும் விபசாரம்செய்கிறான்.”

பணக்காரனும் ஏழையும்

19 “பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் விலையுயர்ந்த
ஆடையும், மெல்லிய உடையும் அணிந்து நாள்தோறும்
20 ஆடம்பரமாய் விருந்தாடுவான். அவனுடைய வாச
லருகே இலாசார் என்னும் ஏழை ஒருவன் கிடந்தான்.
21 அவனுடலெல்லாம் ஒரே புண்ணாயிருந்தது. அவன் அப்
பணக்காரனின் பந்தியில் சிந்தினவற்றைக்கொண்டு பசி
யாற்ற விரும்பினான். நாய்கள்கூட வந்து அவனுடைய
22 புண்களை நக்கும். இந்த ஏழை இறந்தான்; வானதூதர்
அவனைத் தூக்கிச் சென்று ஆபிரகாமின் அருகிலேயே
அமர்த்தினர். பணக்காரனும் இறந்தான்; புதைக்கப்
பட்டான்.

23 “அவன் பாதாளத்திலே வேதனைப்படுகையில் ஏறெடுத்
துப்பார்த்தான். தொலைவில் ஆபிரகாமையும், அவர்
அருகிலேயே அமர்ந்திருந்த இலாசாரையும் கண்டான்.
24 ‘தந்தை ஆபிரகாமே, என்மீது இரங்கி, இலாசார் தன்
விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து, என் நாவைக்
குளிரச்செய்யும்படி அவனை அனுப்பும். நான் இந்நெருப்
பில் வேதனைப்படுகிறேன்’ என்று கத்தினான்.

25 “ஆபிரகாம் அவனை நோக்கி, ‘மகனே, வாழ்நாளில்
உனக்கு இன்பசுகமே கிடைத்தது, இலாசாருக்குத் துன்ப
துயரமே கிடைத்தது. இதை நினைத்துப் பார். ஆனால்,
இப்பொழுது அவன் இங்கே ஆறுதலடைகிறான், நீயோ
26 வேதனைப்படுகிறாய். அன்றியும் எங்களுக்கும் உங்களுக்
கும் இடையே பெரும் பாதாளம் ஒன்று அமைந்துள்

ளது. எனவே, இங்கிருந்து உங்களிடம் கடந்துவர ஒரு
வன் விரும்பினாலும் முடியாது; அங்கிருந்து எங்களிடம்
27 தாண்டி வருவதும் கிடையாது' என்றார். அதற்கு அவன்,
'தந்தையே, அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்
28 படி உம்மை வேண்டுகிறேன். எனக்குச் சகோதரர் ஐவர்
இருக்கின்றனர். அவர்களும் இந்த வேதனைக் களத்திற்கு
29 வராதபடி அவன் எச்சரிக்கட்டும்' என்றான். ஆபிர
காமோ, 'அவர்களுக்கு மோயீசனும் இறைவாக்கினர்
களும் இருக்கிறார்கள்- அவர்களுக்குச் செவிசாய்க்கட்
30 டும்' என்றார். அவனோ, 'அப்படியன்று, தந்தை ஆபிர
காமே; இறந்தோரிடமிருந்து யாராவது அவர்களிடம்
31 சென்றால், மனந்திரும்புவர்' என்றான். அதற்கு அவர்,
'மோயீசனுக்கும் இறைவாக்கினர்களுக்கும் செவிசாய்க்
காவிடில் இறந்தோரிடமிருந்து ஒருவன் உயிர்த்தெழுந்
தாலும் நம்பமாட்டார்கள்' என்றார்."

### நான்கு அறிவுரைகள்

**17** மேலும், இயேசு தம் சீடரை நோக்கி, "இடறல்
வராமல் இருக்க முடியாது. ஆனால், யாரால் வருகின்
2 றதோ, அவனுக்கு ஐயோ கேடு! அவன் இச்சிறுவருள்
ஒருவனுக்கு இடறலாயிருப்பதைவிட, அவன் கழுத்தில்
பெரிய எந்திரக் கல்லைக் கட்டிக் கடலில் தள்ளுவது
3 அவனுக்கு நலம். எச்சரிக்கையாயிருங்கள்.
"உன் சகோதரன் குற்றம் செய்தால் அவனைக் கடிந்து
4 கொள். மனம்வருந்தினால் அவனை மன்னித்துவிடு. அவன்
ஒரு நாளில் ஏழுமுறை உனக்கெதிராகக் குற்றம்
செய்து, ஏழுமுறையும் உன்னிடம் திரும்பி வந்து,
'நான் மனம் வருந்துகிறேன்' என்றால் அவனை மன்
னித்துவிடு" என்றார்.

5 பின்பு அப்போஸ்தலர்கள், "எங்களிடம் விசுவாசத்தை
அதிகமாக்கும்" என்று ஆண்டவரைக் கேட்டார்கள்.

6 ஆண்டவரோ, ''கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்
தால், இம்முசுக்கட்டை மரத்தை நோக்கி, 'வேருடன்
பெயர்ந்து கடலில் ஊன்றிக்கொள்' என்பீர்களாகில்
உங்களுக்கு அது கீழ்ப்படியும்.

7 "உழுவதற்கோ மேய்ப்பதற்கோ உங்களிடம் ஓர் ஊழி
யன் இருந்தால், அவன் வயலிலிருந்து திரும்பி வரும்
பொழுது, 'நீ உடனே என்னோடு வந்து சாப்பிடு' என்று
8 உங்களுள் எவனாவது அவனுக்குச் சொல்லுவானா?
மாறாக, 'எனக்குச் சாப்பாடு ஆயத்தம் செய். உன்
இடையை வரிந்து கட்டிக் கொண்டு நான் உண்டு
குடிக்குமளவும் எனக்குப் பணிவிடை செய்; பின்பு
9 நீ உண்டு குடிக்கலாம்' என்று சொல்லமாட்டானா?
தான் கட்டளையிட்டதைச் செய்ததற்காகத் தன் ஊழி
10 யனுக்கு நன்றி சொல்வானா? அப்படியே நீங்களும்
உங்களுக்குக் கட்டளையிட்டதெல்லாம் செய்த பின்,
'நாங்கள் பயனற்ற ஊழியர்கள்; செய்யவேண்டியதைத்
தான் செய்தோம்' எனச் சொல்லுங்கள்'' என்றார்.

பத்துத் தொழுநோயாளிகள்

11 அவர் யெருசலேமுக்குப் போகையில், சமாரியா, கலி
12 லேயா நாடுகள் வழியாகச் சென்றார். ஓர் ஊருக்குள்
வரும்பொழுது, தொழுநோயாளிகள் பத்துப்பேர் அவ
13 ருக்கு எதிரே வந்தனர். தொலைவில் நின்றுகொண்டே,
"குருவே, இயேசுவே, எங்கள்மேல் இரக்கமாயிரும்''
14 என்று உரக்கக் கூவினர். அவர்களைக் கண்டதும், ''நீங்
கள் போய்க் குருக்களிடம் உங்களைக் காட்டுங்கள்''
15 என்றார். அவ்வாறே செல்லும்போது அவர்கள் குண
மடைந்தனர். அவர்களுள் ஒருவன் தான் குணமடைந்
ததைக் கண்டு உரத்த குரலில் கடவுளை மகிமைப்படுத்
*16 திக் கொண்டு திரும்பி வந்து, அவருடைய காலில் முகங்
குப்புற விழுந்து நன்றி செலுத்தினான். இவனோ சமாரி

17 யன். இயேசு அவனைப் பார்த்து, பத்துப்பேரும் குண
மடையவில்லையா? மற்ற ஒன்பதுபேர் எங்கே? திரும்பி
18 வந்து கடவுளை மகிமைப்படுத்த இந்த அந்நியனைத் தவிர
19 வேறு ஒருவரையும் காணோமே'' என்றார். மேலும்,
எழுந்து போ, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்
கிற்று'' என்று அவனிடம் கூறினார்.

கடவுளுடைய அரசின் வருகை

20 ''கடவுளின் அரசு எப்பொழுது வரும்?'' என்று பரி
‡21 சேயர் வினவ, அவர் மறுமொழியாக, ''கடவுளின்
அரசு கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது.
இதோ இங்கே, அதோ அங்கே என்று சொல்வதற்
கில்லை. ஏனெனில், கடவுளின் அரசு இதோ! உங்க
ளிடையே உள்ளது' என்றார்.

22 மேலும் சீடர்களிடம் சொன்னதாவது: 'காலம் வரும்.
மனுமகனுடைய நாட்களில் ஒன்றையாவது காண
வேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்கள். ஆனால் காண
23 மாட்டீர்கள். உங்களிடம், இதோ இங்கே, அதோ
அங்கே' என்பார்கள். நீங்களோ போகவேண்டாம்;
24 அவர்கள்பின் ஓடவேண்டாம். மின்னல் வானத்தின் ஒரு
முனையில் மின்னி எதிர் முனைக்குப் பாய்வதுபோலவே,
25 மனுமகனும் தாம்வரும் நாளிலே தோன்றுவார். ஆனால்
முதலில் அவர் மிகவும் பாடுபட்டு இந்தத் தலைமுறை
26 யால் புறக்கணிக்கப்பட வேண்டும். நோவாவின் காலத்
தில் நடந்ததுபோலவே மனுமகன் வரும் காலத்திலும்
நடக்கும், நோவா பெட்டகத்தில் நுழைந்த நாள்வரை
மக்கள் உண்டு குடித்தும், பெண் கொண்டுகொடுத்தும்
வந்தனர். பெருவெள்ளம் வந்து அனைவரையும் அழித்

* 9 : 53; 10 : 29-37 காண்க

‡ லூக். 11 : 20;

28 தது அவ்வாறே, லோத்தின் காலத்திலும் நடந்தது:
உண்டு குடித்தனர்: விற்று வாங்கினர்; நட்டனர், கட்டி
29 னர். லோத்து சோதோமை விட்டுச் சென்ற நாளில்,
வானிலிருந்து தீயும் கந்தகமும் பெய்து எல்லாரையும்
30 அழித்தது. மனுமகன் வெளிப்படும் நாளிலும் அவ்
வாறே இருக்கும்.

31 ''அந்நாளில் கூரைமேல் இருப்பவன், வீட்டிலுள்ள
தன் பொருட்களை எடுப்பதற்கு இறங்கவேண்டாம்.
32 அப்படியே வயலில் இருப்பவன் திரும்பி வரவேண்டாம்.
33 லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள். தன்
உயிரைப் பாதுகாக்கத் தேடுகிறவன் அதை இழந்து
விடுவான். இழப்பவனே அதைக் காத்துக்கொள்வான்.
34 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: அந்த இரவில்
ஓரே படுக்கையில் இருவர் இருப்பர், ஒருவன் எடுக்கப்
35 படுவான்; மற்றவன் விடப்படுவான். இரு பெண்கள்
சேர்ந்து மாவரைப்பர். ஒருத்தி எடுக்கப்படுவாள்; மற்ற
37 வள் விடப்படுவாள்.'' அதற்கு அவர்கள், ''எங்கே
38 ஆண்டவரே?'' என்றார்கள். அவரோ, ''பிணம் எங்
கேயோ அங்கேயே கழுகுகள் கூடும்'' என்றார்.

### பொல்லாத நடுவனும் கைம்பெண்ணும்

**18** மனந்தளராமல் எப்பொழுதும் செபிக்க வேண்டுமென்
2 பதற்கு அவர் ஓர் உவமை சொன்னார்: ''ஒரு நகரில்
நடுவன் ஒருவன் இருந்தான். அவன் கடவுளுக்கும் அஞ்சு
3 வதில்லை, மனிதனையும் மதிப்பதில்லை. அந்நகரில் இருந்த
கைம்பெண் ஒருத்தி, 'என் எதிராளியைக் கண்டித்து
எனக்கு நீதி வழங்கும்' என்று அவனிடம் கேட்டுக்

---

36 ''வயலில் இருவர் இருப்பர். ஒருவன் எடுக்கப்படுவான்; மற்ற
வன் விடப்படுவான்''—என்னும் வாக்கியம் சில பிரதிகளில் காணப்
படுகிறது.

4 கொண்டே வந்தாள். அவனுக்கோ வெகுகாலம் வரை
மனம் வரவில்லை. பின்னர் அவன், 'நான் கடவுளுக்கு
5 அஞ்சுவதுமில்லை, மனிதனை மதிப்பதுமில்லை; என்றாலும்
இக்கைம்பெண் என்னைத் தொந்தரை செய்வதால் நான்
அவளுக்கு நீதி வழங்குவேன். இல்லாவிட்டால், எப்
போதும் என் உயிரை வாங்கிக்கொண்டே இருப்பாள்'
என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்."
6 அதன் பின் ஆண்டவர், "அந்த நீதியற்ற நடுவன்
7 சொன்னதைப் பாருங்கள். தாம் தேர்ந்துகொண்டவர்
கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூப்பிடும்
பொழுது கடவுள் நீதி வழங்காமல் இருப்பாரோ? அவர்
8 களுக்குத் துணை செய்யக் காலம் தாழ்த்துவாரோ? விரை
விலேயே அவர்களுக்கு நீதி வழங்குவார் என உங்களுக்
குச் சொல்லுகிறேன். ஆயினும் மனுமகன் வரும்
பொழுது மண்ணுலகில் விசுவாசத்தைக் காண்பாரோ?"
என்றார்.

### பரிசேயனும் ஆயக்காரனும்

9 தம்மை நீதிமான்களென நம்பிப் பிறரை புறக்கணிக்
கும் சிலரை நோக்கி, அவர் இந்த உவமையைச் சொன்
10 னார்: "இருவர் செபம் செய்யக் கோயிலுக்குச் சென்ற
11 னர். ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரி
சேயன் நின்றுகொண்டு, 'கடவுளே, கள்வர் அநீதர் விப
சாரர் முதலான மற்ற மனிதரைப்போலவோ, இந்த
ஆயக்காரனைப்போலவோ நான் இராததுபற்றி உமக்கு
12 நன்றி செலுத்துகிறேன். வாரத்திற்கு இருமுறை நோன்
பிருக்கிறேன். என் வருவாயிலெல்லாம் பத்திலொரு
13 பகுதி கொடுக்கிறேன்' என்று தனக்குள்ளே செபித்தான்.
ஆயக்காரனோ தொலைவில் நின்று வானத்தை ஏறெடுத்
துப் பார்க்கவும் துணியாமல், 'கடவுளே, பாவி என்
மேல் இரக்கமாயிரும்' என்றுசொல்லி மார்பில் அறைந்து
14 கொண்டான். இறைவனுக்கு ஏற்புடையவனாகி வீடு
திரும்பியவன் இவனே, அவனல்லன் என்று நான் உங்க

ளுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், தன்னை உயர்த்து
கிற எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்து
கிறவன் உயர்த்தப்பெறுவான்.''

## இயேசுவும் குழந்தைகளும்

*15 கைக் குழந்தைகளை அவர் தொடவேண்டுமென்று அவர்
களையும் அவரிடம் கொண்டுவந்தனர். இதைக் கண்ட
16 அவருடைய சீடர், அவர்களை அதட்டினர். இயேசுவோ
அவர்களை அழைத்து, ''குழந்தைகளை என்னிடம் வர
விடுங்கள்; தடுக்க வேண்டாம். ஏனெனில், கடவுளின்
17 அரசு இத்தகையோரதே. உறுதியாக உங்களுக்குச்
சொல்லுகிறேன்: கடவுளின் அரசைக் குழந்தைபோல
ஏற்றுக்கொள்ளாத எவனும் அதனுள் நுழையவே முடி
யாது'' என்றார்.

## பணக்காரத் தலைவன்

18 தலைவன் ஒருவன், ''நற்போதகரே, என்ன செய்தால்
எனக்கு முடிவில்லா வாழ்வு கிடைக்கும்?'' எனக் கேட்
19 டான். அதற்கு இயேசு, 'என்னை நல்லவர்என்பானேன்?
20 கடவுள் ஒருவரன்றி நல்லவர் எவருமில்லை. கட்டளைகள்
உனக்குத் தெரியுமே: விபசாரம் செய்யாதே, கொலை
செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சான்று சொல்
21 லாதே, தாய் தந்தையரைப் போற்று'' என்றார். அதற்கு
அவன், ''என் சிறுவமுதல் இவையெல்லாம் கடைப்
பிடித்து வருகிறேன்'' என்றான். இதைக் கேட்டு இயேசு,
22 ''இன்னும் ஒன்று உனக்குக் குறைவாயிருக்கிறது. உனக்கு
உள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடு.
வானகத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும். பின்பு
வந்து என்னைப் பின்செல்'' என்றார். அவன் அதைக்
23 கேட்டு வருத்தப்பட்டான். ஏனெனில், அவன் பெரிய
பணக்காரன்.

---

*லூக். 9:46—48 காண்.

### செல்வத்தால் ஆபத்து

24 இயேசு அவனைப் பார்த்து, "கடவுளின் அரசில் செல்வ
25 முடையவர் நுழைவது எவ்வளவோ அரிது. ஏனெனில்,
பணக்காரன் கடவுளின் அரசில் நுழைவதைவிட, ஊசிக்
காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்றார்.
26 அதைக் கேட்டவர்கள், "பின் யார்தான் மீட்புப் பெற
27 முடியும்?" என, அவர், "மனிதரால் கூடாதது கடவு
ளால் கூடும்" என்றார்.
28 அப்போது இராயப்பர், "இதோ! எங்கள் உடைமை
களை விட்டுவிட்டு நாங்கள் உம்மைப் பின்சென்றோமே"
*29 என்று சொல்ல, அவர் அவர்களை நோக்கி, "தன்
வீட்டையோ, மனைவியையோ, சகோதரரையோ, பெற்
றோரையோ, மக்களையோ, கடவுளின் அரசின்பொருட்டு
30 துறந்துவிடும் எவனும் இம்மையில் அதைவிட மிகுதியும்,
மறுமையில் முடிவில்லா வாழ்வும் பெறாமல் போகான்
என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

### பாடுகளின் மூன்றும் முன்னறிவிப்பு

31 இயேசு பன்னிருவரையும் அழைத்து அவர்களிடம்,
"இதோ! யெருசலேமுக்குப் போகிறோம். மனுமகனைக்
குறித்து இறைவாக்கினர்கள் எழுதியதெல்லாம் நிறை
32 வேறும். புற இனத்தாரிடம் கையளிக்கப்பட்டு, ஏளனத்
திற்கும் அவமானத்திற்கும் உள்ளாகித் துப்பப்படுவார்.
33 அவர்கள் அவரைச் சாட்டையால் அடித்தபின் கொல்லு
வார்கள். அவரோ மூன்றாம் நாள் உயிர்த்தெழுவார்"
34 என்றார். இவற்றில் எதுவும் அவர்களுக்கு விளங்க
வில்லை. அவர் சொன்னதின் பொருள் அவர்களுக்கு
மறைவாயிருந்தது. அவர் கூறியதை அவர்கள் அறிந்து
கொள்ளவில்லை.

---

* லூக். 14 : 26.

## குருடன் பார்வையடைத்தது

35 அவர் யெரிக்கோவை நெருங்கியபொழுது, குருடன்
ஒருவன் வழியோரத்தில் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்
36 கொண்டிருந்தான். திரளான மக்கள் நடந்து செல்வ
37 தைக் கேட்டு 'அது என்ன'வென்று வினவினன். நாச
ரேத்தூர் இயேசு அவ்வழியே செல்வதாக அவனுக்கு
38 அறிவித்தனர். அவன், "இயேசுவே, தாவீதின் மகனே,
39 என்மீது இரக்கம் வையும்" என்று கத்தினன். முன்னே
சென்றவர்கள் பேசாதிருக்கும்படி அவனை அதட்டினர்,
அவனோ, "தாவீதின் மகனே, என்மீது இரக்கம்வையும்"
40 என்று இன்னும் அதிகமாய்க் கூவினன். இயேசு நின்று,
அவனைத் தம்மிடம் கூட்டிக்கொண்டு வரும்படி கட்டளை
யிட்டார். அவன் நெருங்கிவந்ததும், "உனக்கு நான்
41 என்னசெய்யவேண்டும்?" என்று அவனைக் கேட்க, அவன்,
"ஆண்டவரே, நான் பார்வை பெறவேண்டும்" என்
42 ருன். இயேசு அவனை நோக்கி, "பார்வை பெறுக; உன்
விசுவாசம் உன்னைக் குணமாக்கியது" என்றார். அவன்
43 உடனே பார்வை பெற்றுக் கடவுளை மகிமைப்படுத்திக்
கொண்டே அவரைப் பின்தொடர்ந்தான். மக்கள்
அனைவரும் இதைக் கண்டு கடவுளைப் புகழ்ந்தேத்தினர்.

## சக்கேயு

**19** அவர் யெரிக்கோவுக்கு வந்து அதனூடே போய்க்
2 கொண்டிருந்தார். அங்கே சக்கேயு என்னும் ஒருவன்
இருந்தான். அவன் தலைமை ஆயக்காரன். பெரிய பணக்
3 காரன். இயேசு யாரென்று பார்க்க வழிதேடினன்.
கூட்டமாயிருந்ததாலும், அவன் குள்ளனுயிருந்ததாலும்
4 அவரைப் பார்க்க முடியவில்லை அவரைக் காணும்
பொருட்டு முன்னே ஓடி ஒரு காட்டு அத்திமரத்தில்
ஏறிக்கொண்டான். ஏனெனில், அவர் அவ்வழியே வர
5 விருந்தார். இயேசு அந்த இடத்திற்கு வந்தபோது
ஏறெடுத்து அவனை நோக்கி, "சக்கேயுவே, விரைவாய்
இறங்கி வா. இன்று உன் வீட்டில் நான் தங்கவேண்டும்"
6 என்றார். அவன் விரைவாய் இறங்கி மகிழ்ச்சியுடன்

7 அவரை வரவேற்றான். இதைக்கண்ட அனைவரும், "பாவி
யோடு தங்குவதற்குப் போயிருக்கிறாரே" என்று முணு
8 முணுத்தனர். ஆனால் சக்கேயு எழுந்து, "ஆண்டவரே,
இதோ! என் உடைமையில் பாதியை ஏழைகளுக்குக்
கொடுக்கிறேன். எவனையாவது ஏமாற்றி எதையாவது
கவர்ந்திருந்தால், நான்கு மடங்காகத் திருப்பிக்
9 கொடுத்துவிடுகிறேன்" என்று ஆண்டவரிடம் சொன்
னான். அதற்கு இயேசு, "இன்று இவ்வீட்டிற்கு மீட்பு
*10 உண்டாயிற்று. இவனும் ஆபிரகாமின் மகன்தானே.
இழந்துபோனதைத் தேடி மீட்கவே மனுமகன் வந்துள்
ளார்" என்றார்.

### பொற்காசுகளின் உவமை

11 மக்கள் இதைக் கேட்டுக்கொண்டிருக்கையில் அவர்
யெருசலேமுக்கு அருகில் இருந்ததாலும், கடவுளின் அரசு
உடனே வெளிப்படும் என்று அவர்கள் எண்ணியதாலும்,
12 அவர் தொடர்ந்து ஓர் உவமை சொன்னார்: "பெருங்
குடி மகன் ஒருவன் அரச பதவி பெற்றுவரத் தொலை
13 நாட்டிற்குப் புறப்பட்டான். தன் ஊழியர் பத்துப்பேரை
அழைத்து, பத்துப் பொற்காசுகளை அவர்களுக்குக்
கொடுத்து, 'நான் வரும்வரை வாணிபம் செய்யுங்கள்'
14 என்றான். அவனுடைய குடிமக்களோ அவனை வெறுத்
தனர். ஆகையால், 'இவனை எங்கள் அரசனாக ஏற்றுக்
கொள்ள மாட்டோம்' என்று சொல்லும்படி அவனுக்குப்
பின் தூது விடுத்தனர்.
15 "அரசப் பதவிபெற்றுத் திரும்பி வந்தபின், பணம்

---

* ஆபிரகாமின் மகன்—அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுள் ஒருவன். சக்கேயு ஒரு யூதன். ஆனால் பாவிகளையும் ஆயக்காரரையும் பரிசேயர் சபிக்கப்பட்டவர்கள் எனக் கருதினர். யூதர்களாயிருந்தாலும் தங்களால் பாவிகள் என எண்ணப்பட்டவர்களை இங்ஙனமே கருதினர். ஆபிரகாமுக்குக் கடவுள் ஆதியில் அளித்திருந்த வாக்குறுதிகளுக்கு அவர்களைத் தகுதியற்றவர்களாக்கினார்கள். ஆனால் இயேசு பாவிகளுக்கும் வானரசைத் திறந்துவிடுகிறார் (லூக். 15 காண்).

வாங்கிய ஒவ்வொருவனும் சம்பாதித்தது எவ்வளவு
என்று அறிய அவ்வூழியரைத் தன்னிடம் அழைத்துவரச்
16 சொன்னான். முதல் ஊழியன் வந்து, 'அரசே, உமது
பொற்காசு பத்துப் பொற்காசுகளைச் சம்பாதித்துள்ளது'
17 என்றான். அவனோ, 'நன்று, நன்று, நல்ல ஊழியனே,
மிகச் சிறியதில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்ததால்,
18 பத்து நகர்களுக்கு அதிகாரியாய் இரு' என்றான். வேறொரு
வன் வந்து, 'அரசே, உமது பொற்காசு ஐந்து பொற்
19 காசுகளை ஆக்கியுள்ளது' என்றான். அவனிடமும் அரசன்
'நீ ஐந்து நகர்களுக்குத் தலைவனாய் இரு' என்றான்.

20 "இன்னொருவன் வந்து, 'அரசே, இதோ! உமது பொற்
காசு. உமக்கு அஞ்சி இதை ஒரு கைக்குட்டையில் முடிந்து
21 வைத்திருந்தேன். ஏனெனில், நீர் கண்டிப்புள்ளவர்;
வைக்காததை எடுப்பவர், விதைக்காததை அறுப்பவர்'
22 என்றான். அரசன் அவனைப் பார்த்து, 'கெட்ட ஊழி
யனே, உன் வாய்ச் சொல்லைக்கொண்டே உனக்குத்
தீர்ப்பிடுகிறேன். நான் கண்டிப்புள்ளவன், வைக்காத
தை எடுப்பவன், விதைக்காததை அறுப்பவன் என்பதை
23 அறிந்தும், நீ ஏன் என் பணத்தை வட்டிக்காரரிடம்
கொடுத்து வைக்கவில்லை? நான் வந்து வட்டியோடு திரும்
24 பப் பெற்றிருப்பேனே' என்றான். பின், சூழ நின்றவர்
களை நோக்கி, 'இவனிடமிருந்து பொற்காசைப் பிடுங்கி,
பத்துப் பொற்காசுகள் உடையவனுக்குக் கொடுங்கள்'
25 என்றான். அதற்கு அவர்கள், 'அரசே, அவனிடம் பத்துப்
பொற்காசுகள் உள்ளனவே' என்றார்கள். அரசனோ, உள்
26 ளவன் எவனுக்கும் கொடுக்கப்படும், இல்லாதவனிட
மிருந்து உள்ளதும் எடுக்கப்படும்' என்று உங்களுக்குச்
சொல்லுகிறேன்.

27 'அன்றியும் என்னைத் தங்கள் அரசனாக ஏற்க விரும்பாத
என் பகைவர்களை இங்கு கொண்டுவந்து, என்முன்
வெட்டி வீழ்த்துங்கள்' என்றான்."

## 5. யெருசலேமில் இயேசு

குருத்து ஞாயிறு

28 இதெல்லாம் சொன்ன பின்பு, அவர் யெருசலேமை
29 நோக்கி அவர்களுக்கு முன்னால் நடந்துபோனார். அவர்
ஒலிவத் தோப்பு மலைக்கு அருகில் இருந்த பெத்பகே,
பெத்தானியா என்ற ஊர்களை அடுத்து வந்தபோது,
30 சீடருள் இருவரை அழைத்து, ''எதிரே இருக்கும் ஊருக்
குப் போங்கள். அதில் நுழையும்போது இதுவரை யாரும்
ஏறாத கழுதைக் குட்டி ஒன்று கட்டியிருக்கக் காண்பீர்
31 கள். அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள். 'ஏன்
அவிழ்க்கிறீர்கள்' என்று யாராவது உங்களைக் கேட்டால்,
32 அவனிடம், 'இது ஆண்டவருக்குத் தேவை' என்று கூறுங்
கள்'' எனச் சொல்லி அனுப்பினார். அனுப்பப்பட்டவர்
கள் சென்று, அவர் சொன்னபடியே கண்டனர். அவர்
33 கள் கழுதைக் குட்டியை அவிழ்த்தபொழுது அதற்கு
உரியவர்கள், ''கழுதைக் குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்
34 கள்?'' என்று அவர்களைக் கேட்க, ''இது ஆண்டவருக்குத்
தேவை'' என்றனர்.

35 அக்குட்டியை இயேசுவிடம் கொண்டுவந்து, தங்கள்
போர்வைகளை அதன்மேல் போட்டு, இயேசுவை ஏறச்
36 செய்தனர். அவர் செல்லும்போது வழியில் தங்கள்
37 போர்வைகளை விரித்தனர். அவர் ஒலிவ மலைச்சாரலை
நெருங்கியதும், சீடர் கூட்டமெல்லாம் தாங்கள் கண்ட
புதுமைகள் அனைத்தையும்பற்றி மகிழ்ச்சியோடு உரத்த
குரலில்,

*38 'ஆண்டவர் பெயரால்
அரசராக வருகிறவர் வாழி!
வானகத்தில் அமைதியும்
உன்னதங்களில் மகிமையும் உண்டாகுக'

என்று கடவுளைப் புகழத் தொடங்கியது.

---

* சங். 117:26 காண்.

39 கூட்டத்திலிருந்த பரிசேயர் சிலர் அவரை நோக்கி,
“போதகரே, உம்முடைய சீடர்களைக் கண்டியும்” என்ற
40 னர். அவர் மறுமொழியாக,“இவர்கள் பேசாதிருந்தால்,
கற்களே கூவும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்”
41 என்றார். அவர் நகரை நெருங்கியபோது அதைப்பார்த்து,
42 அதற்காகக் கண்ணீர்விட்டுப் புலம்பியதாவது: “சமா
தானத்திற்கான வழியை நீயும் இந்நாளில் அறிந்திருக்க
லாகாதா? இப்பொழுதோ,அது உன் கண்ணுக்கு மறைந்
43 துள்ளது. ஒருநாள் வரும், அன்று உன்பகைவர் உன்னைச்
சுற்றிலும் அரண் எழுப்பி உன்னைச் சூழ்ந்துகொண்டு எப்
‡44 பக்கத்திலிருந்தும் நெருக்கி, உன்னையும் உன்னிடமுள்ள
உன் மக்களையும் நொறுக்கித் தரைமட்டமாக்கி, உன்
னிடம் கல்லின்மேல் கல் இராதபடி செய்வார்கள்.
ஏனெனில், கடவுள் உன்னைத் தேடிவந்த காலத்தை
நீ அறியவில்லை.

**வியாபாரிகளை விரட்டுதல்**

45 பின்பு அவர் கோவிலுக்குள் சென்று, அங்கே விற்பவர்
46 களைத் துரத்தத் தொடங்கி. அவர்களை நோக்கி, “ ‘என்
வீடு செபவீடாகும்’என்று எழுதியிருக்கிறது. நீங்களோ
47 அதைக் கள்வர் குகையாக்கிவிட்டீர்கள்”என்றார். அவர்
நாடோறும் கோயிலில் போதித்து வந்தார். தலைமைக்
குருக்களும், மறைநூல் அறிஞரும், மக்களுள் பெரி
யோர்களும் அவரைத் தொலைக்கப்பார்த்தனர். ஆனால்
எப்படித் தொலைப்பதென்று அவர்களுக்குத் தெரிய
வில்லை. ஏனெனில், மக்கள் எல்லாரும் அவர் சொல்
வதைக் கேட்டு அவர்வசப்பட்டிருந்தனர்.

---

‡ தம் திருமகனின் வழியாகக் கடவுள் யெருசலேமைத்தேடி வந்தார். இறைவாக்கினர் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றி இஸ்ராயேலுக்கு இறை அருள் அளிக்கவே அவர் இங்ஙனம் தேடி வந்தார் (லூக். 1:68; 7:16 காண்).

## இயேசுவின் அதிகாரம்

20 ஒருநாள் அவர் கோயிலில் மக்களுக்குப் போதித்து
நற்செய்தியை அறிவிக்கும்போது, தலைமைக் குருக்
களும், மறைநூல் அறிஞரும் மூப்பர்களோடு அங்கு
2 வர நேர்ந்தது. ''எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்
கிறீர்? அல்லது உமக்கு இந்த அதிகாரம் கொடுத்தது
3 யார் என்று எங்களுக்குச் சொல்லும்'' என அவரைக்
கேட்டனர். அதற்கு இயேசு, ''நானும் உங்களை ஒரு
4 கேள்வி கேட்கிறேன், பதில் சொல்லுங்கள். அருளப்ப
ருடைய ஞானஸ்நானம் வானகத்திலிருந்து வந்ததா?
5 மனிதரிடமிருந்து வந்ததா?' என்று கேட்டார். அவர்
கள் தங்களுக்குள் பேசிக்கொண்டதாவது: வானகத்தி
லிருந்து வந்தது என்போமாயின், ஏன் நீங்கள் அவரை
6 நம்பவில்லை என்று கேட்பார். மனிதரிடமிருந்து வந்தது
என்போமாயின் மக்கள் அனைவரும் நம்மைக் கல்லால்
எறிந்து கொல்வர். ஏனெனில், அருளப்பரை இறை
7 வாக்கினர் என்று நம்பியிருக்கின்றனர்.'' எனவே அவ
ருக்கு மறுமொழியாக, ''எங்கிருந்து வந்ததெனத் தெரி
8 யாது'' என்றார்கள். அதற்கு இயேசு, ''நானும் எந்த
அதிகாரத்தால் இப்படிச் செய்கிறேன் என உங்களுக்குச்
சொல்லேன்'' என்றார்.

## கொடிய குத்தகைக்காரர்கள்

*9 பின்னும் அவர் இவ்வுவமையை மக்களுக்குச் சொல்
லத் தொடங்கினார்: ''ஒருவன் ஒரு திராட்சைத்
தோட்டம் வைத்து, குடியானவர்களுக்குக் குத்தகைக்கு
விட்டு விட்டு நீண்டகாலம் வெளியூர் சென்றிருந்தான்.
10 ''பருவ காலத்தில் தோட்டத்துப் பலனைக் குடியான

---

* பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் குலம் பல முறை திராட்சைத் தோட்டத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

வர்கள் தனக்குக் கொடுக்கும்படி ஊழியன் ஒருவனை
அனுப்பினான். குடியானவரோ அவனை அடித்து வெறுங்
11 கையாய் அனுப்பிவிட்டனர் மீண்டும் ஓர் ஊழியனை
அனுப்பினான். அவனையும் அவர்கள் அடித்து, இழிவு
12 படுத்தி வெறுங்கையாய் அனுப்பினர். மூன்றும் முறை
யாக ஒருவனை அனுப்பினான். அவனையும் அவர்கள்
13 காயப்படுத்தி வெளியே தள்ளினர். திராட்சைத் தோட்
டத்துக்குரியவன், 'இனி என்ன செய்வது? என் அன்
14 பார்ந்த மகனை அனுப்புவேன். அவனையாவது அவர்கள்
மதிக்கக்கூடும்' என்றான். குடியானவர்கள் அவனைக்
கண்டதும், இவனே சொத்துக்குரியவன். சொத்து
நம்முடையதாகும்படி இவனைக் கொன்றுபோடுவோம்'
15 என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டு அவனைத்
திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே தள்ளிக்
கொன்றனர்.

"அப்படியானால், தோட்டத்துக்குரியவன் அவர்களை
16 என்ன செய்வான்? அவன் வந்து, அக்குடியானவர்களை
ஒழித்து, தோட்டத்தை வேறு ஆட்களுக்கு விடுவான்."
இதைக் கேட்ட அவர்கள், "ஐயோ, வேண்டாமே'
என்றனர்.

*17 அவர் அவர்களை நோக்கி,
"'கட்டுவோர் விலக்கிய கல்லே
மூலைக் கல்லாய் அமைந்தது'
18 என்று எழுதியிருக்கிறதே, அதன் பொருள் என்ன? அக்
கல்லின்மேல் விழுபவன் எவனும் நொறுங்கிப்போவான்.
எவன்மேல் அது விழுமோ அவன் தவிடு பொடியா
வான்" என்றார்.

19 தங்களைக் குறித்தே இவ்வுவமையை அவர் கூறினார்
என்று உணர்ந்து, தலைமைக் குருக்களும், மறை நூல்
அறிஞரும் அப்போதே அவரைப் பிடிக்க வழி தேடினர்.
ஆனால் பொதுமக்களுக்கு அஞ்சினர்.

### செசாருக்கு வரி

20 ஆகையால் அவர்கள் சமயம் பார்த்து வேவுக்காரர்களை
அனுப்பினர். இவர்கள் ஆளுநனின் ஆட்சி அதிகாரத்
திற்கு அவரைக் கையளிக்கும்படி, நேர்மையானவர்
களைப்போல நடித்து, அவருடைய பேச்சில் குற்றம்
21 கண்டுபிடிக்கப் பார்த்தனர். "போதகரே, நீர் சொல்வ
தும் போதிப்பதும் சரியே; முகத்தாட்சணியம் பாரா
மல் கடவுளின் வழியை உண்மைக்கேற்பப் போதிக்
22 கின்றீர் என்று எங்களுக்குத் தெரியும். செசாருக்கு
நாங்கள் வரி கொடுப்பது முறையா? இல்லையா?"
23 என்று அவரைக் கேட்டனர். அவர் அவர்களுடைய
24 சூழ்ச்சியைக் கண்டுகொண்டு, ஒரு வெள்ளிக்காசை
எனக்குக் காட்டுங்கள். இதிலுள்ள உருவமும் எழுத்தும்
யாருடையவை?" என்றார். "செசாருடையவை" என்
25 றனர். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி "அப்படி
யானால், செசாருடையதைச் செசாருக்கும், கடவுளுடை
யதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்" என்று சொன்
26 னார். மக்கள் முன்னிலையில் அவருடைய பேச்சில் குற்றம்
கண்டுபிடிக்க முடியாமல், அவருடைய மறுமொழியைக்
கண்டு வியந்தனர்.

### உயிர்த்தெழுதல் உண்டா?

27 பின்னர், உயிர்த்தெழுதல் இல்லை என்று கூறும் சதுசே
28 யருள் சிலர் அவரை அணுகி, "போதகரே, 'மனைவி
யுள்ள ஒருவன் பிள்ளையின்றி இறந்துவிடுவானாயின்,
அவனுடைய சகோதரன் அவளை மணந்து தன் சகோ
தரனுக்கு மகப்பேறு அளிக்கட்டும்' என்று மோயீசன்
எழுதி வைத்துள்ளார். இவ்வாறிருக்க, சகோதரர் எழு
29 வர் இருந்தனர். மூத்தவன் ஒருத்தியை மணந்து மகப்
30 பேறின்றி இறந்தான். இரண்டாம், மூன்றும் சகோதர
31 ரும் அவளை மணந்தனர். இவ்வாறே எழுவரும் பிள்ளை

32 யின்றி இறந்தனர். இறுதியாக அப்பெண்ணும் இறந்
33 தாள். உயிர்த்தெழும்போது அவள் யாருக்கு மனைவி
யாக இருப்பாள்? எழுவரும் அவளை மனைவியாகக்
கொண்டிருந்தனரே'' என்றனர்.

34 இயேசு அவர்களிடம், ''இவ்வுலகின் மக்கள் பெண்
35 கொண்டும் கொடுத்தும் வருகின்றனர். மறு உலகையும்
இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுதலையும் அடைவதற்
குத் தகுதியுள்ளவராக எண்ணப்படுவோர் அங்கே பெண்
36 கொள்வதுமில்லை, கொடுப்பதுமில்லை ஏனெனில், இனி
அவர்கள் இறக்கமாட்டார்கள். வான தூதருக்கு ஒப்பா
யிருப்பார்கள். மேலும் உயிர்த்த மக்களாயிருப்பதால்
37 கடவுளின் மக்களாயும் இருப்பார்கள். இறந்தோர்
உயிர்த்தெழுவர் என்பதை மோயீசன் முட்செடியைப்
பற்றிய பகுதியில் வெளிப்படுத்தினார். அதில் ஆண்ட
வரை 'ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள்,
38 யாக்கோபின் கடவுள்' என்று குறிப்பிட்டார். அப்படி
யெனில், அவர் வாழ்வோரின் கடவுளேயன்றி இறந்
தோரின் கடவுள் அல்லர். ஏனெனில், அவருக்கு எல்
லாரும் உயிர் உள்ளவர்களே'' என்றார்.

39 அதற்கு மறைநூல் அறிஞர் சிலர், ''போதகரே,
40 நன்றாய்ச் சொன்னீர்'' என்றனர், இதற்குப் பின்னர்
அவரை எதுவும் கேட்க அவர்கள் துணியவில்லை

### மெசியா தாவீதின் மகனும் ஆண்டவரும்

41† மேலும் அவர் அவர்களிடம், ''மெசியாவைத் தாவீதின்
42,43 மகன்' என்று எப்படிக் கூறலாம்? ஏனெனில்,

''ஆண்டவர் என் ஆண்டவரிடம் சொன்னது:
'நான் உம் பகைவரை உமக்குக் கால்மணையாக்கும் வரை

---

† சங். 109:1

நீர் என் வலப் பக்கத்தில் அமரும்' ''
எனத் தாவீதே சங்கீத ஆகமத்தில் சொல்லுகிறார்.
44 ஆகவே, தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லி
யிருக்கத் தாவீதுக்கு அவர் மகனாய் மட்டும் இருப்பது
எப்படி?'' என்று அவர்களை வினவினார்.

### மறைநூல் அறிஞரின் வெளிவேடம்

45 மக்கள் எல்லாரும் கேட்டுக்கொண்டிருக்க அவர் தம்
46 சீடரிடம், ''மறைநூல் அறிஞர்மட்டில் எச்சரிக்கையா
யிருங்கள். அவர்கள் நீண்ட அங்கி தரித்து நடமாட
விரும்புகிறார்கள். பொது இடங்களில் வணக்கத்தையும்,
செபக் கூடங்களில் முதல் இருக்கைகளையும், விருந்து
47 களில் முதல் இடங்களையும் பெற ஆசிக்கிறார்கள். கைம்
பெண்களின் உடைமைகளை விழுங்குகிறார்கள். பார்
வைக்கோ நீண்ட செபம் செய்கிறார்கள். இவர்கள்
அதிக தண்டனைக்கு ஆளாவார்கள்'' என்றார்.

### விதவையின் எளிய காணிக்கை

21 அவர் ஏறெடுத்துப் பார்க்கையில் பணக்காரர் தம்
காணிக்கைகளை உண்டியலில் போடுவதைக் கண்டார்.
2 வறுமைமிக்க கைம்பெண் ஒருத்தியும் இரண்டு செப்புக்
3 காசுகளைப் போடுவதைக் கண்டு, ''இந்த ஏழைக் கைம்
பெண் மற்றெல்லாரையும்விட அதிகம் போட்டாள்
என்று உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
4 ஏனெனில், அவர்கள் அனைவரும் தங்களிடம் மிகுதியா
யிருந்த பணத்திலிருந்து கடவுளுக்குக் காணிக்கை
போட்டனர். இவளோ, தன் வறுமையிலும் தன் பிழைப்
புக்கானது முழுவதையுமே போட்டுவிட்டாள்'' என்றார்.

## யெருசலேமின் அழிவைப்பற்றிய உரை

### முன்னுரை

5 கோயிலைப்பற்றிச் சிலர் பேசிக்கொண்டிருக்கையில்,
அது நல்ல கற்களாலும் பொருத்தனைக் கொடைகளா
6 லும் அழகு செய்யப்பட்டுள்ளது என்றபோது, அவர்,
"ஒருநாள் வரும், நீங்கள் காணும் இதெல்லாம்,கல்லின்
7 மேல் கல் இராதபடி இடிபடும்" என்றார். "போதகரே,
இவை எப்பொழுது நடக்கும்? இவை நடைபெறவிருக்
கும்பொழுது தோன்றும் அறிகுறி என்ன?" என்று
அவரை வினவினர்.

### துன்பங்களின் தொடக்கம்

*8 அதற்கு அவர், "ஏமாறாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்,
பலர் என் பெயரை வைத்துக்கொண்டு, 'நானே அவர்;
குறித்த காலம் நெருங்கிவிட்டது' என்பார்கள். அவர்
9 கள் பின்னே போகாதீர்கள். போர்களைப்பற்றியும் குழப்
பங்களைப்பற்றியும் கேள்விப்படும்போது திகிலடையா
தீர்கள். இவை முதலில் நிகழத்தான்வேண்டும். ஆனால்
10 முடிவு உடனே வராது" என்றார். மேலும் அவர்
11 சொன்னதாவது: "நாடு நாட்டையும், அரசு அரசை
யும் எதிர்த்து எழும். பற்பல இடங்களில் கொடிய நில
நடுக்கமும், கொள்ளைநோய்களும், பஞ்சமும் உண்டா
கும்; அச்சமூட்டும் நிகழ்ச்சிகளும், வானத்தில் பெரிய
அறிகுறிகளும் தோன்றும்.
12 "இதற்கெல்லாம் முன்னதாக என் பெயரின் பொருட்டு
உங்களைப் பிடித்து, செபக்கூடங்களுக்கும் சிறைச்சாலை
களுக்கும் இழுத்துச் சென்று, அரசர்களுக்கும் தலைவர்
களுக்கும் உங்களைக் கையளித்துத் துன்புறுத்துவர்.
13 எனக்கு நீங்கள் சாட்சியாயிருப்பதற்கு இவை உங்க

---

* கி. பி. 70ஆம் ஆண்டிற்கு முன் பலர் தாங்கள் தாம் மெசியா என்று ஏமாற்றினர்.

14 ளுக்கு வாய்ப்பளிக்கும். எனவே, என்ன பதில் அளிக்க
லாம் என்று முன்னதாகவே எண்ணிப் பார்க்க வேண்
15 டாம். இதை உள்ளத்தில் இருத்துங்கள்; உங்கள் எதிரி
கள் எவருமே உங்களை எதிர்த்து நிற்கவோ, மறுத்துப்
பேசவோ கூடாதபடி உங்களுக்குப் பேச்சு வன்மையும்
16 ஞானமும் அருளுவேன். உங்கள் பெற்றோரும் உடன்
பிறந்தோரும் உறவினரும் நண்பரும் உங்களைக் காட்டிக்
17 கொடுப்பர். உங்களுள் சிலர் கொல்லப்படுவர். என்
பெயரைக் குறித்து உங்களை எல்லாரும் வெறுப்பார்கள்.
18 ஆயினும் உங்கள் தலைமயிர் ஒன்றுகூட விழவே விழாது.
19 நிலைத்து நின்றால், உங்கள் ஆன்மாக்களை மீட்டுக்
கொள்வீர்கள்.

### யெருசலேமின் வேதனை

*20 "யெருசலேமைப் படைகள் முற்றுகையிடக் காணும்
போது, அதன் அழிவு நெருங்கிவிட்டது என்று அறிந்து
21 கொள்ளுங்கள். அப்போது யூதேயாவிலிருப்பவர்கள்
மலைகளுக்கு ஓடிப்போகட்டும். நகருக்குள் இருப்பவர்கள்
வெளியேறட்டும். நாட்டுப்புறங்களில் இருப்பவர்கள்
22 நகருக்குள்ளே வராதிருக்கட்டும். தண்டனையின் காலம்
அது. எழுதியுள்ளதெல்லாம் அப்போது நிறைவேற
23 வேண்டும் அந்நாட்களில் கருப்பவதிகளுக்கும் பாலூட்டு
வோருக்கும் ஐயோ பரிதாபம்! ஏனெனில், நாட்டிலே
மிகுந்த நெருக்கடியும், இம்மக்களின்மேல் தேவ கோப
மும் உண்டாகும். இவர்கள் வாள் முனையில் மடிவார்
*24 கள்; புறநாடுகளுக்கெல்லாம் அடிமைகளாகக் கொண்டு
செல்லப்படுவார்கள். புறவினத்தாரின் காலம் நிறை
வேறுமட்டும் யெருசலேம் புறவினத்தாரால் மிதிபடும்.

---

* கி. பி. 70ஆம் ஆண்டில் யெருசலேம் உரோமைப் பட்டாளத்தால் அழிக்கப்பட்டது.

* புறவினத்தாரின் காலம்—பிரமாணிக்கம் தவறிய யூதமக்களுக்குப் பதிலாக கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட வேற்றினத்தார் கடவுளின் அரசில் இடம்பெறும் காலம்.

25 ''கதிரவனிலும் நிலாவிலும் விண்மீன்களிலும் அறிகுறி
கள் தென்படும். மண்ணுலகில் கடற்கொந்தளிப்பின்
26 முழக்கத்தினால் நாடுகள் குழப்பமடைந்து இடுக்கண்
உறும். உலகத்திற்கு என்ன நேருமோ என்னும் ஏக்கத்
தினாலும் அச்சத்தினாலும் மக்கள் உயிர்விடுவர். வானத்
27 தின் படைகள் அசைக்கப்படும். அப்பொழுது மனுமகன்
மிகுந்த வல்லமையோடும் மாட்சிமையோடும் மேகத்
தின்மீது வருவதைக் காண்பார்கள். இவை நிகழத்
தொடங்கும்போது, தலை நிமிர்ந்து நில்லுங்கள்; உங்கள்
28 மீட்பு நெருங்கி வருகின்றது.''

இவை எப்பொழுது நிகழும்?

29 மேலும், அவர் அவர்களுக்குச் சொன்ன உவமையாவது:
''அத்தி மரத்தையும், மற்ற மரங்களையும் பாருங்கள்.
30 அவை தளிர்ப்பதைப் பார்க்கும்பொழுது, இதோ!
கோடைக் காலம் அண்மையில் உள்ளது என்று அறிந்து
31 கொள்ளுகிறீர்கள். அவ்வாறே, நீங்களும் இதெல்லாம்
நடைபெறுவதைக் காணும்போது, கடவுளின் அரசு
அண்மையில் உள்ளது என்று அறிந்துகொள்ளுங்கள்.
‡32 இவை யாவும் நடைபெறும்வரை இத்தலைமுறை ஒழி
யாது என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.
33 விண்ணும் மண்ணும் ஒழிந்துபோம், என் வார்த்தை
களோ ஒழியவே ஒழியா.

விழிப்புத் தேவை

34 ''களியாட்டத்தாலும் குடிவெறியாலும் உலகக் கவலை
யாலும் உங்கள் உள்ளங்கள் மந்தமடையாதபடியும்'
அந்நாள் எதிர்பாராமல் கண்ணிபோல் உங்களைச் சிக்க
35 வைக்காதபடியும், எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில்,
மண்ணுலகெங்கும் வாழும் அனைவர் மேலும் அந்நாள்

‡ 'இவை யாவும் நடைபெறும் வரை'—யெருசலேம் நகர் அழிக்கப்படும் வரை.

36 வந்துவிடியும். நிகழப்போகும் அனைத்திலிருந்தும் தப்
பித்துக்கொண்டு மனுமகன் முன் நிற்க நீங்கள் வலிமை
யுள்ளவர்களாய் இருக்கும்படி எந்நேரமும் செபித்து
விழிப்பாயிருங்கள்.''
37 அவர் பகலிலே கோயிலில் போதிப்பார். இரவிலோ
ஒலிவத் தோப்பு மலைக்குப் போய் வெட்டவெளியில்
38 தங்குவார். பொழுது விடிந்ததும், கோயிலில் அவர்
சொல்வதைக் கேட்க மக்கள் எல்லாரும் அவரிடம்
வருவார்கள்.

## 6. இயேசுவின் திருப்பாடுகளும், திருமரணமும்

### இயேசுவுக்கு எதிராகச் சதி

***22** பாஸ்கா எனப்படும் புளியாத அப்பத் திருவிழா அடுத்
திருந்தது. தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞரும்
2 இயேசுவை எப்படித் தொலைக்கலாமென்று வழி தேடிக்
கொண்டிருந்தனர். ஆனால், பொதுமக்களுக்கு அஞ்சினர்.
3 பன்னிருவருள் ஒருவரான இஸ்காரியோத்து எனப்படும்
4 யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான். தலைமைக் குருக்
களிடமும் காவல் தலைவர்களிடமும் சென்று, தான்
இயேசுவை அவர்களுக்கு எப்படிக் காட்டிக்கொடுக்க
5 லாம் என்பதைப்பற்றிக் கலந்து பேசினான். அவர்கள்
மகிழ்ச்சியுற்று, அவனுக்குப் பணம் கொடுக்க உடன்பட்
6 டார்கள். அவனும் ஒப்புக்கொண்டு, கூட்டம் இல்லாத
போது அவரைக் காட்டிக் கொடுக்க வாய்ப்புத் தேடிக்
கொண்டிருந்தான்.

### பாஸ்காவிற்கு ஏற்பாடு

7 அப்போது பாஸ்காச் செம்மறியைப் பலியிடவேண்டிய
8 புளியாத அப்பத் திருவிழா வந்தது. ''நாம் பாஸ்காப்

---

* 'பாஸ்கா'—எபிரேய மக்கள் எகிப்தில் செம்மறியின் இரத்தத்தி
னால் பாதுகாக்கப்பட்டதையும், அங்கிருந்து வெளியேறியதையும் நினை
வூட்டிய திருவிழா. 'பாஸ்கா' என்றால் 'கடந்து செல்லல்' என்பது
பொருள்.

பலியுணவை உண்பதற்கு நீங்கள் போய் ஏற்பாடு
செய்யுங்கள்'' என்று இராயப்பரையும அருளப்பரையும்
அனுப்பினுர். ''எங்கே ஏற்பாடு செய்யவேண்டும் என்
9 கிறீர்?'' என்று அவர்கள் அவரிடம் கேட்டனர். ''நீங்
10 கள் நகருக்குள் போகும்போது, ஒருவன் தண்ணீர்க்
குடம் சுமந்துகொண்டு உங்களுக்கு எதிரே வருவான்.
அவன் நுழையும் வீட்டிற்கு அவன் பின்னே சென்று,
11 அந்த வீட்டுத் தலைவனிடம், 'நான் என் சீடருடன்
பாஸ்கா உணவை உண்பதற்கான அறை எங்கே என்று
போதகர் உம்மைக் கேட்கிறுர்' எனச் சொல்லுங்கள்.
12 இருக்கை முதலியன அமைந்துள்ள ஒரு பெரிய மாடி
அறையை அவன் உங்களுக்குக் காட்டுவான். அங்கே
13 ஏற்பாடு செய்யுங்கள்'' என்றுர். அவர்கள் போய்த்
தங்களிடம் அவர் சொல்லியவாறே நிகழ்ந்ததைக்
கண்டு, பாஸ்கா உணவுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

பாஸ்கா உணவு

14 நேரம் வந்ததும், அவர் பந்தியமர்ந்தார்: அப்போஸ்
15 தலரும் அவருடன் அமர்ந்தனர். அவர் அவர்களை
நோக்கி, ''நான் பாடுபடுவதற்குமுன் உங்களோடு
*16 இந்தப் பாஸ்கா உணவை உண்ண ஆசைமேல் ஆசை
யாயிருந்தேன். ஏனெனில், கடவுளுடைய அரசில் இது
நிறைவேறுமளவும் இதை இனி உண்ணமாட்டேன்
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றுர்.
17 பின்பு கிண்ணத்தை எடுத்து, நன்றி கூறி, ''இதை
18 வாங்கி உங்களுக்குள் பகிர்ந்துகொள்ளுங்கள். ஏனெ
னில், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் : கடவுளின்

* யூதர்களின் பாஸ்காவிழா கடவுளின் அரசில் சிறப்பிக்கப்படவிருந்து நற்கருணைக்கு முன் அடையாளமாயிருந்தது. இந்நற்கருணையின் முழுப் பயனை யும் அடையவேண்டிய இடம் விண்ணுலக விருந்திலாகும் ( 11 : 3 காண் ).

அரசு வரும்வரை திராட்சைப்பழ இரசத்தைக் குடிக்க
மாட்டேன்'' என்றூர்.

நற்கருணையை ஏற்படுத்துதல்

19 மேலும் அப்பத்தை எடுத்து, நன்றி கூறி, பிட்டு அவர்
களுக்கு அளித்து, ''இது உங்களுக்காக அளிக்கப்படும்
என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்''
20 என்றூர். அவ்வாறே, உணவு அருந்தியபின் கிண்
ணத்தை எடுத்து, ''இக்கிண்ணம், உங்களுக்காகச்
சிந்தப்படும் என் இரத்தத்தினுலாகும் புதிய உடன்
படிக்கை.''

21 ''என்னைக் காட்டிக் கொடுப்பவன் இதோ! என்னோடு
22 பந்தியில் அமர்ந்து உண்ணுகிறன். மனுமகன் தேவ
ஏற்பாட்டின்படி போகத்தான் போகிறூர். ஆனால் அவ
ரைக் காட்டிக்கொடுப்பவனுக்கு ஐயோ கேடு!'' என்றூர்.
23 ''அப்படியானால் நம்முள் யார் இதைச் செய்யப்போகிற
வன்?'' என்று அவர்கள் தங்களுக்குள்ளே வினவத்
தொடங்கினர்.

பெரியவன் யார்?

24 மேலும் தங்களுள் யாரைப் பெரியவனுகக் கருதவேண்
டும் என்ற வாக்குவாதம் அவர்களிடையே உண்டா
†25 யிற்று. அதற்கு அவர், ''புறவினத்தாரின் அரசர்கள்
அவர்கள்மீது அதிகாரம் காட்டுகிறூர்கள். அப்படி
26 அதிகாரம் செலுத்துவோர் 'நன்மை புரிவோர்' எனப்
படுகின்றனர். நீங்களோ அப்படி இருத்தல் ஆகாது.
ஆனால், உங்களுள் பெரியவன் சிறியவன் போலவும்,
தலைவன் பணிவிடை புரிபவன் போலவும் இருக்கட்டும்.

† நன்மைபுரிவோர்' — எகிப்து, சீரியா நாடுகளை ஆண்ட மன்னர் பலருக்கு இப்படியொரு பட்டப்பெயர் இருந்தது.

27 யார் பெரியவன்? பந்தியில் அமர்பவனா, பணிவிடை
செய்பவனா? பந்தியில் அமர்பவன் அன்றோ? நானோ
உங்கள் நடுவே பணிவிடை புரிபவனைப்போல் இருக்
கிறேன்.

28 "என் துன்பச் சோதனைகளில் என்னுடன் நிலைத்து
29 நின்றவர்கள் நீங்களே. என் தந்தை எனக்கு அரசுரிமை
வழங்கியதுபோல் நானும் உங்களுக்கு அதை வழங்கப்
30 போகிறேன். எனவே, என் அரசில் என்னுடன் பந்தியில்
உண்பீர்கள், குடிப்பீர்கள். இஸ்ராயேலின் பன்னிரு
கோத்திரங்களுக்கும் நடுவராக அரியணைகளில் வீற்
றிருப்பீர்கள்.

என்னை மும்முறை மறுதலிப்பாய்

31 "சீமோனே, சீமோனே, இதோ! சாத்தான் உங்களை
கோதுமையைப்போல் புடைக்க உத்தரவு பெற்றுக்
32 கொண்டான். ஆனால் உன் விசுவாசம் தவறாதபடி
உனக்காக மன்றாடினேன். நீ திருந்தியபின் உன் சகோ
33 தரர்களை உறுதிப்படுத்து" என்றார் அதற்கு இராயப்
பர், "ஆண்டவரே, உம்மோடு சிறைக்கும் சாவுக்கும்
உள்ளாக ஆயத்தமாக இருக்கிறேன்" என்றார்.
34 இயேசுவோ, "இராயப்பா, நான் அவரை அறியேன்'
என்று நீ என்னை மும்முறை மறுதலிக்குமுன் இன்று
கோழி கூவாது என உனக்குச் சொல்லுகிறேன்"
என்றார்.

இரண்டு வாள்கள்

*35 பின்பு அவர்களை நோக்கி, "பணப்பை, கைப்பை,
மிதியடி எதுவுமில்லாமல் உங்களை நான் அனுப்பிய
போது உங்களுக்கு ஏதாவது குறைவாய் இருந்ததா?"

---

* லூக். 10:4 காண்.

†36 என்று வினவினர். "இல்லை" என்றனர். "இப்பொ
ழுதோ, பணப்பை உள்ளவன் அதை எடுத்துக்கொள்
ளட்டும். கைப்பை உள்ளவனும் அவ்வாறே செய்யட்
டும். வாள் இல்லாதவன், தன் மேலாடையை விற்று
37 விட்டு வாள் ஒன்று வாங்கிக்கொள்ளட்டும். ஏனெனில்,
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: 'நெறிகெட்டவர்
களோடு ஒன்றாக எண்ணப்பட்டார்' என்று எழுதி
யுள்ளது என் மட்டில் நிறைவேற வேண்டும். என்னைப்
38 பற்றியதெல்லாம் நிறைவு பெறுகின்றது" என்றார்.
அவர்கள், ஆண்டவரே, இதோ! இரண்டு வாள் இங்கு
உள்ளன" என்றனர். அவரோ, "போதும்" என்றார்.

கெத்சேமனித் தோட்டத்தில்

39 அங்கிருந்து வெளியே புறப்பட்டுச் சென்று வழக்கப்படி
ஒலிவ மலைக்கு வந்தார் அவருடைய சீடர் அவரைப்
40 பின் தொடர்ந்தனர். அவ்விடத்தை அடைந்ததும் அவர்
களை நோக்கி, "சோதனைக்கு உட்படாதபடி செபியுங்
41 கள் என்றார். பின்னர், அவர்களை விட்டுக் கல்லெறி
42 தொலைவு சென்று முழங்காலிலிருந்து, "தந்தையே,
உமக்கு விருப்பமானால், இத்துன்பக் கலத்தை என்னிட
மிருந்து அகற்றியருளும்; எனினும், என் விருப்பம்
அன்று, உம் விருப்பமே நிறைவேறட்டும்" என்று
43 செபித்தார். அப்போது வானதூதர் ஒருவர் அவருக்
44 குத் தோன்றி அவரைத் திடப்படுத்தினர். கொடிய
வேதனைக்குள்ளாகவே, மேலும் உருக்கமாகச் செபித்
தார். அவருடைய வியர்வை பெரும் இரத்தத் துளி
களாக நிலத்தில் விழுந்தது.

---

† பகைவர்களால் சூழப்பட்டவராய் வாழ்கின்றோம் நாம் இவ்வுலகில். இத்தகைய சூழ்நிலையில் நாம் மிக விழிப்புடன் இருத்தல் வேண்டும் என்ற கருத்தை ஒரு பழமொழியைக்கொண்டு அறிவுறுத்துகிறார். அப்போஸ்தலர்கள் அதைச் சொல்லுக்குச் சொல்லாகப் புரிந்துகொள்கிறார்கள். 'அதற்கு மேல் சொல்வதில் பயன் இல்லை' என்ற கருத்தில்தான் இயேசு இறுதியாக "போதும்" என்கிறார்.

45 செபத்தை விட்டெழுந்து, தம் சீடரிடம் வந்தார்.
46 அவர்கள் துயரத்தால் தூங்குவதைக் கண்டு, அவர்களை
நோக்கி, "ஏன் தூங்குகிறீர்கள்? எழுந்திருங்கள்,
சோதனைக்கு உட்படாதபடி செபியுங்கள்" என்றார்.

இயேசு பிடிபடுதல்

47 அவர் பேசிக்கொண்டிருக்கையிலேயே, இதோ! ஒரு
கூட்டம் வந்தது பன்னிருவருள் ஒருவனாகிய யூதாஸ்
என்பவன் அவர்களுக்கு முன் சென்று இயேசுவை முத்த
48 மிட அணுகினான். இயேசு அவனை நோக்கி, "யூதாசே,
முத்தமிட்டா மனுமகனைக் காட்டிக்கொடுக்கிறாய்?"
49 என்றார் சூழ நின்றவர்கள் நடக்கப்போவதை
உணர்ந்து, அவரிடம், ஆண்டவரே, வாளால் வெட்டு
50 வோமா?" என்று கேட்டனர். அவர்களுள் ஒருவன்
தலைமைக் குருவின் ஊழியனைத் தாக்கி அவனுடைய
51 வலக்காதைத் துண்டித்தான், "போதும், விடுங்கள்"
என்று இயேசு சொல்லி, அவன் காதைத் தொட்டுக்
குணப்படுத்தினார்.

52 இயேசு தம்மைப் பிடிக்க வந்திருந்த தலைமைக் குருக்
களையும், கோயிலின் காவல் தலைவர்களையும், மூப்பர்
களையும் நோக்கி, "நீங்கள் கள்வனிடம் வருவதுபோல்,
53 வாளோடும் தடியோடும் வந்தீர்களோ? நாள்தோறும்
கோயிலில் நான் உங்களோடு இருந்தும் நீங்கள் என்
மேல் கை வைக்கவில்லை. ஆனால், இது உங்கள் நேரம்;
இருள் ஆட்சிபுரியும் நேரம்" என்றார்.

இராயப்பர் மும்முறை மறுதலிக்கிறார்

54 பின்னர், அவர்கள் அவரைப் பிடித்து, தலைமைக் குரு
வின் இல்லத்திற்குக் கூட்டிச் சென்றனர். இராயப்பரோ
55 தொலைவிலே பின் தொடர்ந்தார். முற்றத்தின் நடுவில்
அவர்கள் நெருப்பு மூட்டி அதைச் சுற்றி உட்கார்ந்த
னர். இராயப்பரும் அவர்களோடு போய் உட்கார்ந்து

கொண்டார். ஊழியக்காரி ஒருத்தி அவர் அனல் அருகே
56 உட்கார்ந்திருப்பதைக் கண்டு,அவரை உற்றுப் பார்த்து,
57 ''இவனும் அவனுடன் இருந்தான்''என்றாள். அவரோ,
''எனக்கு அவரைத் தெரியாதம்மா''என்று மறுத்தார்.
58 சற்று நேரத்திற்குப்பின் மற்றொருவன் அவரைக் கண்டு,
''நீயும் அவர்களுள் ஒருவன்தான்''என, இராயப்பரோ,
59 ''இல்லையப்பா''என்றார். ஏறக்குறைய ஒருமணி நேரம்
கழித்து இன்னொருவன் ''உண்மையாகவே, இவனும்
அவனோடு இருந்தான்; ஏனெனில் இவன் கலிலேயன்
60 தான்''என்று அழுத்தமாய்க் கூறினான். இராயப்பரோ,
''நீ சொல்வது எனக்குத் தெரியாதப்பா'' என்றார்.
உடனே, அவர் பேசிக்கொண்டிருக்கையிலே கோழி
கூவிற்று.
61 ஆண்டவர் திரும்பி இராயப்பரை உற்று நோக்கவே,
''இன்று கோழி கூவுமுன்னர் நீ என்னை மும்முறை மறு
தலிப்பாய்'' என்று ஆண்டவர் கூறிய வார்த்தையை
62 அவர் நினைவுகூர்ந்து, வெளியே போய் மனம் வெதும்பி
அழுதார்.

### இயேசுவை ஏளனம் செய்கின்றனர்

63 இயேசுவைக் காவல் செய்துகொண்டிருந்தவர்கள்
64 அவரை அடித்து ஏளனம் செய்தனர். அவருடைய
முகத்தை மூடி,''உன்னை அடித்தவன் யாரென்று தீர்க்க
65 தரிசனமாகச் சொல்''என்றனர். இன்னும் அவரைப்
பலவாறு பழித்துப் பேசலாயினர்.

### ஆலோசனைக் குழுமுன்

66 பொழுது விடிந்ததும் மூப்பர் சபையினரும், தலைமைக்
குருக்களும் மறைநூல் அறிஞரும் ஒன்றுகூடித் தங்கள்
நீதிமன்றத்திற்கு அவரைக் கூட்டிப்போய் ''நீ மெசியா
67 வானால், எங்களுக்குச் சொல்''என்றனர். அவர் அவர்
களை நோக்கி ''நான் உங்களுக்குச் சொன்னால் நீங்கள்

68 என்னை நம்பமாட்டீர்கள். நான் உங்களை வினவினாலோ,
69 நீங்கள் விடையளிக்கவும் மாட்டீர்கள். இனிமேல் மனு
மகன் வல்லமையுள்ள கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்
70+ திருப்பார்" என்றார். அதற்கு அனைவரும், "அப்படியா
னால் நீ கடவுளின் மகனா?" என, அதற்கு அவர், "நான்
71 கடவுளின் மகன் என்று நீங்களே சொல்லுகிறீர்கள்"
என்றார். அவர்களோ, "நமக்கு இன்னும் சாட்சியம்
எதற்கு? இவன் வாயிலிருந்தே இதைக் கேட்டோமே"
என்றனர்.

பிலாத்து முன்

**23*** அவர்கள் எல்லாரும் கூட்டமாக எழுந்து பிலாத்திடம்
2 அவரைக் கூட்டிச் சென்றனர். "இவன் நம் மக்களி
டையே குழப்பம் உண்டாக்குகிறான். செசாருக்கு வரி
செலுத்தக்கூடாதென்கிறான். தானே மெசியாவாகிய
அரசன் என்று சொல்லிக்கொள்கிறான். இப்படியெல்
லாம் இவன் செய்யக் கண்டோம்" என்று அவர்மேல்
3‡ குற்றஞ் சாட்டத் தொடங்கினர். "நீ, யூதரின் அர
சனோ?" என்று பிலாத்து வினவ, அவர் மறுமொழியாக,
"நீர்தான் சொல்லுகிறீர்" என்றார். அப்போது, பிலாத்து

---

† "நீங்களே சொல்லுகிறீர்கள்"—கடவுளின் மகன் என்ற பெயரை யூதர்கள் அரசியலுடன் சம்பந்தப்பட்ட பெயராகக் கருதி வந்தனர். தங்களை ஆண்ட அரசர்க்கு முதலாய் அவர்கள் அப்பெயரைச் சூட்டுவதுண்டு. ஆகவே இயேசு தாம் கடவுளின் மகன் என்றபோது இவ்வுலகைச் சார்ந்ததோர் அரசியல் அதிகாரமும் அரச பதவியும் தமக்குண்டு என்று கூறுவதாக எண்ணினர். ஆனால் இயேசு உண்மையாகவே கடவுளின் மகனாயிருந்தபோதிலும். யூதர்கள் நினைத்த பொருளில் அன்று என்பதைக் குறிப்பிட்டே இங்ஙனம் கூறினார். 23:3 காண்.

* மரண தண்டனை விதிக்கும் அதிகாரம் யூதமதத் தலைவர்களுக்கு இருக்கவில்லை. யூதேயா நாட்டை ஆண்டுவந்த உரோமை அதிபதிக்கே இருந்தது.

‡ 'நீர்தான் சொல்லுகிறீர்' —'நான் உலகியல் அரசனன்று' என்பது தான் கருத்து.

4 தலைமைக் குருக்களையும் மக்களையும் நோக்கி, ''இவனி
டத்தில் ஒரு குற்றமும் காணேன்'' என்றான். அவர்கள்,
5 ''கலிலேயா தொடங்கி இவ்விடம்வரை யூதேயா எங்
கும் இவன் போதித்து மக்களிடையே கிளர்ச்சி செய்
கிறான்'' என்று வற்புறுத்திக் கூறினார்கள்.

ஏரோது முன்

6 இதைக் கேட்டதும், பிலாத்து, ''இவன் கலிலேயனா?''
*7 என்று வினவினான். அவர் ஏரோதின் அதிகாரத்திற்கு
உட்பட்டவர் என்று அறிந்ததும், அந்நாட்களிலே யெருச
லேமில் தங்கியிருந்த ஏரோதிடம் அவரை அனுப்பினான்.
8 ஏரோது இயேசுவைக் கண்டபொழுது மிக்க மகிழ்ச்சி
யுற்றான். ஏனெனில், அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்
தான். ஆகவே, அவர் அருஞ்செயல் ஏதாவது செய்யக்
காணலாம் என்று நம்பி அவரைப் பார்க்க நெடுநாளாக
9 ஆவலாயிருந்தான். பற்பல கேள்விகளை அவரிடம் கேட்
டான். அவரோ அவனுக்கு மறுமொழியே கூறவில்லை.
10 தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞரும் அவர்மீது
மும்முரமாகக் குற்றஞ்சாட்டிய வண்ணம் நின்றனர்,
11 ஏரோது தன் படையோடு சேர்ந்து அவரை அவமானப்
படுத்தி, எள்ளி நகையாடி, அவருக்குப் பகட்டான உடை
12 அணிவித்துப் பிலாத்திடம் திருப்பியனுப்பினான். அது
வரை ஒருவரோடொருவர் பகைமைகொண்டிருந்த
ஏரோதும் பிலாத்தும் அன்றே நண்பராயினர்

மீண்டும் பிலாத்து முன்

13 பிலாத்து தலைமைக் குருக்களையும் தலைவர்களையும் மக்
14 களையும் ஒன்று கூட்டி, அவர்களை நோக்கி, ''மக்க
ளிடையே குழப்பம் உண்டாக்குபவன் என்று இவனை
என்னிடம் கொண்டுவந்தீர்களே. இதோ! உங்கள் முன்
னிலையில் விசாரித்தும் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில்

* 3 : 1 காண்க.

15 ஒன்றும் இவனிடம் நான் காணவில்லை. ஏரோதும் காண
வில்லை. அவர் இவனை என்னிடம் திருப்பி அனுப்பிவிட்
16 டார். சாவுக்குரியதொன்றும் இவன் செய்யவில்லை.
18 ஆகவே, இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்''
என்றான், மக்களோ ஒருவாய்ப்பட, ''இவனை ஒழித்து
விடும்; பரபாசை எங்களுக்கு விடுதலை செய்யும்'' என்று
19 உரக்கக் கத்தினர். பரபாசோ நகரிலே நடந்த ஒரு குழப்
20 பத்தில் கலந்து கொலை செய்ததாகச் சிறைப்பட்டவன்.
பிலாத்து இயேசுவை விடுதலைசெய்ய விரும்பி மீண்டும்
21 அவர்களிடம் பேசினான். அவர்களோ, ''அவனைச் சிலு
22 வையில் அறையும், சிலுவையில் அறையும்'' என்று
கத்தினர். மூன்றும் முறையாக அவர்களை நோக்கி,
''இவன் செய்த தீங்கு என்ன? சாவுக்குரிய குற்ற
23 மொன்றும் இவனிடம் காணேம். ஆகவே இவனைத் தண்
டித்து விடுதலை செய்வேன்'' என்றான். அவர்களோ அவ
ரைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று உரத்த குர
24 லில் வற்புறுத்திக் கேட்டனர். அவர்கள் கூச்சலே
25 வெற்றி கண்டது. அவர்கள் கேட்டபடியே ஆகட்டும்
என்று பிலாத்து தீர்ப்பளித்தான். குழப்பத்தில் கலந்து
கொலை செய்ததற்காகச் சிறைப்பட்டவனை அவர்கள்
கேட்டுக்கொண்டபடியே விடுதலை செய்தான். இயேசு
வையோ அவர்கள் விருப்பப்படி செய்ய விட்டு
விட்டான்.

சிலுவைப் பாதை

26 அவரைக் கூட்டிச் செல்லும்போது வயலிலிருந்து வந்து
கொண்டிருந்த சிரேனே ஊரானாகிய சீமோன் என்பவ
னைப் பிடித்து அவன்மேல் இயேசுவின் சிலுவையை
வைத்து, அவருக்குப் பின்னாக அதைச் சுமந்துபோகச்

---

17 ''அவன் திருவிழா நாளில் ஒருவனை விடுவிக்க வேண்டியிருந்தது'' இவ்வசனம் ஒருசில பிரதிகளில் மட்டும் காணப்படுகிறது.

27 செய்தனர். திரளான மக்களும், அவருக்காக மாரடித்
துக்கொண்டு புலம்பும் பெண்களும் கூட்டமாக அவ
28 ரைப் பின்தொடர்ந்தனர். இயேசு அப்பெண்கள் பக்கம்
திரும்பி, "யெருசலேம் மகளிரே, எனக்காக அழாதீர்
கள். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவுமே
அழுங்கள். ஒருநாள் வரும். அன்று 'மலடிகள் பேறு
29 பெற்றவர்கள், பிள்ளைப்பேறற்ற வயிறுகளும், பாலூட்
டாத கொங்கைகளும் பேறுபெற்றவை' என்பார்கள்.
அப்பொழுது மலைகளைப் பார்த்து, 'எங்கள்மேல் விழுங்
30 கள்.' குன்றுகளைப் பார்த்து, 'எங்களை மூடிவிடுங்கள்'
என்று சொல்லத் தொடங்குவார்கள். பச்சை மரத்
31 திற்கே இப்படிச் செய்கிறார்கள் என்றால், பட்டமரத்
32 திற்கு என்ன நேருமோ" என்றார். மரண தண்டனைக்
காக இரு குற்றவாளிகளையும் அவரோடே கூட்டிச்
சென்றனர்.

### சிலுவையில் அறைபடுதல்

*33 'மண்டை ஓடு' எனப்படும் இடத்திற்கு வந்த பின்
அவரையும், அவரது வலப்பக்கத்தில் ஒருவனும், இடப்
பக்கத்தில் மற்றவனுமாக அக்குற்றவாளிகளையும் சிலு
34 வையில் அறைந்தனர். இயேசு, "தந்தையே, அவர்களை
மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்ன
தென்று அவர்களுக்குத் தெரியவில்லை" என்று சொன்
னார். அவர்களோ அவருடைய ஆடைகளைப் பகிர்ந்து
கொள்ளச் சீட்டுப் போட்டனர்.

### தன்னையே மீட்டுக்கொள்ளட்டும்

35 மக்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர்.
தலைவர்களும், "மற்றவர்களைக் காப்பாற்றினான். இவன்

* மண்டை ஓடு — 'கொல்கோத்தா' என்று அரமாயிக் மொழியில் அக்குன்றுக்கு இருந்த பெயரை லூக்காஸ் மொழி பெயர்த்துத் தருகிறார்.

கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப் பெற்றவரு
மாஞல் தன்னேயே காப்பாற்றிக் கொள்ளட்டும்'' என்று
†36 அவரை ஏளனம் செய்தனர், படைவீரர்களும் அணுகி
37 அவருக்குக் காடியைக் கொடுத்து, ''நீ யூதரின் அரசஞ
33 ஞல் உன்னேயே காப்பாற்றிக்கொள்'' என்று எள்ளி
நகையாடினர். 'இவன் யூதரின் அரசன்' என்று எழுதி
யிருந்த பலகையை அவர் தலைக்குமேல் வைத்திருந்தனர்.

நல்ல கள்வன்

39 சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள்
ஒருவன், ''நீ மெசியா அல்லவா? உன்னேயும் எங்களே
40 யும் காப்பாற்று'' என்று அவரைப் பழித்தான். மற்ற
வனே, ''கடவுள் மட்டில் உனக்கு அச்சமே இல்லையா?
41 நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாயிருக்கிருய். நாம்
தண்டிக்கப்படுவது முறையே. ஏனெனில், நம் செயல்
களுக்குத் தக்க பலனேப் பெறுகிருேம். இவரோ ஒரு
குற்றமும் செய்யவில்லை'' என்று அவனேக் கடிந்து
42 கொண்டான். பின்பு, அவன், ''இயேசுவே, நீர் அர
சுரிமையோடு வரும்போது என்னே நினைவுகூரும்'' என்
43 ருன். அவனுக்கு இயேசு, ''இன்றே நீ என்னோடு வான
வீட்டில் இருப்பாய் என்று நான் உறுதியாக உனக்குச்
சொல்லுகிறேன்'' என்ருர்.

இயேசு உயிர்நீத்தல்

44 அப்போது ஏறக்குறைய நண்பகல் வேளை. மூன்று மணி
வரை கதிரோன் மறைந்திருக்க, நாடெங்கும் இருள்
*45 உண்டாயிற்று. ஆலயத்தின் திரை நடுவில் கிழிந்தது.

---

† காடி — சிலுவையில் அறையப்பட்டவர்களுக்கு உண்டாகும் வேதனையைத் தணிப்பதற்கு உதவும் கசப்புக் கலந்த திராட்சைஇரசம்.

* பழைய உடன்படிக்கையின் இறைவழிபாடு முடிவடைந்தது என் பதற்குத் திரை கிழிந்தது அறிகுறியாகும்.

46 ''தந்தையே, உமது கையில் என் ஆவியை ஒப்படைக்
கிறேன்'' என்று இயேசு உரக்கக் கூவினார். இதைச்
47 சொன்னதும் உயிர் நீத்தார். நிகழ்ந்ததைக் கண்ட
நூற்றுவர் தலைவன், "உள்ளபடியே, இவர் நீதிமான்
தான்''என்று சொல்லி, கடவுளை மகிமைப்படுத்தினான்.
48 வேடிக்கை பார்க்க வந்த மக்கட் கூட்டம் நிகழ்ந்ததைக்
கண்டு, மார்பில் அறைந்துகொண்டு திரும்பியது.

49 அவருக்கு அறிமுகமானவர்களும், கலிலேயாவிலிருந்து
அவரைப் பின்தொடர்ந்த பெண்களும் தொலைவில்
நின்று இதெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இயேசுவின் அடக்கம்

50 சூசை என்ற ஒருவர் இருந்தார். அவர் தலைமைச்
51 சங்கத்தின் உறுப்பினர். நல்லவர், நீதிமான். அவர்
களுடைய திட்டத்திற்கும் செயலுக்கும் அவர் இணங்க
வில்லை. யூதர்களுடைய ஊராகிய அரிமத்தியாவைச்
சார்ந்தவர்; கடவுளுடைய அரசை எதிர்நோக்கியிருந்த
52 வர் அவர் பிலாத்தை அணுகி இயேசுவின் உடலைக்
53 கேட்டார். அதைச் சிலுவையிலிருந்து இறக்கிக் கோடித்
துணியில் சுற்றி. பாறையில் குடைந்திருந்த கல்லறை
யில் அடக்கம் செய்தார். அதுவரை யாரையும் அதில்
*54 அடக்கம் செய்ததில்லை. அன்று ஆயத்த நாள். ஓய்வு
நாள் தொடங்கும் வேளை.
55 கலிலேயாவிலிருந்து இயேசுவோடு வந்திருந்த பெண்
களும் சூசையுடன்கூடவே இருந்து கல்லறையையும்,
உடலை அங்கு வைத்த வகையையும் கவனித்தனர்.
56 திரும்பிச் சென்று வாசனைப் பொருள்களையும், பரிமளத்
தைலங்களையும் ஆயத்தப்படுத்தினர். கட்டளைப்படி
ஓய்வுநாளை அனுசரித்தனர்.

---

* வெள்ளிக்கிழமை

3-ம் பாகம்

# இயேசுவின் வாழ்வு, பணி, மரணம் ஆகியவை பற்றிய விளக்கம்

## திருச்சபையின் படிப்பினை

"கடவுளின் செம்மறியாகிய அவர் உலகத்தின் பாவங்களைத் தம்மேல் சுமந்து போஞ்சியு பிலாத்துவின்கீழ் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து நம்மைத் தமது திரு இரத்தத்தினால் மீட்டருளினார். அவர் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு, மூன்றும் நாள் தமது சொந்த வல்லமையால் உயிர்த்தெழுந்தார். இவ்வுயிர்ப்பினால் அருள் வாழ்வாகிய தெய்வீக வாழ்வில் பங்குபெற நம்மை உயர்த்தியுள்ளார். வானகத்திற்கு எழுந்தருளி, அவ்விடமிருந்து சீவியரையும் மரித்தவரையும் நடுத்தீர்க்க மாட்சிமையுடன் மீண்டும் வரவிருக்கின்றார். ஒவ்வொருவருக்கும் அவரவரின் பெறுபேறுகளின்படி தீர்ப்பளிப்பார். கடவுளின் அன்பிற்கும் இரக்கத்திற்கும் இசைந்து நடந்தவர்கள் நித்திய வாழ்விற்குச் செல்வர். அவற்றைக் கடைசிவரைக்கும் உதறித் தள்ளி விட்டவர்கள் அணையா நெருப்பிற்கு ஆளாவர். அவரது அரசுக்கு முடிவிராது." (6ஆம் சின்னப்பரின் விசுவாச அறிக்கை).

# 1. இயேசு உயிர்த்ததும், காட்சியளித்ததும், வானகம் சென்றதும்

## (அ) இயேசு உயிர்த்தார்.

லூக்காஸ் நற்செய்தி நூல் 24:1—12

‡1 வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் பெண்கள்
தாங்கள் ஆயத்தப்படுத்தியிருந்த வாசனைப் பொருள்
2 களை எடுத்துக்கொண்டு கல்லறைக்குச் சென்றனர். கல்
லறை வாயிலில் இருந்த கல் புரட்டியிருக்கக் கண்டனர்.
3 உள்ளே நுழைந்தபோது, ஆண்டவராகிய இயேசுவின்
உடலை அவர்கள் காணவில்லை. ஆதலால் மனம் கலங்
4 கினர். அப்பொழுது. இதோ! மின்னொளி வீசும் ஆடை
5 அணிந்த இருவர் அவர்களுக்குத் தோன்றினர். பெண்
களோ அச்சங்கொண்டு, முகம் கவிழ்ந்து நின்றனர்.
தூதர்கள் அவர்களைப் பார்த்து, "உயிருள்ளவரை இறந்
தோரிடையே தேடுவானேன்? அவர் இங்கே இல்லை;
6, †7 உயிர்த்துவிட்டார். மனுமகன் பாவிகளிடம் கையளிக்
கப்பட்டுச் சிலுவையில் அறையுண்டு மூன்றாம் நாள்
உயிர்த்தெழ வேண்டுமென்று அவர் கலிலேயாவில் இருக்
கும்போதே உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்
8 கள்"என்றனர். அவர்களும் அவர் சொன்னதை நினைவு
கூர்ந்தனர்.
9 கல்லறையை விட்டுத் திரும்பி வந்த பெண்கள், பதி
னொருவருக்கும் மற்றெல்லாருக்கும் இதெல்லாம் அறி
10 வித்தனர், அப்பெண்கள் மதலேன் மரியாளும், அருளம்
மாளும், இயாகப்பரின் தாய் மரியாளும் ஆவர் அவர்
ளோடு சேர்ந்து மற்றப் பெண்களும் இதை அப்போஸ்

---

‡ 'வாரத்தின் முதல் நாள்'— ஞாயிற்றுக்கிழமை.

† 9:22 காண்.

11 தலர்களுக்குக் கூறினர். பெண்கள் கூறியது வெறும்
பிதற்றலாகத் தோன்றியதால், அவர்கள் நம்பவில்லை.
12 இராயப்பரோ எழுந்து கல்லறைக்கு ஓடினார். குனிந்து
பார்க்கையில் துணிகள் மட்டும் கிடக்கக் கண்டார்.
நிகழ்ந்ததைக் குறித்து வியந்துகொண்டே வீடு திரும்பி
னார்.

(ஆ) இயேசு மரிய மதலேனுக்குக் காட்சியளித்தார்.

அருளப்பர் நற்செய்தி நூல் 20:11—18

11 மரியாள் கல்லறைக்கருகில் வெளியே நின்று அழுது
கொண்டிருந்தாள். அழுதுகொண்டே கல்லறைக்குள்
12 குனிந்து பார்த்தாள். வெண்ணுடை அணிந்த வான
தூதர் இருவரை அங்கே கண்டாள். இயேசுவின் உடலை
வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலைமாட்டிலும், மற்ற
13 வர் கால்மாட்டிலுமாக அமர்ந்திருந்தனர். அவர்கள்
அவளை நோக்கி. ''அம்மா, ஏன் அழுகிறாய்'' என, அவள்,
''என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டனர்.
14 எங்கே வைத்தனரோ தெரியவில்லை'' என்றாள். இப்படிச்
சொன்னபின் திரும்பிப் பார்த்தபொழுது இயேசு நிற்
15 பதைக் கண்டாள். ஆனால், அவர் இயேசு என்று அவள்
அறிந்துகொள்ளவில்லை. இயேசு அவளை நோக்கி,
''அம்மா, ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?'' என்று
கேட்டார். அவளோ அவரைத் தோட்டக்காரன் என்
றெண்ணி அவரிடம், ''ஐயா. நீர் அவரைத் தூக்கிக்
கொண்டுபோயிருந்தால் எங்கு வைத்தீர்? சொல்லும்.
16 நான் அவரை எடுத்துச் செல்வேன்'' என்றாள். இயேசு
அவளை நோக்கி, ''மரியே!'' என்றார். அவள் திரும்பிப்
பார்த்து, ''ராபூனி!'' என்றாள். இந்த எபிரேயச் சொல்
17 லுக்குப் 'போதகரே' என்பது பொருள். இயேசு அவளை
நோக்கிக் கூறியதாவது: ''என்னை இப்படிப் பற்றிக்
கொள்ளாதே. ஏனெனில், நான் மேலெழும்பி என்

தந்தையிடம் இன்னும் செல்லவில்லை. என் சகோதரர்
களிடம் போய், 'என் தந்தையும் உங்கள் தந்தையும்
என் கடவுளும் உங்கள் கடவுளுமாகியவரிடம் நான்
மேலே எழும்பிச் செல்கிறேன்' என்று அவர்களுக்குச்
18 சொல். "மதலேன் மரியாள் சீடரிடம் வந்து, "ஆண்ட
வரைக் கண்டேன். அவர் எனக்கு இப்படிச் சொன்
னார்" என்று அறிவித்தாள்.

(இ) இயேசு இரு சீடர்களுக்குக் காட்சியளித்தார்.

லூக்காஸ் நற்செய்தி நூல் 24:13—15

13 அன்றே, இதோ! அவர்களுள் இருவர் யெருசலேமி
லிருந்து ஏழு கல் தொலைவிலிருந்த எம்மாவுஸ் என்ற
14 ஊருக்குப் போய்க்கொண்டிருந்தனர். நடந்ததெல்லாம்
பற்றித் தங்களுக்குள் பேசிக்கொண்டே சென்றனர்.
15 இப்படிப் பேசி உசாவுகையில், இயேசுவே அவர்களோடு
16 சேர்ந்துகொண்டு வழி நடக்கலானார். ஆனால் அவரைக்
கண்டுகொள்ளாதபடி அவர்களின் பார்வை தடைபட்
17 டிருந்தது. "எதைப்பற்றி நீங்கள் உரையாடிக்கொண்டு
செல்லுகிறீர்கள்?" என்று அவர் அவர்களைக் கேட்டார்.
அவர்களோ வாடிய முகத்தோடு நின்றனர்.
18 அவர்களுள் ஒருவரான இலேயோப்பா என்பவர் அவ
ருக்கு மறுமொழியாக, "யெருசலேமில் உள்ளவர்களுள்
நீர் ஒருவர்தான் இந்நாட்களிலே நடந்ததை அறியாத
19 வர்போலும்" என்றார். அதற்கு அவர், "என்ன நடந்
தது?" என்று கேட்டார். அவர்களோ, "நாசரேத்தூர்
இயேசுவைப்பற்றிய செய்திதான். அவர் கடவுளுக்கும்
மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும் செயலி
லும் வல்லமையுள்ள இறைவாக்கினராயிருந்தார்.
20 தலைமைக் குருக்களும் தலைவர்களும் அவரை மரண
தண்டனைக்கு உள்ளாகும்படி கையளித்துச் சிலுவையில்
21 அறைந்தார்கள். இஸ்ராயேலுக்கு விடுதலை அளிப்பவர்

அவரே என நாங்கள் நம்பியிருந்தோம். அதுமட்டுமன்று,
இதெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்றுநாள் ஆகின்றது.
22 மேலும் எங்களைச் சார்ந்த பெண்கள் சிலர் எங்களைத்
திகைக்கச் செய்தனர். அவர்கள் விடியற்காலையில் கல்
23 லறைக்குச் சென்று, அவரது உடலைக் காணாது திரும்பி
வந்து, வானதூதர்களைக் காட்சியில் கண்டதாகவும்,
இயேசு உயிரோடு இருக்கிறார் என்று அவர்கள் கூறின
24 தாகவும் சொல்லுகிறார்கள். எங்கள் தோழருள் சிலரும்
கல்லறைக்குச் சென்று, அப்பெண்கள் சொன்னபடியே
இருக்கக் கண்டனர். அவரையோ காணவில்லை" என்ற
25 னர். அவர் அவர்களை நோக்கி, "அறிவில்லாதவர்களே,
இறைவாக்கினர்கள் கூறியதெல்லாம் விசுவசிப்பதற்கு
மந்த புத்தியுள்ளவர்களே, மெசியா இப்பாடுகளைப்
26 பட்டன்றோ மகிமையடையவேண்டும்" என்று சொல்லி,
27 மோயீசன் முதல் இறைவாக்கினர்கள் அனைவரும் எழுதி
வைத்த வாக்குகளிலிருந்து தொடங்கி தம்மைக் குறித்த
மறைநூல் பகுதிகளுக்கெல்லாம் விளக்கம் தந்தார்.

28 அவர்கள் தாங்கள் போகும் ஊரை நெருங்கினர். அவர்
இன்னும் வழி நடக்க வேண்டியவர்போல் காட்டிக்
29 கொண்டார். அவர்களோ, "எங்களோடே தங்கும்.
மாலை நேரமாகிறது, பொழுதும் சாய்கிறது" என்று
சொல்லி அவரைக் கட்டாயப்படுத்தினர். அவரும் அவர்
30 களோடு தங்குவதற்குச் சென்றார். அங்கு அவர்களுடன்
பந்தி அமர்ந்திருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து
31 இறைபுகழ் கூறி, பிட்டு, அவர்களுக்கு அளித்தார். அப்
போது, அவர்கள் கண் திறக்கப்பட, அவரைக் கண்டு
கொண்டனர். அவரோ, அவர்களிடமிருந்து மறைந்து
32 போனார். அப்போது அவர்கள் ஒருவரைஒருவர் நோக்கி,
"வழியில் அவர் நம்மோடு உரையாடி மறைநூலைத்
தெளிவாக்குகையில் நம் உள்ளம் உருகவில்லையா?"
என்றனர்.

33 அந்நேரமே, எழுந்து யெருசலேமுக்குத் திரும்பிச்
சென்று, பதினொருவரும் அவர்களோடு இருந்தவர்களும்
34 கூடியிருக்கக் கண்டனர். கூடியிருந்தவர்கள், "உண்மை
யாகவே ஆண்டவர் உயிர்த்தார். சீமோனுக்குக் காட்சி
35 அளித்தார்" எனப் பேசிக்கொண்டிருந்தனர். அவ்விரு
சீடர் வழியில் நடந்ததையும், அப்பத்தைப் பிட்கையில்
அவரைக் கண்டுகொண்டதையும் அவர்களுக்கு விவரித்
தனர்.

(ஈ) இயேசு அப்போஸ்தலர்களுக்குக் காட்சியளித்தார்.

லூக்காஸ் நற்செய்தி நூல் 24:36—43

36 இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் இயேசு, அவர்
கள் நடுவே தோன்றி, 'உங்களுக்குச் சமாதானம்'
37 என்றார். அவர்கள் திடுக்கிட்டு, அச்சம்கொண்டு, ஏதோ
38 ஆவியைக் காண்பதாக எண்ணினர். அப்போது அவர்
அவர்களை நோக்கி, "ஏன் இந்தக் கலக்கம்? உங்கள்
39 உள்ளத்தில் இத்தகைய எண்ணங்கள் எழுவானேன்?
என் கைகளையும் கால்களையும் பாருங்கள். நானேதான்;
தொட்டுப் பாருங்கள். நீங்கள் என்னிடம் காணும்
40 எலும்பும் தசையும் ஆவிக்குக்கிடையாது" என்றார். இப்
படிச் சொன்ன பின்பு தம் கைகளையும் கால்களையும்
41 அவர்களுக்குக் காட்டினார். அவர்களோ, மகிழ்ச்சி மிகு
தியால் இன்னும் நம்பாமல் வியந்துகொண்டிருக்கும்
பொழுது "உண்பதற்கு இங்கு ஏதாவது உங்களிடம்
42 உண்டா ?" என்றார். பொரித்த மீன் துண்டொன்று
43 அவருக்குக் கொடுத்தனர். அதை எடுத்து அவர்கள்
முன் சாப்பிட்டார்.

(உ) இயேசு அப்போஸ்தலர்களுக்கு மீண்டும் காட்சியளித்தார்

அருளப்பர் நற்செய்தி நூல் 20:24—29

24 பன்னிருவருள் ஒருவரான திதிமு என்ற தோமையார்
25 இயேசு வந்தபோது அவர்களோடு இல்லை. மற்றச் சீடர்

கள் அவரிடம்,''ஆண்டவரைக் கண்டோம்''என்றதற்கு
அவர், ''அவருடைய கைகளில் ஆணியால் உண்டான
தழும்பைப் பார்த்து, ஆணிகள் இருந்த இடத்தில் என்
விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டா
26 லொழிய விசுவசிக்கமாட்டேன்''என்றார். எட்டு நாளுக்
குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் வீட்டில் இருந்
தனர். தோமையாரும் அவர்களோடிருந்தார். கதவு
கள் மூடியிருக்க, இயேசு வந்து அவர்களிடையே நின்று,
27 ''உங்களுக்குச் சமாதானம்''என்றார். பின்பு தோமை
யாரை நோக்கி,''இங்கே உன் விரலையிடு; இதோ! என்
கைகள். உன் கையை நீட்டி என் விலாவில் இடு; விசு
வாசம் அற்றவனாயிராதே, விசுவாசங்கொள்''என்றார்.
28 அப்போது தோமையார் அவரை நோக்கி,''என் ஆண்ட
29 வரே, என் கடவுளே!''என்றார். இயேசுவோ,
''என்னைக் கண்டதால் விசுவாசங்கொண்டாய்,
காணாமலே விசுவசிப்பவர்கள் பேறுபெற்றோர்''என்றார்.

(ஊ) இயேசு இராயப்பரைத் திருச்சபையின் தலைவராக்கினார்

அருளப்பர் நற்செய்தி நூல் 21:1—17

1 பின்னர் இயேசு சீடருக்குத் திபேரியாக் கடலருகே மீண்
2 டும் தோன்றினார்; தோன்றியது இவ்வாறு: சீமோன்
இராயப்பர், திதிமு என்ற தோமையார், கலிலேயா
நாட்டுக் கானாவூர் நத்தனயேல், செபதேயுவின் மக்கள்,
இயேசுவின் சீடர்களுள் வேறு இருவர் ஆகிய இவர்கள்
கூடியிருந்தார்கள். அப்போது சீமோன் இராயப்பர்
3 அவர்களை நோக்கி,''மீன் பிடிக்கப்போகிறேன்''என்றார்.
மற்றவர்களும், ''உன்னோடு நாங்களும் வருகின்றோம்''
என்றார்கள். போய்ப் படகிலேறினார்கள். அன்று இரவு
அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.

4 விடியற்காலையில் இயேசு கரையில் நின்றார். ஆனால்,
அவரை இயேசு என்று சீடர் அறிந்துகொள்ளவில்லை.
5 இயேசு அவர்களை நோக்கி, ''பிள்ளைகளே, மீன் ஒன்றும்

படவில்லையா?'' என்று கேட்டார். அவர்கள், "ஒன்று
6 மில்லை" என்றனர். அப்போது அவர், ''படகின் வலப்
பக்கமாய் வலை வீசுங்கள்; மீன்படும்" என்றார். அப்
படியே வலை வீசினர்; மீன்கள் ஏராளமாய் விழுந்ததால்
அவர்கள் வலையை இழுக்க முடியவில்லை. இயேசு அன்பு
7 செய்த சீடர், ''அவர் ஆண்டவர்தான்'' என இராயப்ப
ருக்குச் சொன்னார். "அவர் ஆண்டவர்தான்" என்று
சீமோன் இராயப்பர் கேட்டவுடன், தாம் ஆடையைக்
களைந்துவிட்டிருந்ததால் மேலாடையைக் கட்டிக்
8 கொண்டு கடலில் குதித்தார். மற்றச் சீடர்களோ
வலையை மீன்களுடன் இழுத்துக்கொண்டு படகிலே வந்
தனர். (ஏனெனில், அவர்கள் கரையிலிருந்து வெகு
தொலைவிலில் இல்லை. ஏறக்குறைய இருநூறு முழம்
தொலைவில்தான் இருந்தார்கள்).

9 கரையில் இறங்கியவுடன் கரிநெருப்பு மூட்டியிருப்பதை
யும், அதன்மேல் மீன் வைத்திருப்பதையும் கண்டனர்.
10 அப்பமும் இருந்தது. இயேசு அவர்களை நோக்கி, ''நீங்
கள் இப்பொழுது பிடித்த மீன்கள் சில கொண்டுவாருங்
11 கள்'' என்றார். சீமோன் இராயப்பர் மறுபடியும் பட
கேறி வலையைக் கரைக்கு இழுத்து வந்தார். அதில்
பெரியமீன்கள் நிறைந்திருந்தன. அவை நூற்றைம்பத்து
12 மூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை.
இயேசு அவர்களைப் பார்த்து, ''சாப்பிட வாருங்கள்''
என்றார். அவர் ஆண்டவர் என்றறிந்து சீடர்களுள்
எவரும், 'நீர் யார்' என்று அவரைக் கேட்கத் துணிய
13 வில்லை. இயேசு அருகில் வந்து அப்பத்தை எடுத்து
அவர்களுக்குக் கொடுத்தார். மீனையும் அவ்வாறே
14 கொடுத்தார். இயேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்
தெழுந்தபின் தம் சீடருக்கு இப்பொழுது தோன்றியது
மூன்றாம் முறை.

*15 அவர்கள் சாப்பிட்டு முடிந்தபின் இயேசு, சீமோன் இரா
யப்பரை நோக்கி, ''அருளப்பனின் மகனான சீமோனே,
இவர்களைவிட நீ அதிகமாய் எனக்கு அன்புசெய்கிறாயா?''
என்று கேட்டார். அவர் அதற்கு, ''ஆம். ஆண்டவரே,
நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்'' என்
றார். இயேசுவோ அவரிடம், ''என் ஆட்டுக்குட்டிகளை
16 மேய்'' என்றார். இரண்டாம்முறையாக இயேசு அவரை
நோக்கி, ''அருளப்பனின் மகனான சீமோனே, நீ எனக்கு
அன்பு செய்கிறாயா?'' என, அவர் அவரை நோக்கி,
''ஆம் ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்
பதை நீர் அறிவீர்'' என்றார். இயேசுவோ அவரிடம்,
''என் ஆடுகளைக் கண்காணி'' என்றார். மூன்றாம் முறை
17 யாக அவரை நோக்கி, ''அருளப்பனின் மகனான சீமோ
னே, என்னை நீ நேசிக்கிறாயா?'' என்று கேட்டார்.
''என்னை நேசிக்கிறாயா?'' என்று அவர் மூன்றாம் முறை
யாகக் கேட்டதால் இராயப்பர் மனம் வருந்தி இயேசு
வை நோக்கி, ''ஆண்டவரே, உமக்கு எல்லாம் தெரி
யுமே. நான் உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்கே
தெரியும்'' என்றார். இயேசு அவரிடம், ''என் ஆடுகளை
மேய் என்றார்.''

---

* ''அன்பு செய்கிறாயா?'' என்ற கேள்விக்கு 'நேசிக்கிறேன்' என்ற பதில் வருவது பொருத்தமில்லையெனத் தோன்றலாம். ஆனால் கிரேக்க மூலத்தில் இருவித சொற்கள் காணப்படுகின்றன. கேள்வியில் தியாக அன்பைக் குறிக்கும் சொல்லும்- பதிலில் சாதாரண நட்புறவைக் குறிக்கும் சொல்லும் வருகின்றன. கடவுள் மனிதனாகித் தம்மைப் பலியாக்கி மானிடர்பால் காட்டிய இயேசுவின் அன்பு தியாகத்துடன் கூடிய அன்பாகும். தன் குருவுக்காக உயிரையும் பலியாக்குவதாக இராயப்பர் கூறியிருந்தார். ஆனால் துன்பம் வந்தபோது சாதாரண நட்புறவை முதலாய்க் காட்டவில்லை. எனினும் தன் குருவின்பால் அத்தகைய உறவு முழுவதும் அற்றுப்போகவில்லை என்ற கருத்துடன்தான் பதில் தருகிறார் இராயப்பர்.

(எ) இயேசுவின் இறுதி அறிவுரை.

லூக்காஸ் நற்செய்தி நூல் 24:44—49

44 அவர் அவர்களைப் பார்த்து, "மோயீசனின் சட்டத்
திலும், இறைவாக்குகளிலும், சங்கீதங்களிலும் என்னைக்
குறித்து எழுதியுள்ளதெல்லாம் நிறைவேற வேண்டும்
என்று நான் உங்களோடு இருந்தபோதே சொன்னேனே;
45 இப்போது நடப்பது அதுதான்" என்றார். மறைநூல்
46 அவர்களுக்கு விளங்கும்படி அவர்களுடைய மனக்கண்
ணைத் திறந்தார். பின்னர் அவர்களை நோக்கி, "மறை
நூலில் எழுதியுள்ளது இதுதான்; மெசியா பாடுபட்டு,
இறந்தோரிடமிருந்து மூன்றும் நாள் உயிர்த்தெழுவார்;
47 பாவமன்னிப்படைய மனந்திரும்ப வேண்டுமென்று
யெருசலேமில் தொடங்கி, புறவினத்தார் அனைவருக்கும்
48 அவர் பெயரால் அறிவிக்கப்படும். இவற்றிற்கெல்லாம்
*49 நீங்கள் சாட்சி. இதோ! என் தந்தை வாக்களித்ததை
நான் உங்களுக்கு அனுப்பப்போகிறேன். உன்னதத்
திலிருந்து வரும் வல்லமையை நீங்கள் அணிந்துகொள்
ளும்வரை நகரிலேயே தங்கியிருங்கள்" என்றார்.

(ஏ) இயேசு வானகஞ் சென்றார்.

லூக்காஸ் நற்செய்தி நூல் 24:50—53

50 பெத்தானியாவை நோக்கி அவர்களைக் கூட்டிச் சென்று,
51 கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசி கூறினார். அப்படி
ஆசி கூறுகையில் அவர்களை விட்டுப் பிரிந்து, வானகத்
52 திற்கு எடுத்துக்கொள்ளப்பெற்றார். அவர்கள் தெண்ட
னிட்டு வணங்கிப் பெரு மகிழ்ச்சியுடன் யெருசலேம்
53 திரும்பினர். கோயிலில் கடவுளை இடைவிடாமல்
போற்றிப் புகழ்ந்துகொண்டிருந்தனர்.

---

* தந்தை வாக்களித்தது—பரிசுத்த ஆவி. அப். பணி. 1:4; 2:32

## 2. புனித இராயப்பரின் அருளுரைகள்

(அ) பெந்தேக்கோஸ்துத் திருவிழாவின்போது ஆற்றிய உரை:
"கடவுள் இயேசுவை உயிர்த்தெழச் செய்தார்; இதற்கு நாங்கள் சாட்சிகள்",

அப்போஸ்தலர் பணி 2 : 14—36

14 அப்பொழுது இராயப்பர் பதினொருவரோடு எழுந்து
நின்று, மக்களை நோக்கி உரத்த குரலில் பேசியதாவது:
"யூதர்களே, மற்றும் யெருசலேம் வாழ் மக்களே,
நான் சொல்வதை அறிந்துகொள்ளுங்கள். என் சொல்
15 லுக்குச் செவி கொடுங்கள். நீங்கள் நினைப்பதுபோல்
இவர்கள் மது மயக்கம்கொண்டவர்களல்லர்; இப்போது
16 காலை ஒன்பது மணிதானே. ஆனால் இது இறைவாக்
கினரான யோவேல் கூறிய நிகழ்ச்சியே.

17 கடவுள் கூறுவது: 'இதோ! இறுதிநாட்களில்
எல்லார்மேலும் என் ஆவியைப் பொழிவேன்:
உங்கள் புதல்வர், புதல்வியர் இறைவாக்கு உரைப்பர்.
இளைஞர் காட்சிகள் அருளப்பெறுவர்.
முதியோர் கனவுகள் காண்பர்.
18 ஆம், அப்பொழுது என் அடியான்,
அடியாள் ஒவ்வொருவர் மீதும்
என் ஆவியைப் பொழிவேன்;
அவர்களும் இறைவாக்கு உரைப்பர்.
19 இன்னும் விண்ணில் அற்புதங்களும்
மண்ணில் அருங்குறிகளும் காட்டுவேன்.
எங்குமே இரத்தமும் நெருப்பும் புகையும்!
20 ஒளிவிளங்கும் பெருநாளாம், ஆண்டவரின் நாள்
வருமுன் கதிரோன் இருளாகும், நிலவே இரத்தமாய்
மாறும்.
21 அப்பொழுது, ஆண்டவரின் பெயரைச் சொல்லி
மன்றாடும் எவனும் மீட்புப் பெறுவான்'.

22 இஸ்ராயேல் மக்களே, நான் கூறுவதைக் கேளுங்கள்;
புதுமைகள், அற்புதங்கள், அருங்குறிகளால் நாசரேத்
தூர் இயேசு கடவுளது சான்று பெற்றவராக உங்கள்
மூன் எண்பிக்கப்பெற்ருர். ஏனெனில், நீங்கள் அறிந்
திருப்பதுபோல் இவற்றையெல்லாம் உங்கள் நடுவில்
23 கடவுளே அவர் வழியாகச் செய்தார். கடவுளின்
திட்டத்திற்கும் முன்னறிவுக்கும் ஏற்பக் கையளிக்கப்
பட்ட இவரைத்தான், நீங்கள் திருச்சட்டம் அறியாத
24 வர்களைக்கொண்டு சிலுவையிலறைந்து கொன்றீர்கள்.
கடவுளோ அவரை மரண வேதனைகளினின்று விடுவித்து
உயிர்த்தெழச் செய்தார். ஏனெனில், மரணம் அவரைத்
தன் பிடியில் வைத்திருத்தல் இயலாதது.

*25 தாவீது அவரைப்பற்றிக் கூறுவது:
'ஆண்டவர் என்றுமே எம் கண்முன் உள்ளார்:
யான் அசைவுருதபடி அவர் என் வலப்பக்கம் நிற்கிருர்.
26 இதனுல் என் உள்ளம் மகிழ்ந்தது:
என் நாவு அக்களிப்பு எய்தியது:
என் உடலும் நம்பிக்கையில் நிலைத்திருக்கும்.
27 ஏனெனில், என் ஆன்மாவைப் பாதாளத்தில்
விட்டுவிடமாட்டீர்.
உம் புனிதர் அழிவு காண விடமாட்டீர்.
28 வாழ்வின் வழிகளை எனக்குக் காட்டினீர்;
உம் திருமுன் நிற்கும் என்னை மகிழ்வால் நிரப்புவீர்'.
29 "சகோதரரே, மூதாதையாகிய தாவீதைப்பற்றி ஒளிவு
மறைவின்றி உங்களுக்குக் கூறலாமா? அவர் இறந்தார்;
அடக்கம் செய்யப்பட்டார்; அவரது கல்லறை இந்நாள்
வரை நம்மிடையே இருக்கின்றது.
†30,31 எனவே, 'அவர் பாதாளத்தில் விடப்படவில்லை'
என்றும், 'அவர் உடல் அழிவுகாணவில்லை' என்றும்

---

* சங். 16:8—11.
† சங். 132:11

அவர் கூறியது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்
னறிந்தேயாகும். ஏனெனில், தாவீது இறைவாக்கின
ரானதால், அவர் வழித்தோன்றல் ஒருவர் அவருடைய
அரியணையில் அமர்வார் என்று கடவுள் ஆணையிட்டு
32 உறுதியாகக் கூறியதை அவர் அறிந்திருந்தார். இந்த
இயேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார்; இதற்கு
நாங்கள் எல்லாரும் சாட்சிகள்.
33 இங்ஙனம், கடவுளின் வல்லமையால் உந்தப்பெற்ற
அவர், வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியைத் தந்தை
யிடமிருந்து பெற்றுப் பொழிந்தருளினர். இப்போது
*34,35 நீங்கள் காண்பதும் கேட்பதும் இதுதான். வான
கத்திற்கு ஏறிச் சென்றவர் தாவீதல்லர். ஏனெனில்,
அவரே கூறுகிறார்.

'ஆண்டவர், என் ஆண்டவரிடம்:
நான் உம் பகைவரை உமக்குக்
கால்மணையாக்கும்வரை
நீர் என் வலப்பக்கத்தில் அமரும் என்றார்.'

†36 எனவே, நீங்கள் சிலுவையில் அறைந்த இந்தஇயேசுவை
கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக ஆக்கினர் என்
பதை இஸ்ராயேல் குலத்தவரெல்லாம் உறுதியாக
அறிந்து கொள்வார்களாக.''

(ஆ) பிறவி முடவனைக் குணப்படுத்தியபின் ஆற்றிய உரை:
''கடவுள் இயேசுவை உயிர்ப்பித்தார்; இதற்கு நாங்கள்
சாட்சிகள்''

அப். பணி 3:12—26

12 ''இஸ்ராயேல் மக்களே, இதைக் கண்டு நீங்கள் வியப்ப
தேன்? எங்கள் சொந்த வல்லமையாலோ, பக்தியின்

---

* சங். 110 : 1.

† 'கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக ஆக்கினர்' — இயேசு தம் தேவ இயல்பில் எக்காலத்தும் ஆண்டவராயிருந்தார். இப்போது மனித இயல்பில் மெசியாவுக்குரிய தேவ மகிமையும் மதிப்பும் பெறுகின்றார்.

பலத்தினாலோ இவனை நடக்க வைத்ததாக எண்ணி
எங்களை இப்படி விழித்துப் பார்ப்பதேன்? ஆபிரகாம்,
*13 ஈசாக், யாக்கோபின் கடவுள், நம் முன்னோர்களின்
கடவுள், தம் ஊழியர் இயேசுவை மகிமைப்படுத்தினார்:
நீங்களோ அவரைப் பகைவர்களிடம் கையளித்து
விட்டீர்கள்: பிலாத்து விடுதலைத் தீர்ப்பு அளித்த
14 போதும் அவன்முன் அவரை மறுதலித்தீர்கள். நீதி
மானும் புனிதருமானவரை மறுதலித்து, கொலைபாத
கனை விடுதலை செய்யக் கேட்டுக்கொண்டீர்கள். வாழ்
15 வுக்கு வழிகாட்டும் தலைவரைக் கொன்றீர்கள். ஆனால்
கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார்.
†16 இதற்கு நாங்கள் சாட்சிகள். இதோ உங்கள் கண்முன்
நிற்கிறவன் உங்களுக்குத் தெரிந்தவன். இயேசுவின்
பெயர்மீதுள்ள விசுவாசத்தால், அவருடைய பெயரே
இவனுக்கு வலுவூட்டியது. அவரால் உண்டாகும் விசு
வாசமே உங்கள் எல்லோருக்கும் முன்பாக இவனுக்கு
முழுக் குணம் அளித்தது.

17 "இனி, சகோதரர்களே, தெரியாமல் இப்படிச் செய்து
விட்டீர்கள் என்று அறிவேன். அப்படியே உங்கள் தலை
18 வர்களும் தெரியாமல் செய்துவிட்டார்கள். கடவுளோ,
தம் மெசியா பாடுபட வேண்டுமென இறைவாக்கினர்
அனைவருடைய வாய்மொழியாலும் முன்னறிவித்ததை
19 இவ்வாறு நிறைவேற்றினார்- ஆகையால் உங்கள் பாவங்
20 கள் ஒழியும் பொருட்டு மனம் மாறிக் கடவுளிடம்
திரும்புங்கள். ஆண்டவர் அப்பொழுது இளைப்பாறும்
காலத்தை அருளி, உங்களுக்கென மெசியாவாக ஏற்
படுத்திய இயேசுவை அனுப்புவார். தற்போது இந்த
21 இயேசு வானகத்தில் ஏற்கப்பெற்று அனைத்தும் புதி

---

* யாத் 3:6,15:இசை. 52:13, தம் ஊழியர் அல்லது தம் குழந்தை.

† அவருடைய பெயரே: பெயர் யாரைக் குறிக்கிறதோ அந்த ஆளின் வல்லமையைக் கொண்டுள்ளது.

தாக்கப்படும் காலம் வரும்வரை அங்கே இருத்தல்
வேண்டும். தொன்றுதொட்டு வந்த தம் பரிசுத்த
இறைவாக்கினர்களின் வாயிலாகக் கடவுள் அக்காலத்
*22 தைப்பற்றி அறிவித்திருந்தார். இவ்வாறு மோயீசன்.
'உங்கள் கடவுளாகிய ஆண்டவர் என்னைப்போன்ற ஓர்
இறைவாக்கினரை, உங்கள் சகோதரர்களினின்று உங்
களுக்கென எழச்செய்வார். அவர் உங்களுக்கு என்ன
23 சொன்னாலும் அதற்குச் செவி கொடுங்கள். அந்த இறை
வாக்கினரின் சொல்லைக் கேளாத எவனும் மக்களினின்று
களைந்தெறியப்படுவான்' என உரைத்தார். அவ்வாறே,
24 சாமுவேல் தொடங்கி இறைவாக்கு உரைத்த எல்லா
ரும் ஒருவருக்குப்பின் ஒருவராக இந்நாட்களைக் குறித்து
முன்னறிவித்தனர்.
†25 நீங்களோ இறைவாக்கினர்களின் புதல்வர்கள். 'உன்
வித்தின் வழியாக மண்ணுலகின் குலமெல்லாம் ஆசி
பெறும்' என்று கடவுள் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்
முன்னோருடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு
26 உரியவர்கள் நீங்கள். உங்களுக்குத் தம் அருள் வழங்கி,
ஒவ்வொருவனையும் தன் தீச்செயல்களினின்று விலக்குவ
தற்காக, கடவுள் தம் ஊழியனை உயிர்ப்பித்து முதல்
முதல் உங்களிடம் அனுப்பினார்.

**(இ) யூதர்களின் தலைமைச் சங்கத்தின்முன் ஆற்றிய உரை:**
**"இயேசுவாலன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை"**

**அப். பணி 4 : 5 - 12**

5 மறுநாள் மக்கள்தலைவர்களும் மூப்பர்களும் மறைநூல்
6 அறிஞர்களும் யெருசலேமில் கூடினர். தலைமைக் குரு
அன்னாஸ், கைப்பாஸ். யோவான், அலெக்சாந்தரும்

---

* உபாக. 18:13, 19.

† ஆதி. 12 : 3.

தலைமைக் குருவின் குடும்பத்தைச் சார்ந்த அனைவரும்
7 அங்கே இருந்தனர். அப்போஸ்தலர்களை நடுவில் நிறுத்தி
''எந்த வல்லமையால், யார் பெயரால் இதை நீங்கள்
8 செய்தீர்கள்?'' என்று வினவினர். அப்பொழுது இரா
யப்பர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ''மக்கள்
9 தலைவர்களே, பெரியோர்களே, நோயாளிக்கு நாங்கள்
செய்த நன்மையைக் குறித்து விசாரிப்பீர்களாகில்
அவன் எவ்வாறு குணமானான் என்று எங்களைக் கேட்
பீர்களானால், அவன் குணம்பெற்று உங்கள்முன்
நிற்பது நசரேனுவாகிய இயேசுக் கிறிஸ்துவின் பெய
10 ரால்தான். இது உங்கள் எல்லோருக்கும் இஸ்ரா
யேல் மக்கள் அனைவருக்குமே தெரிந்திருக்கட்டும்.
இந்த இயேசுவைத்தான் நீங்கள் சிலுவையில் அறைந்
தீர்கள். கடவுளோ அவரை இறந்தோரிடமிருந்து
†11 உயிர்ப்பித்தார். 'கட்டுவோராகிய உங்களால் விலக்கப்
பட்டு மூலைக்கல்லாய் அமைந்த கல்' இவர்தாம். இவரா
12 லன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை; ஏனெனில்,
நாம் மீட்படைவதற்கு அவர் பெயரைத் தவிர இவ்
வுலகில் மனிதருக்கு வேறு பெயர் அருளப்படவில்லை''
என்றார்.

(ஈ) நூற்றுவர் தலைவன் இல்லத்தில் ஆற்றிய உரை :
"வாழ்வோரையும் இறந்தோரையும் நடுத்தீர்க்க கடவு
ளால் ஏற்படுத்தப்பட்டவர் இயேசுவே"

அப். பணி 10:34-48

34 அப்பொழுது இராயப்பர் பேசத் தொடங்கிச் சொன்ன
தாவது: ''கடவுள் மனிதர்களிடையே வேற்றுமை
பாராட்டுவதில்லை என்பதை இப்போது மெய்யாகவே
35 உணர்கிறேன். எக்குலத்தவனாயினும், இறைவனுக்கு
அஞ்சி அவருக்கு ஏற்புடையதைச் செய்பவனே அவருக்கு
உகந்தவன்.

† சங். 118 : 22.

*36 "அவர் தம் இஸ்ராயேல் மக்களுக்குத் தமது வார்த்
தையை விடுத்து அமைதி உண்டாயிற்று என்னும் நற்
செய்தியை இயேசுக்கிறிஸ்துவின் வழியாக அறிவித்தார்.
37 இவரே அனைவருக்கும் ஆண்டவர். அருளப்பர் அறி
வித்த ஞானஸ்நானத்திற்குப் பின் கலிலேயா தொடங்கி
யூதேயா நாடெங்கும் நிகழ்ந்தது என்னவென்று உங்
களுக்குத் தெரியும். நசரேத்தூர் இயேசுவைத்தான்
†38 குறிப்பிடுகிறேன். கடவுள் அவருக்கு பரிசுத்த ஆவியை
யும் வல்லமையையும் அளித்து அபிஷேகம் செய்தார்.
கடவுள் அவரோடு இருந்ததால், அலகை துன்புறுத்திய
அனைவரையும் குணமாக்கி, எங்கும் அவர் நன்மை
செய்துகொண்டே சென்றார். இதெல்லாம் உங்க
39 ளுக்குத் தெரிந்ததே. அவர் யூதேயா நாட்டிலும்
யெருசலேமிலும் செய்த அனைத்திற்கும் நாங்கள்
சாட்சிகள். அவரைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்று
40 போட்டனர். ஆனால், கடவுள் அவரை மூன்றும் நாள்
41 உயிர்ப்பித்தார். உயிர்த்தவரைக் கடவுள் அனைவருக்கும்
வெளிப்படுத்தாமல், தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட
சாட்சிகளுக்கே வெளிப்படுத்தினார். இறந்தோரிட
மிருந்து அவர் உயிர்த்தபின் அவரோடு உண்டும் குடித்
தும் வந்த நாங்களே சாட்சிகள். வாழ்வோரையும்
42 இறந்தோரையும் நடுத்தீர்க்கக் கடவுளால் ஏற்படுத்
தப்பட்டவர் அவரே என்பதை மக்களுக்கு அறிவிக்கவும்
சாட்சியம் கூறவும் கடவுள் எங்களுக்குப் பணித்தார்.
அவரைக் குறித்தே இறைவாக்கினர் அனைவரும்
43 சாட்சியம் பகர்கின்றனர் 'அவரை விசுவசிக்கும் அனை
வரும் அவருடைய பெயரால் பாவ மன்னிப்புப் பெறு
வர்' என்று அவர்கள் கூறுகின்றனர்."

---

* இசா. 52 : 7

† இசா. 61 : 1; மத். 3 : 16; அரு. 1 : 32

முதன் முறையாகப் புறவினத்தாருக்கு ஞானஸ்நானம்
44 இவ்வாறு இராயப்பர் பேசிக்கொண்டிருக்கையில் அவ
ருடைய வார்த்தைகளைக் கேட்ட அனைவர்மேலும்
45 பரிசுத்த ஆவி இறங்கினார். பரிசுத்த ஆவியாம் திருக்
கொடை புறவினத்தார் மேலும் பொழியப்படுவதைக்
கண்டு, இராயப்பருடன் வந்திருந்த யூதகுல விசுவாசிகள்
*46 அனைவரும் திகைத்து நின்றனர். ஏனெனில், அவர்கள்
47 பல மொழிகளில் பேசிக் கடவுளைப் போற்றுவதைக்
கேட்டனர், அப்பொழுது இராயப்பர், "நம்மைப்
போல் இவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றபின்
இவர்கள் நீரால் ஞானஸ்நானம் பெறுவதற்கு யார்
48 தடைசெய்ய முடியும்?" என்று இயேசுக்கிறிஸ்துவின்
பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்
கட்டளையிட்டார்.

(உ) அவர் எழுதிய திருமுகத்தில் கூறியவை:

(1) மனிதரின் மீட்புக்குக் கிறிஸ்து அளித்த விலை.

இராயப்பர் 1 : 13 - 21

†18 உங்கள் முன்னோரிடமிருந்து வழிவழியாய் வந்த பய
னற்ற நடத்தையினின்று உங்களை விடுதலை ஆக்கு
வதற்குக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்
களுக்குத் தெரியும். அது அழிவுறும் பொன்னும்
19 வெள்ளியுமன்று. மாசு மறுவற்ற செம்மறிபோன்ற
20 கிறிஸ்துவின் விலைமதிப்பில்லாத இரத்தமே. உலகம்
தோன்றுமுன்னே முன்னறியப் பெற்ற இவர் உங்களுக்
காக இந்த இறுதிக் காலத்தில் வெளிப்பட்டார்.
21 இறந்தோரினின்று அவரை உயிர்ப்பித்து மகிமைப்படுத்
திய கடவுள் மீது நீங்கள் விசுவாசம்கொள்வது அவ
ரால் தான். இதனால் உங்கள் விசுவாசமும் நம்பிக்கை
யும் கடவு மீது ஊன்றியிருக்கின்றன.

* பல மொழிகளில் பேசி: 2 : 4; 1 கொரி. 14.
† இசை. 52 : 3.

(2) கிறிஸ்து நமக்கு முன்மாதிரி தந்துள்ளார்.

இராயப்பர் 2:21—25

21 கிறிஸ்துவும் உங்களுக்காகத் துன்புற்றபோது, தம்
முடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றுமாறு முன்
மாதிரி தந்து சென்றார்.
†22 ''அவர் பாவம் எதுவும் செய்ததில்லை,
அவரது வாயினின்று வஞ்சகம் வெளிப்பட்டதில்லை.''
23 அவர்கள் பழித்துரைத்தபோது, அவர் எதிர்த்துப் பழிக்க
வில்லை. துன்புற்றபோது அச்சுறுத்தவில்லை. நீதியோடு
தீர்ப்பிடும் இறைவனிடம் தம் காரியத்தை ஒப்படைத்
‡24 தார். நாம் பாவங்களை அப்புறப்படுத்தி இறைவனுக்கு
ஏற்புடையவர்களாய் வாழ, கழுமரத்தின்மீது தம் உட
லில் நம் பாவங்களை அவரே சுமந்தார். அவருடைய
25 காயங்களால் நீங்கள் குணமானீர்கள். நீங்கள் ஆடு
களைப்போல் வழிதவறி அலைந்தீர்கள். ஆனால், இப்
போது உங்கள் ஆன்மாக்களின் ஆயரும் காவலருமான
வரிடம் திரும்பி வந்திருக்கிறீர்கள்.

(3) கிறிஸ்து அநீதருக்காக இறந்தார்.

இராயப்பர் 3:18—19, 22

18 கிறிஸ்துவைப் பாருங்கள்; நீதியுள்ள அவர், அநீதருக்
காக இறந்தார்; நம்மைக் கடவுளிடம் சேர்க்க, பாவங்
களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார்; ஊன்
†19 உடலில் சாவுக்குள்ளானார்; ஆனால், தேவ ஆவியில் உயிர்
பெற்றார். அந்த ஆவியைக்கொண்டே, அவர் சிறையி

† இசை. 53 : 4

‡ இசை. 33 ; 4-9.

† சிறையிலிருந்த ஆன்மாக்கள்: சிறை எனப்பட்டது கீழ் உலகமாகும். நோவா காலத்துப் பெருவெள்ளத்துக்கு முன் வாழ்ந்த மக்கள் இறுதித் தீர்வுக்குமுன். கீழ் உலகில் காத்திருப்பர். பாவத்திற்கு வருந்தி காத்திருப்பர் என்பது யூதர் நம்பிக்கை. அவ்வாறு காத்திருந்த மக்களை இயேசு இறந்ததும், விடுதலை செய்து விண்வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

லிருந்த ஆன்மாக்களிடம் சென்று, அவர்களுக்குத் தம்
செய்தியை அறிவித்தார்.

22 அவர் விண்ணகம் சென்றபின், அதிகாரம் தாங்கு
வோர், வலிமைமிக்கோர், தூதர் அனைவரையும் தமக்
குட்படுத்தி, கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்
கின்றார்.

## 3. புனித அருளப்பரின் அருளுரைகள்

(அ) கிறிஸ்து தன் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுத்த நல்ல ஆயன்.

அருளப்பர் நற்செய்தி நூல் 10:14—18

14,15 நல்ல ஆயன் நானே.
தந்தை என்னை அறிவது போலவும்,
நான் தந்தையை அறிவது போலவும்
என் ஆடுகளை நான் அறிவேன்.
அவையும் என்னை அறிகின்றன.
என் ஆடுகளுக்காக என் உயிரைக் கொடுக்கிறேன்.
16 இக்கிடையைச் சேராத
வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன.
அவற்றையும் நான் கூட்டிச் சேர்க்க வேண்டும்.
அவை என் குரலுக்குச் செவி கொடுக்கும்.
ஒரே ஆயனும் ஒரே மந்தையும் உண்டாகும்.
17 என் உயிரை மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி
நான் அதைக் கையளிக்கிறேன்.
ஆதலால் தந்தை என்னிடம் அன்புகூர்கிறார்.
18 எனதுயிரை என்னிடமிருந்து பறிப்பவன் எவனுமில்லை.
நானாகவே என் உயிரைக் கையளிக்கிறேன்.

(ஆ) கிறிஸ்து மனுக்குலத்தின் பரிகாரப் பலி.

அருளப்பர் 2:1—2

2 என் அன்புக் குழந்தைகளே,
நீங்கள் பாவம் செய்யாதிருக்க வேண்டுமென்றே
இதை உங்களுக்கு எழுதுகிறேன்.
ஆனால் ஒருவன் பாவஞ்செய்ய நேர்ந்தாலும்,
பரம தந்தையிடம் பரிந்துபேசுபவர் ஒருவர்
நமக்கு இருக்கிறார்.

அவரே இறைவனுக்கு ஏற்புடையவரான இயேசு
கிறிஸ்து.

*2 நம் பாவங்களைப்போக்கும் பரிகாரப் பலி அவரே.
நம் பாவங்களை மட்டுமன்று,
உலகனைத்தின் பாவங்களையும் போக்கும் பரிகாரப் பலி
அவரே.

(இ) கிறிஸ்து நம்மைப் பாவங்களிலிருந்து விடுவித்தார்.

திருவெளிப்பாடு 1:5—6

‡5 இயேசு நம்பிக்கைக்குரிய சாட்சி. இறந்தோரிலிருந்து
எழுந்தவருள் தலைப்பேறானவர். மண்ணுலக அரசர்
களுக்குத் தலைமையானவர். இவர் நமக்கு அன்புசெய்து
†6 தமது இரத்தத்தினால் நம்முடைய பாவங்களினின்று
நம்மை விடுவித்தார். மேலும் தம் தந்தையும் கடவுளு
மானவருக்கு ஊழியம் செய்ய நம்மை அரசகுல குருக்க
ளாக்கினார்.

---

* அப் பணி. 3:14; 1 அரு. 4:10; உரோ. 3:25; அரு. 4:42.

‡ இறந்தோரிலிருந்து: கொலோ. 1;18; 1 கொரிந். 15;20.

† அரச்குலக் குருக்கள்; 1 இரா. 2:9.

(ஈ) கிறிஸ்து பலியிடப்பட்ட செம்மறி.

திருவெளிப்பாடு 5:6, 9—10

‡8 அந்நான்கு உயிர்களும் மூப்பர்களும் சூழ, அரியணை நடு
வில் செம்மறி ஒன்று நிற்கக் கண்டேன். அது பலியிடப்
பட்டதுபோல் காணப்பட்டது.

9 அவர்கள் புதியதொரு பாடலைப் பாடினர்:
''சுருளை எடுக்கவும்
அதன் முத்திரைகளை உடைக்கவும்
தகுதியுள்ளவர் நீரே,
ஏனெனில், நீர் பலியாக்கப்பட்டு
உமது இரத்தத்தால்
எல்லாக் குலத்தையும் மொழியையும்
இனத்தையும் நாட்டையும் சார்ந்த மக்களைக்
கடவுளுக்காக மீட்டீர்.
*10 அவர்களை எம் கடவுளுக்கு அரசகுலக் குருக்களாக்கினீர்;
அவர்களும் மண்மீது அரசாள்வார்கள்.''

## 4- புனித சின்னப்பரின் அருளுரைகள்

(அ) பிசிதியா நாட்டு அந்தியோக்கியாவில் ஆற்றிய உரை:

அப். பணி. 13:21—39

21 பின்னர் அவர்கள் ஓர் அரசனை ஏற்படுத்துமாறு வேண்
டவே, கீஸ் என்பவனின் மகன் சவுலைக் கடவுள் அரச
னாக ஏற்படுத்தினார். அவன் பென்யமீன் குலத்தினன்;
†22 நாற்பது ஆண்டுகள் ஆண்டான். பிறகு கடவுள் அவனை
நீக்கிவிட்டு, தாவீதை அவர்களுக்கு அரசனாக ஏற்படுத்

---

‡ செம்மறி: மனிதரின் ஈடேத்திற்காகப் பலியான பாஸ்கா செம்மறி, கிறிஸ்து (யாத். 12;இசை. 53:7; அரு. 1:29,36 1இரா.1:19).

* 1 : 6; 1 இரா. 2 : 9.

† சங். 89:20.

தினார். அவரைப்பற்றிக் கடவுள், 'யெஸ்சேயின் மகன்
தாவீது என் மனத்துக்கு உகந்தவனாய் இருக்கக் கண்
டேன். நான் விரும்பியதெல்லாம் அவன் செய்வான்'
23 என்று நற்சான்று கூறினார். அவரது மரபிலிருந்தே
கடவுள் தாம் வாக்களித்தபடி இயேசுவை இஸ்ராயே
லருக்கு மீட்பராக வரச்செய்தார். இயேசுவின் வரு
24 கைக்குமுன், அருளப்பர் இஸ்ராயேல் மக்கள் அனைவருக்
கும், மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டும்
என்று அறிவித்துவந்தார்.

25 தம் பணி முடிவுறும் காலத்தில் அருளப்பர், 'நீங்கள்
என்னை யாரென நினைக்கிறீர்களோ, அவரல்ல நான்.
இதோ! ஒருவர் எனக்குப்பின் வருகின்றார். அவருடைய
மிதியடிகளை அவிழ்க்க நான் தகுதியற்றவன் என்றார்.

26 "சகோதரரே, ஆபிரகாம் வழி வந்தவர்களே, மற்றும்
கடவுளுக்கு அஞ்சுபவர்களே, நமக்கன்றோ இந்த மீட்
27 பைப்பற்றிய செய்தி அனுப்பப்பட்டது. யெருசலேம்
வாசிகளும், அவர்களுடைய தலைவர்களும் அம்மீட்பரை
அறிந்துகொள்ளவில்லை. ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்
படும் இறைவாக்கினரின் வார்த்தைகளையும் புரிந்து
கொள்ளவில்லை. ஆயினும் அவருக்குத் தீர்ப்பளித்த
28 போது அவ்வாக்கியங்களை நிறைவேற்றினர். சாவுக்குரிய
குற்றம் எதுவும் காணாதிருந்தும் அவரைத் தொலைக்கு
29 மாறு பிலாத்துவைக் கேட்டனர். அவரைக் குறித்து
எழுதப்பட்டவை அனைத்தும் நிறைவேறிய பின்னர் அவ
30 ரைக் கழுமரத்திலிருந்து இறக்கி, கல்லறையில் வைத்த
னர். கடவுளோ அவரை இறந்தோரிடமிருந்து எழுப்
31 பினார். அவரும் கலிலேயாவிலிருந்து தம்முடன் யெருச
லேம் வந்திருந்தவர்களுக்குப் பல நாட்கள் தோன்றி
னார். அவர்கள் இப்போது மக்கள்முன் அவருக்குச்
சாட்சியாக நிற்கின்றனர்.

*32,33 ''நாங்களும் உங்களுக்கு அறிவிக்கும் நற்செய்தியா
வது: இயேசுவைக் கடவுள் உயிர்ப்பித்து, நம் முன்னோ
ருக்கு அளித்த வாக்குறுதியை அவர்களுடைய மக்களா
கிய நமக்கென நிறைவேற்றினார். அதைப்பற்றியே
இரண்டாம் சங்கீதத்தில், 'நீர் எம் புதல்வர், இன்று
34 உம்மை நாம் ஈன்றெடுத்தோம்' என்று எழுதியுள்ளது.
மேலும், அவர் என்றுமே அழிவுக்கு ஆளாகாதபடி, இறந்
தோரிடமிருந்து அவரை எழுப்பினார் என்பதைப்பற்றித்
தான், 'தாவீதுக்குக் கூறிய தவறாத வாக்குறுதிகளை
‡35 உங்களுக்கென நிறைவேற்றுவேன்' என்று உரைத்த
போது கூறினார். எப்படியெனில் மற்றோரிடத்தில்,
36 'உம்முடைய பரிசுத்தர் அழிவுற விடமாட்டீர்' என்றுள்
ளது. ஆனால், தாவீது தம் தலைமுறையில் கடவுளின்
திட்டத்தை நிறைவேற்றியபின் இறந்தார். தம் முன்
37 னோர்களுடன் புதைக்கப்பட்டு அழிவுற்றார். ஆனால்
யாரைக் கடவுள் எழுப்பினாரோ, அவர் அழிவுறவில்லை.
38 ''எனவே, சகோதரரே, இவர் வழியாகவே பாவ மன்
னிப்பு உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இதைத்
தெரிந்துகொள்ளுங்கள், மோயீசன் சட்டத்தின் வழி
யாக உங்கள் குற்றங்கள் எவற்றினின்றும் நீங்கள்
39 விடுபட முடியவில்லை. ஆனால், விசுவசிக்கிற அனைவரும்
இவர்வழியாக அவற்றினின்று விடுபடுவர்.

(ஆ) கிறிஸ்துவின் கீழ்ப்படிதலால் அனைவரும் மீட்படை கின்றனர்.

உரோமர் 5:17—21

17 ஒரே ஒருவன் செய்த குற்றத்தாலே அந்த ஒருவன்
வழியாகச் சாவு ஆட்சி செலுத்தினதென்றால், அருட்

---

* சங். 2:7,

‡ சங். 16:9.

பெருக்கையும், இறைவனுக்கு ஏற்புடையவராகும் வரத்
தையும் அடைந்துகொண்டவர்கள் இயேசு கிறிஸ்து
என்னும் ஓரே ஒருவர் வழியாக வாழ்வுபெற்று ஆட்சி
செலுத்துவார்கள் என மிக உறுதியாய் நம்பலாம்
18 அன்றோ? ஆகவே, ஒரே ஒருவரின் குற்றம் எல்லா மனி
தர்க்கும் தண்டனைத் தீர்ப்பாய் முடிந்ததுபோல், ஒரே
ஒருவரின் ஏற்புடைய செயல் எல்லா மனிதர்க்கும் வாழ்
19 வளிக்கும் விடுதலைத் தீர்ப்பாய் மலர்ந்தது. ஏனெனில்,
ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் அனைவரும் பாவி
களானதுபோல், ஒருவரின் கீழ்ப்படிதலால் அனைவரும்
20 இறைவனுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள். குற்றம்
செய்ய வாய்ப்புப் பெருகும்படி சட்டம் இடையில்
நுழைந்தது; ஆனால் பாவம் பெருகிய இடத்தில் அருள்
அணைகடந்து பெருக்கெடுத்தது. இவ்வாறு சாவின்
21 வழியாய்ப் பாவம் ஆட்சி செலுத்தியதுபோல், நம்
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாய், முடி
வில்லா வாழ்வுக்காக இறையருள் மனிதரை இறை
வனுக்கு ஏற்புடையராக்கி, ஆட்சிசெய்கிறது.

(இ) கிறிஸ்து மரித்த மூன்றும் நாள் உயிர்த்தார்.

1 கொரிந்தியர் 15 : 3 - 8

3 நான் பெற்றுக்கொண்டதும், முதன்மையானதாக
உங்களுக்குக் கையளித்ததும் எதுவெனில், மறைநூலில்
உள்ளபடி, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக
4 இறந்தார். அடக்கம் செய்யப்பட்டு. மறை நூலில்
5 உள்ளபடியே மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தார்.
6 கேபாவுக்கும் பின்னர் பன்னிருவர்க்கும் தோன்றினர்.
பின்பு ஒரே சமயத்தில் ஐந்நூற்கு மேற்பட்ட சகோத
ரர்களுக்குத் தோன்றினர். அவர்களுள் பலர் இன்
னும் உயிரோடு இருக்கின்றனர்; ஒரு சிலர் இறந்து
7 போயினர். பின்னர் யாகப்பருக்கும், அடுத்து அப்போஸ்

8 தலர் அனைவருக்கும் தோன்றினார். எல்லார்க்கும்
கடைசியாக காலந்தப்பிய பிறவி போன்ற எனக்கும்
தோன்றினார்.

(ஈ) கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் பாவ மன்னிப்பும் இல்லை.

1 கொரிந்தியர் 15 : 12- 17

12 கிறிஸ்து இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என
அறிவிக்கப்பட்டிருக்க, இறந்தோர் உயிர்ப்பதில்லை என
13 உங்களுள் சிலர் சொல்வதெப்படி? இறந்தோர் உயிர்த்
தெழுதல் இல்லையென்றால், கிறிஸ்துவும் உயிர்த்தெழ
14 வில்லை. கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் எங்கள்
தூதுரை பொருளற்றதே, உங்கள் விசுவாசமும் பொரு
15 ளற்றதே. நாங்களும் கடவுளின் சார்பில் பொய்ச்
சாட்சி சொல்பவர் ஆவோம். ஏனெனில், இறந்தோர்
உயிர்த்தெழுவதில்லை என்பது உண்மையானால், கடவுள்
உயிர்த்தெழச் செய்யாத கிறிஸ்துவை உயிர்த்தெழச்
செய்தார் என்று நாங்கள் சொன்னபோது கடவுள்
பெயரால் பொய்ச்சாட்சி சொன்னவர்கள் ஆனோம்.
16 ஏனெனில், இறந்தவர்கள் உயிர்த்தெழுவதில்லையென்
17 றால் கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை. கிறிஸ்து உயிர்த்
தெழவில்லை என்றாலோ உங்கள் விசுவாசம் வீணானதே.
நீங்கள் இன்னும் பாவ நிலையிலேயே இருக்கிறீர்கள்.

(உ) கிறிஸ்து சாபமாகி நம்மை மீட்டுக்கொண்டார்.

கலாத்தியர் 3 : 13 - 14

*13 'மரத்தில் தொங்குபவன் எவனும் சபிக்கப்பட்டவனே'
என்று எழுதியுள்ளவாறு, நமக்காக கிறிஸ்து சாபமாகி
நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்

---

* கிறிஸ்து மனித உரு எடுத்தபோது, மனிதனின் துயரங்களை எல்லாம் தம்மீது ஏற்றுக்கொண்டார். பாவியான மனிதன்மீது விழுந்த சாபத்துக்கும் தம்மைப் பொறுப்பாளி ஆக்கிக்கொண்டார். உரோ. 8 : 3; 2 கொரிந். 5 : 21; கொலோ. 2 : 14 காண்,

14 டார். ஆபிரகாமுக்குக் கிடைத்த ஆசி இயேசு கிறிஸ்து
வின் வழியாகப் புறவினத்தார்க்குக் கிடைக்கவும், இவ்
வாறு வாக்களிக்கப்பட்ட ஆவியானவரை நாம் விசு
வாசத்தின் வழியாய்ப் பெற்றுக்கொள்ளவும் இப்படிச்
செய்தார்.

(ஊ) கடவுள் கிறிஸ்துவோடு நாம் உயிர்பெறச் செய்தார்.

எபேசியர் 2 : 4 - 6

4,5 கடவுள் இரக்கப் பெருக்கமுள்ளவர். அன்புமிக்கவர்.
நம் குற்றங்களால் நாம் இறந்தவர்களாய் இருந்த
போதிலும் அவர் நம்மீதுகொண்ட பேரன்பினால்
கிறிஸ்துவோடு நாம் உயிர்பெறச் செய்தார். நீங்கள்
*6 மீட்புப் பெற்றிருப்பது அருளாலேயே. கிறிஸ்து இயேசு
வுக்குள் நாம் அவரோடு உயிர்த்தெழவும், விண்ணுல
கில் அவரோடு அமரவும் செய்தார்.

(எ) கிறிஸ்து நம் மீட்புக்காக தம்மைத் தாழ்த்தினார்.

பிலிப்பியர் 2 : 5 - 11

5 கிறிஸ்து இயேசுவில் இருந்த மனநிலையே உங்களிலும்
இருப்பதாக.
*6 கடவுள் தன்மையில் விளங்கிய அவர்
கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை
விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியதொன்
றாகக் கருதவில்லை.

---

* புது வாழ்வு நமக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது (கொலோ. 2 : 12) : அதாவது, இயேசுவின் உயிர்ப்பில், மகிமையில் பங்குபெற்று, விண்ணகக் குடிமக்களாய் விளங்குகின்றோம் ( கொலோ. 3 : 1 - 4 ).

* கிறிஸ்துவுக்குத் திருப்பாடல் : இப்பாடலைச் சின்னப்பரே எழுதியிருக்கலாம் அல்லது முதற் கிறிஸ்தவர்களின் வழிபாட்டு பாடல்களிலிருந்து எடுத்திருக்கலாம். கிறிஸ்து இயற்றிய ஈடேற்ற அலுவலின் பல்வேறு கட்டங்களை இப்பாடல் விரித்து வைக்கின்றது:

(அ) அவரது தெய்வீக முன்வாழ்வு (6) : எபி. 1 : 3; அரு. 1 : 1: கொலோ. 1 : 15...

(ஆ) அவரது மனித அவதாரம் : 2 கொரிந். 8:9; கலாதி. 4 : 4; உரோ. 8 : 3.

(இ) அவரது சிலுவை : உரோ. 5 : 19; எபி. 5 : 8; 12 : 2.

(ஈ) அவரது மகிமை : எபி. 1 : 20 - 23; 4 : 10; உரோ. 1 : 4; 10:9: 1 கோரிந். 12 : 3.

*7 ஆனால், தம்மையே வெறுமையாக்கி,
அடிமையின் தன்மை பூண்டு
மனிதருக்கு ஒப்பானார்.
மனித உருவில் தோன்றி,
8 தம்மைத் தாழ்த்திச்
சாவை ஏற்கும் அளவுக்கு,
அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக்
கீழ்ப்படிபவரானார்.
†9 ஆதலால்தான் கடவுள் அவரை
எல்லாருக்கும் மேலாய் உயர்த்தி
எல்லாருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.
10 ஆகவே இயேசுவின் பெயருக்கு
விண்ணவர் மண்ணவர், கீழுலகோர்
அனைவரும் மண்டியிட,
‡11 'இயேசு கிறிஸ்து ஆண்டவர்' என்று
தந்தையாகிய கடவுளுடைய மகிமைக்காக
எல்லா நாவுமே அறிக்கையிடும்.

(ஏ) கிறிஸ்துவின் மேன்மை

கொலோசியர் 1 : 13-20

13 அவரே இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுவித்து,
14 தம் அன்பார்ந்த மகனுடைய அரசில் கொண்டுவந்து
சேர்த்தார். இம்மகனால்தான் நமக்கு மீட்பு உண்டு,
பாவ மன்னிப்பு உண்டு.

---

* 'தம்மை வெறுமையாக்கி' : தமக்கு உரிய தெய்வீக மகிமையைக் களைத்தார் : மனிதனுடைய பரிதாப நிலையில். பாவந்தவிர மற்றெல்லா வற்றிலும் பங்கெடுத்தார். (கலாத், 3 : 13).

† பெயர்: கடவுளுக்கு மட்டுமே உரியதாகக் காப்பாற்றப்பட்டபெயர்.

‡ 'இயேசு கிறிஸ்து ஆண்டவர்' : இத்தொடர் வழியாகத்தான் முதற் கிறிஸ்தவர் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தினர் (அப். பணி, 2:36; உரோ. 10 : 9; 1 கொரிந். 12:3).

*15 அவர் கட்புலனுகாக் கடவுளின் சாயல்,
படைப்புக் கெல்லாம் தலைப்பேறுனவர்;
16 ஏனெனில், அவரில் அனைத்தும் உண்டாயிற்று
விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை
கட்புலனுவன, கட்புலனுகாதன
அரியணை சூழ்வோர், ஆட்சி புரிவோர்,
தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர்
ஆகிய வானதூதர் அனைவரும்
உண்டானது அவரிலேதான்.
அவராலே அவருக்காகவே
அனைத்தும் ஆயின.
17 அனைத்துக்கும் முன்பே உள்ளவர் அவர்;
அனைத்தும் அவரில் இணைந்து நிலைக்கும்.
*18 திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் அவரே.
ஆதியானவரும் அவரே.
அனைத்திலும் முதன்மை பெறும்படி
இறந்தோரினின்று பிறந்த தலைப்பேறு அவரே.
†19 முழுநிறைவும் அவரில் குடிகொள்ள வேண்டுமென்று
இறைவன் திருவுளம் கொண்டார்.
20 சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தால்
சமாதானம் உண்டாக்கி
விண்ணிலும் மண்ணிலும் உள்ள யாவற்றையும்
அவர் வழியாகத் தம்மோடு ஒப்புரவாக்க விரும்பினுர்.

---

* சிறிஸ்துவின் உயர்வை விரிந்துரைக்கும் கவிதை. சின்ன ஆசியாவில் சிலர் கிறிஸ்துவைவிட வானதூதரே மேலானவர் என்று தவருக எண்ணி வந்தனர். கிறிஸ்துவின் உயர்வு இருவிதத்தில் விளங்கும்.

(அ) அவர் படைப்பின் தலைவர் எனும முறையில் அவர் வழியாய் வருக்காசு அனைத்நும் படைக்கப்கட்டது) (15-17 ஆதி. 1 : 1, 2; ஞாஞ. 7 : 26; அரு. 1 : 38, எபி. 1 : 3, 6),

(ஆ) அலர் புதுப்படைப்பின் தலைவர் என்னும் முறையில் சாவைக் கடந்து புதுவாழ்வினை அவர் வழியாகவே எல்லாம் பெற்றது (18-20) 1 கொரிந்; 15 : 20; திருவெளிப். 1:5; எபே. 1:10:2; 11, 16.

* உடலின் தலை : எபே 1 : 23.

† முழு நிறைவு: எபே. 1 : 23,

(ஐ) மனிதரைக் கடவுளுடன் இணைப்பவர் கிறிஸ்துவே

1 திமோத்தேயு 2:5—6

†5 கடவுள் ஒருவரே. கடவுளையும் மனிதரையும் இணைப்ப
வரும் ஒருவரே. இவர் மனிதரான இயேசு கிறிஸ்துவே.
6 இவர் அனைவரின் மீட்புக்கு ஈடாகத் தம்மையே
கையளித்தார்.

(ஒ) கடவுள் கிறிஸ்து வழியாக பரிசுத்த ஆவியை நம்மீது பொழிந்தார்.

தீத்து 3:4—7

4 நம் மீட்பராகிய கடவுளின் பரிவும் நேயமும் பிரசன்ன
†5,‡6 மானபோது, நீதிநெறியைப் பின்பற்றி நாமே செய்த
நற்செயல்களை முன்னிட்டன்று, தம் இரக்கதை முன்
னிட்டே புதுப்பிறப்பைத்தரும் முழுக்கினாலும், புத்துயிர்
அளிக்கும் பரிசுத்த ஆவியாலும் இறைவன் நம்மை மீட்
டார். இந்த ஆவியை அவர் நம் மீட்பராகிய இயேசு
7 கிறிஸ்துவின் வழியாக நம்மீது நிரம்பப் பொழிந்தார்.
கிறிஸ்துவின் அருளினால் நாம் இறைவனுக்கு ஏற்புடைய
வர்களாகி நமக்குள்ள நம்பிக்கையால் முடிவில்லா வாழ்
வுக்கு உரிமையாளராவதற்கே இவ்வாறு செய்தார்.

(ஓ) கிறிஸ்து துன்பத்தை அறிந்த தலைமைக் குரு.

எபிரேயர் 5:5—10

†5 அவ்வாறே கிறிஸ்துவும் தலைமைக் குருவாகும் மகிமைக்
குத் தம்மையே உயர்த்திக்கொள்ளவில்லை.

'நீரே என் மகன்
இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன்"

---

† எபி. 8:6.

† முழுக்கினாலும்: நீரிலும் பரிசுத்த ஆவியிலும் மனிதன் புதுப்பிறப்புக்கொள்ளும் ஞானஸ்நானம் (அரு. 3:3, 4; எபே. 5:26).

‡ உரோ. 5:5.

† சங். 2:7.

*6 என்று கூறியவரே அந்த மகிமையை அளித்தார்.
அங்ஙனமே மற்றோரிடத்தில்,

''மெல்கிசேதேக்கின் முறைப்படி
என்றென்றும் குருவாயிருக்கிறீர்''

†7 எனவும் கூறுகிறார். அவர் இம்மையில் வாழ்ந்த காலத்
தில், தம்மைச் சாவிலிருந்து மீட்க வல்லவரிடம் பலத்த
குரலெழுப்பி, கண்ணீர் சிந்தி, வேண்டுதல்களையும் மன்
றாட்டுக்களையும் ஒப்புக்கொடுத்தார். அவருக்கிருந்த பய
‡8 பக்தியை முன்னிட்டு இறைவன் அவருக்குச் செவிசாய்த்
தார். அவர் இறைமகனாய் இருந்தும், பாடுகளினால்
§9 கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்தார். இவ்வாறு,
நிறைவுள்ளவராகி, தமக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அனை
10 வருக்கும் முடிவில்லா மீட்பின் காரணரானார். 'மெல்கி
சேதேக் முறைமைப்படி தலைமைக் குரு'எனக் கடவு
ளால் பெயரிடப்பட்டவர் இவரே.

(ஔ) இறிஸ்து ஒப்புக்கொடுத்த பலியின் ஆற்றல்.
எபிரேயர் 10:4—14

4 காளை மாடுகள், ஆட்டுக் கடாக்கள் இவற்றின் இரத்தப்
†5 பாவங்களைப் போக்க முடியாது. அதனால்தான் உல
கிற்கு வரும்போது கிறிஸ்து:

''பலியோ, காணிக்கையோ, நீர் விரும்பவில்லை.
ஆனால், எனக்கு ஓர் உடலை அமைத்தளித்தீர்.

---

* சங். 109:4.

† மத். 26:36—39.

இயேசுவின் இறப்பு வழியாய் விண்ணகத் தந்தை அவருக்கு மகிமை யளித்தபோது இறைவன் அவருக்குச் செவி சாய்த்தார் (அரு. 13:31; பிலிப். 2:9—11).

‡ பிலிப். 2:8.

§ 4:12.

† சங். 39:1—9.

6 தகனப் பலிகளோ, பாவப் பரிகாரப் பலிகளோ
உமக்கு உகந்தவையாய் இல்லை.
7 அப்பொழுது நான் கூறியது: இதோ! இறைவா,
உம் திருவுளத்தை நிறைவேற்ற வந்துவிட்டேன்,
என்னைக் குறித்தே மறைநூற்சுருளில் எழுதியுள்ளது'
என்கிறார்.
8 "திருச்சட்டப்படி ஒப்புக்கொடுக்கப்பட்டபோதிலும்,
பலிகள், காணிக்கைகள், தகனப் பலிகள், பாவப் பரி
காரப் பலிகள் இவற்றையெல்லாம் நீர் விரும்பவில்லை.
இவை உமக்கு உகந்தவையாய் இல்லை" என்று முதலில்
கூறுகிறார்.
9 பின்பு, 'இதோ, உமது திருவுளத்தை நிறைவேற்ற
வந்துவிட்டேன்' என்கிறார். பின்னையதை நிலைக்கச்
10 செய்ய முன்னையதை எடுத்துவிடுகிறார். இந்தத் திருவு
ளத்தால்தான், ஒரே முறையில் எக்காலத்திற்குமே ஒப்
புக்கொடுக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவுடைய உடலின்
பலியால் நாம் பரிசுத்தராக்கப்பட்டோம்.

### புதிய பலியின் பயன்


11 ஒவ்வொரு குருவும் நாடோறும் இறைபணி ஆற்றுகை
யில், கையில் திரும்பத் திரும்ப அதே பலிகளை ஒப்புக்
கொடுத்து வருகிறார். அவையோ பாவங்களை ஒரு
12 போதும் போக்கிவிட இயலாதவை. ஆனால், இவர்
என்றென்றைக்கும் பயன்தரும் ஒரு பலியைப் பாவங்
13† களுக்காக ஒப்புக்கொடுத்து, "கடவுளின் வலப்புறத்தில்
அமர்ந்துள்ளார்". அங்கே, "தம் பகைவர் தமக்குக்
14 கால்மணையாக்கப்படும்வரை" காத்திருக்கிறார். தாம்
பரிசுத்தராக்கியவர்களை ஒரே பலியினால் என்றென்
றைக்கும் நிறைவுள்ளவர்களாக்கினார்.

† சங். 109, 1-

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
யாழ்ப்பாணம் 1988

# பாலஸ்தீன்

[புதிய ஏற்பாட்டின் காலம்]



வெளியீடு :

யாழ். கத்தோலிக்க இலக்கியக் கழகம்

---

தானியேல் — செபமாலை

ஞாபக வெளியீடு — இல. 3

---

விலை : ரூபா 15/=